

ர்வாள்
பொங்கல் மலர்



*Stands Supreme*

மலைகளில் சிறந்தது இமயம்

சேலைகளில் சிறந்தது "சங்குமார்க்" சாயம்

எங்கள் பீதாம்பர மாளிகையில் மனதிற்கு
இசைந்த நவீன பட்டு & நூல் ஜவுளி ரகங்களும்
சாயங்களும் கிடைக்கும்

3-4, அம்மன் சன்னதி,

மதுரை.

THE SEAL [PALAYAKAT COY. LTD. MADRAS. MADRAS.] OF QUALITY


**THE MADRAS PALAYAKAT CO., LTD.**

"SANGU NILAYAM"

ARMENIAN ST., G.T. MADRAS.

Telegrams: "PALAYKATCO" BRANCHES: MADURA, COLOMBO & KANDY. Telephone: 3540

FAS-205


Ganesan

பதிவு எண் M. 4912

# பொங்கலோ பொங்கல்!

[பாரதிதாசன்]

★

இனிமைப் பசுப்பாலில் யாம்பொங்கும் பொங்கல்
தனிமைப் புதுப்பரிதி தங்கத்து நாவுண்ண
யாமும்எம் இன்ப மகளிரொடும் மக்களொடும்
தீமை புறங்காட்டச் செழுந்தமிழில் அன்பிட்டுப்
பாடி மகிழ்ந்து பழம்பிசைந்த ருந்துகின்றோம்!
ஆடி மகிழ்ந்ததெம் அன்பின் தமிழகந்தான்!
இந்நாள்எம் உள்ளத் தெழுமோர் புதுப்பரிதி
பொன்னாங் கருத்துக்கள் தென்னாட்டு வான்தழுவும்;
எம்மைப் புதுவாழ்வில் ஏற்றும்! தமிழ்வாழ்க
செம்மை நெறி வாழி செழித்து!

★

உள்ளே !


| | பக்கம் |
|---|---|
| பொங்கலோ பொங்கல் ! *பாரதிதாசன்* | 5 |
| பொங்குக இன்பம் ! | 6 |
| மக்கள் ஆட்சி *பெரியார் ஈ. வெ. ரா.* | 7 |
| புதிய சகாப்தம் பிறந்தது ! | 10 |
| தங்கத்தின் காதலன் *அறிஞர் அண்ணாதுரை* | 13 |
| பொங்கிடுமோ பொங்கல்? *தமிழ் ஒளி* | 17 |
| பரமபதம், அரசியலில் ! *மு. வரதராசனார் எம்.ஓ.எல்.* | 18 |
| நடைமுழுக்கு *முடியரசன்* | 21 |
| அறஞ்செய விரும்பு *முருகு சுப்பிரமணியன்* | 27 |
| பேயும் பெண்ணும் *வ. பா. தாமரைக்கண்ணி* | 29 |
| கேளுங்கள், சொல்கிறார்கள்! *டி. கே. சீனிவாசன்* | 32 |
| தென்றல் விடு தூது *குயிலன்* | 35 |
| உலர்ந்த சருகு *இராதாமணாளன்* | 36 |
| பழமையிலே, புது நினைவு! *மா. இளஞ்செழியன்* | 41 |
| என் வீடு எனக்கே ! *ச. குருசாமி பி. ஏ.,* | 47 |
| தமிழர் திருநாள் *தாரா நாச்சியப்பன்* | 50 |
| பழைய நினைவு *விசு. திருநாவுக்கரசு* | 53 |
| பெண்களால் முடியுமா ? *டி. எஸ். குஞ்சிதம்* | 55 |


# போர்வாள்

14—1—48

## பொங்குக இன்பம்!

இந் நாள், பொங்கற் புதுநாள். தமிழர் இல்லந்தோ இசையும் இன்பமும் தவழ்ந்து தவழ்ந்து விளையாடும் த திருநாள். தமிழகத்தின் எம் மருங்கிலும், தமிழ் இல்லம் வொன்றிலும், தமிழ் இனத்தார் அனைவர் உள்ளத்திலும் பு புதியதோர் எழுச்சியும் மலர்ச்சியும் தங்கள் நலம் காட்டிக் கா தமிழரை, களிப்புக் கடலில் குதித்தாடச் செய்யும் நன்னாள். நாள் வாழ்க !

இன்று, தமிழர்க்குப் புத்தாண்டு பிறக்கிறது. புத்தா மட்டுமா, புது ஆடை, புதுப் பானை, புது அரிசி, புதுப் பண் புது மஞ்சள், புதுக் கரும்பு எல்லாமும் தமிழர் இல்லத் நோக்கி இன்ப புரிப் பயணம் செய்யும் நாளிது. பழையன க லும் புதியன புகுதலும் நாட்டின் நல்வாழ்விற்கு எவ்வளவு றியமையாதன என்பதை எடுத்துக்காட்டும் மறுமலர்ச்சி விழா இது. பரவுக இதன் கருத்து!

பொங்கல் தமிழ்நாட்டு மே தினம் ; உழைப்பாளர்க்கே வுண்டு என்பதின் கருத்துவிளக்கம். அதுமட்டுமல்ல ஆரிய வா வீசாத ஒரே ஒரு திருநாள், தமிழர்க்கு இது. எனவே பொங்கல் தமிழர்க்கெல்லாம் இவ்வளவு தித்திக்கிறது.

அத் தித்திப்பில் தனக்கும் பங்குண்டு என்று காட்டத் "போர்வாள்", அறிவெனும் மட்கலத்தில் அன்பெனும் பெய்து, சிறந்த எண்ணங்கள் எனும் புத்தரிசியிட்டுச் ச தெடுக்கப்பட்ட சுவையும் மணமும் கமழும் கருத்தோ பொங்கலை இன்று பரிமாறுகிறது தமிழர்க்கு. குறை பல உ இப் பொங்கலில், தெரிகிறது நமக்கு. ஆனால் ஆர்வத் படைப்பு இதுவென்று கண்டு தமிழர் பொறுப்பர் என்ற வுடன் வருகிறது மலர் தமிழரை நோக்கி—தமிழர்க்கு இ ஊட்ட ; அவர்கள் சிந்தையில் தேன் பாய்ச்ச. வாழ்க தமிழ் வாழிய திராவிடம்!

பொங்குக இன்பம்! பொங்குக அறிவு!
பொங்குக முத்தமிழ்! பொங்குக! பொங்குக!

## முக்கிய அறிவிப்பு

பொங்கல் மலர் இவ்வாரம் வெளியாவதை னிட்டு, 14—1—48-ல் வெளிவரவேண்டிய போர் இதழ் வெளிவராது. 24—1—48 முதல் வழக்கம் வெளிவரும்.

# மக்கள் ஆட்சி

—பெரியார் ஈ.வெ.ரா

மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு காள்ள முடியுமா?

எங்காவது இந்த வழக்கம் இருக்கிறதா?

இருப்பதாய் இருந்தாலும் அது நம் நாட்ற்கு முடியுமா?

அல்லது, இந்தப் பெயரால் ஒரு கூட்டம், ட்சியைத் தங்கள் கைக்குக் கொண்டுவந்து வனடையும் தந்திரத்திற்குத்தான் இந்தப் பயராக நாடு முழுவதும் வழங்குகிறதா?

நாம் நடுநிலையில் இருந்து, எத்தகைய ழக்க வழக்கம், தயவு தாட்சண்ணியம், ருப்பு வெறுப்பும் இன்றி, எத்தகைய ட்டுப்பாடுகளுக்கும் ஆளாகாமல், நிர்வாண ய் இருந்து (with open mind) நிர் ணக் கண்களால் (with open eyes) வற்றின் உண்மைகளை அறியத் தொடங் னால், இன்று, நமறிந்த அளவில், ரஷ்யா வத் தவிர்த்து வேறு எந்த நாட்டிலும் மக் ர் ஆட்சி இல்லவே இல்லை என்பதை றுதியாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ரஷ்யாவில் மக்கள் ஆட்சி இருக்கிறது ன்று சொல்வதுகூட ஒரு அளவுக்குத்தான் ண்மையே தவிர முற்றிலும் அல்ல.

ரஷ்ய ஆட்சியிலும், முதலாளிகள், செல்வர் ர், மத ஆதிக்கக் கருத்துக் கொண்டவர்கள் ட்சி இல்லை என்று தான் சொல்லலாமே ிர எல்லா மக்களுடையவும் ஆட்சி என்ப க வரையறுத்துச் சொல்லமுடியாது.

பொதுவாகவே மனித இயற்கையானது, ளப்படும் மக்களே ஆளுபவர்களாக இருப் து என்பதற்கு ஏற்றதல்ல என்று தான் சால்லவேண்டும் குற்றமாகக் கருதப்பட்டா ம், தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், னிதன ஒரு சுயநல உணர்ச்சி உடைய வன். ஆட்சி புரிவது என்பது நல்ல ஆட்சி க விளங்கவேண்டுமானால், அந்த ஆட்சி, நல வாசனையே இல்லாதவர்களால் ஆளப் வதாகத்தான் இருக்க வேண்டும். அப் படிப்பட்ட மக்களாக எல்லா மக்களும் இருக்கமாட்டார்கள். ஏதோ சில மக்கள் தான் அப்படி இருப்பார்கள். அதாவது தன் னலம் அற்றவர்களாய், பொதுநல உணர்ச் சியையே தங்கள் வாழ்க்கையின் ஜீவனாகக் கொண்டவர்களாய் இருக்க முடியும். ஆகவே ஆள்பவர்கள், ஒரு நாட்டில் சிலராய்த்தான் இருக்கமுடியும். மற்றவர்கள் ஆளப்படத் தான் தகுதி உள்ளவர்களாக இருக்கமுடியும். அந்த மற்ற பெரும் பான்மை மக்களுக்குப் பொதுநல உணர்ச்சியைக் காட்டிலும் தன்னல எண்ணமே அதிகமாக இருக்கும். ஆகவே அவர்கள் எப்படி மற்றவர்களை ஆளமுடியும்?

ஆட்சி செய்ய ஆட்சித் தலைவர்களைத் தேர்ந் தெடுக்கும் உரிமை உடையவர்களாக மக்கள் இருப்பதை, ஒருசமயம், ஜனநாயகம்—மக்கள் ஆட்சி—மக்களுக்காக மக்களால் நடத்தப் படும் மக்கள் சர்க்கார் என்பதாக யாராவது சொல்லக்கூடும். ஆனால் அதுவும்—அதாவது, மக்களுக்கு இருப்பதாகச் சொல்லப்படும் "ஜனநாயக" உரிமையாகிய ஓட்டுரிமையும், அந்த மக்களின் நன்மைக்கும் இயற்கைக்கும் ஏற்றவண்ணம் அமையாமல் ஒருவித நிர்ப்பந் தத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஏற்றதாகத் தான் இருக்கும்.

நாட்டிலே, செல்வர்—வறியர், எஜமான்—அடிமை, மேல் ஜாதி—கீழ்ஜாதி என்பதான அந்தஸ்து பேதங்கள், இந்து—கிறிஸ்து—இஸ்லாம் முதலிய மத பேதங்கள் இருக்கும் போதும், இவர்கள் யாவரும் ஒரு சரிசம மான எண்ணிக்கையாக இல்லாமல், சிலர் கொஞ்சமாகவும், சிலர் அதிகமாகவும் இருக் கும்போதும், சிலர் படித்தவர்களாகவும் பலர் படிக்காதவர்களாகவும் இருக்கும்போதும் எப்படிப்பட்ட ஆட்சி வேண்டும், எப்படிப் பட்ட சமுதாய அமைப்பு வேண்டும் என்ப தும்கூட தெரியாத—தெரிந்துகொள்ள முடி யாத மக்களே உலகில் பெருவாரியாக இருக்

கும் போதும், ஜனநாயகம் என்பது எப்படிச் சரியான விதமாக அமையமுடியும்?

எனவே, ஜனநாயகம் என்கின்ற பெயரைக் கொண்டு ஒரு சுயநல சூழ்ச்சிக் கும்பல், கூட்டாளிகளாகச் சேர்ந்து, பல அற்ப சுயநலக் காரர்களை "கூலி"களாக அமர்த்தி, பித்தலாட்டப் பிரசாரம் செய்வதன் மூலம் பாமர மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றி, மக்களை அடக்கி வைத்து, நல்ல பிரசார பக்க பலத்தையும் குண்டர்களின் காலித்தன பலத்தையும் ஆதாரமாய் பாதுகாப்பாய் வைத்துக் கொண்டு கொள்ளை வாழ்க்கை நடத்த முடியுமே தவிர வேறில்லை.

இதைத்தான் நம் நாடு போன்றவைகளில் ஜனநாயகம் என்று சொல்லப்படுகிறதே தவிர, உண்மையாகவே நம் நாட்டு மக்களே நம் நாட்டை ஆளுவது என்பது (இன்றைய நிலையில்) சிறிதும் முடியாத காரியமே ஆகும்.

உதாரணமாக, இன்றைய நம் நாட்டு ஆட்சி ஜனநாயக ஆட்சி என்று சொல்லப்படுகிறது. இது எந்த விதத்தில் இந்த நாட்டுப் பொது மக்களுக்குப் பொறுப்பான—உரிமையான—சம்மதமான ஆட்சி என்று சொல்ல முடியும்?

ஜனங்கள் என்பதே இந்த நாட்டில்வாழும் நூற்றுக்கு நூறு மக்களையும் கொண்டதாக இந்த "ஜனநாயக ஆட்சி"யில் மதிக்கப்படுவதே இல்லை. ஏழை, கூலி, பாட்டாளி மக்களுக்கும் ஆட்சிக்கும் சம்பந்தமே இல்லை.

இந்த ஏழை, கூலி, பாட்டாளி மக்கள் மொத்த எண்ணிக்கையில் குறைந்தது நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் இருப்பார்கள். ஆனால் ஆட்சியாளர்களைத் தெரிந்தெடுக்கும் பிரதிநிதித்துவ (ஓட்) உரிமையே நூற்றுக்கும் பன்னிரண்டரை பேருக்குத்தான் இருக்கிறது. இதில், மேற்கண்ட 100-க்கு 75 மக்களான ஏழை, கூலி, பாட்டாளி மக்களுக்குச் சுத்தமாக ஓட்டே கிடையாது.

தொழிலாளிக்கு ஓட் இருக்கிறது என்று சிலர் சொல்லலாம். இந்த வாதமானது, இயந்திரசாலையில் தொழில்செய்கிற ஒருவித தொழிலாளிக்கு—அதுவும் கவலையற்ற தொழிலாளிகளும், மேல் நோக்கு உடைய தொழிலாளிகளும், ஒரு வித ஒப்பந்த (Contract) வாழ்வுடைய தொழிலாளிகளும ஆகிய ஒரு சிறு கூட்டத்திற்குத்தான் ஒரு சிறு அளவுக்காவது பொருந்தும்.

அதுவும்கூட, மிகமிகச் சிறிய எண்ணிக்கை அளவுக்கு—மொத்தம் 215 ஸ்தானங்கள் என்றால் அதில் 5 அல்லது 6 ஸ்தானங்கள் மாத்திரம் உள்ள ஒரு பிரதிநிதித்துவ உரிமை இருக்கிறது என்ற அளவுக்குத்தான் சரியே தவிர, மற்றபடி, அதையும் சரியான எண்ணிக்கை வீதாசாரமுள்ள பிரதிநிதித்துவம் என்று சொல்ல முடியாது.

மற்றபடி, யாருக்குச் சரியான பிரதிநிதித்துவம்—தாங்கள் கொண்ட கருத்தை, தங்கள் நலனுக்கு ஏற்றபடி சாதித்துக் கொள்ளக் கூடிய பிரதிநிதித்துவம் இருக்கிறது என்றால், மேல் ஜாதிக்காரர்களுக்கு, செல்வர்களுக்கு, எஜமானர்களுக்கு, படித்து, படிப்பை முதலாகக் கொண்டு, பாமர மக்களை வழக்கு, நீதி, நியாயவாதம் என்னும் பேரால் யோக்கியப் பொறுப்பற்ற தன்மையில் ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டத்திற்கு, ஏராளமான முதல் படைத்து, வியாபாரம், இயந்திரசாலை, லேவாதேவி என்னும் பேர்களால் மக்களை ஏய்த்துக் கொள்ளை அடித்துப் பிழைப்பவர்களுக்குப் பிரதிநிதித்துவம் ஏராளமாய் இருந்து வருகிறது. இதை யாராவது மறுக்க முடியுமோ?

ஒரு கக்கூஸ்காரன், இந்த கக்கூஸ் எடுக்கும் தொழில் ஒரு நாட்டில் இருப்பது மனித சமுதாயத்தின் மானத்துக்குக் கேடு—இந்த


## புத்தகங்கள்

**மலடும் அதன் நிவாரணையும் ரூ. 3—0—0**

"ஆணிலும், பெண்ணிலும் மலடு ஏற்படும் காரணங்களை டாக்டர் மாத்யூ இப்புத்தகத்தில் விவரித்து அவைகளை எவ்வகையில் நீக்கலாம் என்று கூறுகிறார்" —"ஹிந்து" மதராஸ்.

**இளமை பெறும் முறை ரூ. 3—0—0**

"ஆண், பெண்ணைப்பற்றிய மிகவும் நுட்பமான விஷயங்கள் சாதாரண தெளிவான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தியாப்பத்தினால் பீடிக்கப்பட்ட எல்லோருக்கும் இப்புத்தகம் அனுபவபூர்வமான சமய சஞ்சீவியாயிருக்கிறது" —"மார்னிங் ஸ்டார்"

**கரு தரிப்பதை தடை செய்யும் விவரங்கள் ரூ. 2—8—0**

"தேவையானவர்களுக்கு அவசியமான இந்த முக்ய விஷயத்தைப் புகட்ட இது ஒரு தைரியமான சந்தேகமற்ற முயற்சியாகும்"

—ஸ்ரீமதி சரோஜினி நாயுடு.

## ஹெல்த் புத்தகசாலை

7. கிருஷ்ணன் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.

முறையே கூடாது—நாடு முழுவதும் தானாகவே கழுவிக் கொண்டு போகும் படியான நவீன விஞ்ஞான முறை இருக்க வேண்டும் என்று சொல்லவோ, தீர்மானம் கொண்டு வரவோ, இப்படிப்பட்ட தங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளவோ, இன்றைய தினம் எந்த நாட்டின் ஆட்சிக் குழுவிலேனும் பிரதிநிதித்துவம் உண்டோ—இல்லை.

அதுதான் போகட்டும்.

கக்கூசு எடுக்கும் முறை இந்தப்படியே இருக்கும் வரையிலாவது எல்லா ஜாதியிலும் விகிதாச்சாரம், மக்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு, இந்த வேலைக்குப் போடப்பட வேண்டும் என்றும், இன்று இந்தத் தொழிலில் இருக்கிறவர்களின் பிள்ளைகளும் பின் சந்ததிகளும் இனி இந்த வேலைக்கு வராதபடி படிப்பு, உத்தியோகம், கோவில் பூசை, புரோகிதம், விவசாயம், வியாபாரம் முதலிய காரியங்கள் செய்யும்படி தகுதி ஆக்கப் படவேண்டுமென்றோ சொல்ல இன்றைய சட்ட சபையிலோ மந்திரிசபையிலோ ஆளுண்டோ? பிரதிநிதித்துவம் உண்டோ? அந்தப்படி ஆளோ பிரதிநிதித்துவமோ உண்டு என்று யாராவது சொல்ல முடியுமோ? இன்றைக்கு நாட்டில் இருப்பது ஜனநாயக ஆட்சி என்று பேசுகின்றவர்களாவது மேற்படி ஆளையோ பிரதிநிதித்துவத்தையோ காட்ட முடியுமோ?

முடியாது என்றால், ஏன் முடியவில்லை? முடியவில்லை என்று சொல்லி விட்டு, அதே மூச்சில், இது மக்கள் ஆட்சி என்று சொன்னால் அதற்கென்ன அர்த்தம்?

மனிதனை மனிதன் உட்காரவைத்து ரிக்ஷா இழுப்பது பரிதாபமாய் இருக்கிறது என்று கூறும் பிரதிநிதி இருக்கும் சட்ட சபையில் கக்கூசு எடுப்பது இழிவு, மானக்கேடு, சுகாதாரக் கேடு, பரிதாபம் என்று கூறும் பிரதிநிதி ஏன் இல்லை?

இப்படியே இன்று நாட்டில் உள்ள எத்தனையோ இழிவுக்கும் பித்தலாட்டத்துக்கும் அயோக்கியத்தனமாய் வாழும் தன்மைக்கும் குறைபாட்டுக்கும், (அவற்றைக் களைவதற்கான) பிரதிநிதித்துவம் உண்டா? இதுபோல் கஷ்டப்படும் எத்தனையோ வகுப்புகட்குப் பிரதிநிதித்துவம் உண்டா என்று பார்த்தால் அப்போது தெரியும், இன்று நடப்பது உண்மை ஜனநாயகமா அல்லவா என்பது. அல்லது உண்மையான ஜனநாயக ஆட்சி என்பது (இன்றைய நிலையில்) சாத்தியமா என்பதும் விளங்கும்.

இன்றைய மக்கள் ஆட்சி என்பதும் உண்மையில் சரியான மக்கள் ஆட்சியாக இல்லை என்பது ஒரு புறமிருந்தாலும், நாட்டில், பொறாமை—துவேஷம்—பூசல் ஏற்படாத வண்ணம் மக்களைப் பாதுகாக்கும் ஆட்சியாகவாவது அது இருக்க வேண்டுமானால், அது, ஒன்றா, சர்வாதிகார ஆட்சியாக இருக்க வேண்டும் அல்லது இந்த நாட்டில் உள்ள எந்த ஜாதி மத வகுப்புக்கும் சம்பந்த மில்லாத ஒரு ஆட்சியாக இருக்க வேண்டும்.

இன்றைய நிலையையும், நாட்டு நடப்பையும், மக்கள் தகுதியையும் பார்க்கும்போது, பொறாமை அற்றதும் பாரபட்ச உணர்ச்சி அற்றதுமான ஓர் ஆட்சி ஏற்படுவது என்றால் அது மேற்கண்ட இரண்டில் ஒரு வழியில்தான் அமையவேண்டுமே தவிர வேறில்லை என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டி இருக்கிறது.

---


**அரிய சந்தர்ப்பம்! அற்புத சிகிச்சை!!**

## கந்தன் மூல பவுத்திர ஆஸ்பத்திரி.

138, தங்கசாலைத் தெரு, சௌகார் பேட்டை
[போஸ்டாபீஸ் அருகில்,] சென்னை.



தீராத நோய்கள் தீர்ந்துவிட்டன. ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் வந்துகொண்டிருக்கின்றன.

**ஆப்ரேஷன் இல்லை!**
**பத்தியமில்லை!**

**உத்திரவாத சிகிச்சை.**

சகோதர சகோதரிகளே! உங்களுக்கு ஏற்பட்ட மிக்க கொடிய மூல பவுத்திர வியாதி எத்தனை வருஷங்களாக இருந்தும், மருந்து சாப்பிட்டும் ஆப்ரேஷன் செய்தும் குணமாகாமல் கைவிடப்பட்டிருந்தாலும் நீங்கள் கொஞ்சமும் அஞ்சவேண்டாம்.

உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம் முதலிய 9-வகை மூலங்களில் எதுவானாலுஞ் சரி கவலைவேண்டாம். கொடிபவுத்திரம், புட்டபவுத்திரம், நீர்பவுத்திரம், பக்கபவுத்திரம் முதலிய 8 வகைப் பவுத்திர ரோகங்களில் எதுவாக இருந்தாலுஞ்சரி கவலைவேண்டாம். உத்தரவாதத்துடன் குணமடையலாம். பெண்களுக்கு, பெண்களைக் கொண்டு சிகிட்சை செய்யப்படும்

—டாக்டர் P. S. கந்தன்.
ரிஜிஸ்டர்ட் மெடிக்கல் பிரக்டிஷனர்

# புதிய சகாப்தம் பிறந்தது!

[மூட நம்பிக்கை என்னும் கடலோரத்திலே திரும்பத்திரும்ப நடைபோட்டுக்கொண்டிருந்தான் தமிழன். அவனைத் திருப்பி, அசைத்து நிறுத்தி, கொஞ்சம் அதிகார தோரணையிலேயே கேட்டது தன்மான இயக்கம், ஏனப்பா புத்துலகம் செல்ல விருப்பமில்லையா என்று. அந்தக் கேள்வி இருதய கீதமாயிற்று வாலிப உள்ளங்களுக்கு. ஆனால் நஞ்சில் நனைந்த அம்பெனச் சுட்டது கிழிந்த பழம் பஞ்சாங்கங்களை. சூனமானா என்ற சிறு சொல் பல பெரும் கோட்டைகளை அசைத்தது; தலைமுறை தலைமுறையாகத் தமிழன் பரம்பரையைச் சீரழித்து வரும் தலைவிதி தத்துவத்துக்குச் சாவு மணி அடித்தது; தின்றதைத் தின்று தெவிட்டுதல் இல்லாமல் அன்றன்றுடம் வாழ்வில் புதுமை காண வேண்டும் என்று தமிழனை கிண்கிணி கீதம் இசைக்கச் செய்தது. ஆம்! சுயமரியாதை இயக்கம் தமிழர்தம் நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலவு. அதுமட்டுமல்ல—நாட்டிற் படரும் சாதிப் படை மருந்து! மண்டும் மதங்கள் அண்டா நெருப்பு! பகைப்பார் எதிர்ப்பிற்கு அணையா விளக்கு! அதன் திறமும் வளமும் தெளிவும் குறித்த சில கருத்துரைகள் இதோ உள்ளன. உங்கள் சிந்தனைத் தராசில் அவற்றை நிறுத்துப் பாருங்கள்.]

## இருந்தேதான் தீரும்!

கடவுள், மதம், பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், "நான்," "ஆத்மா," என்பதான மூட நம்பிக்கைகளின் ஆதிக்கங்கள் ஒழிவதோடு, ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுகிறது என்கின்ற தன்மை இருக்கின்றவரையிலும், ஒருவன் தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு மார்க்கமில்லாமல் பட்டினி கிடந்து சாவதும், மற்றொருவன் தினம் ஐந்து வேளை சாப்பிட்டு விட்டுச் சாயுமான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, வயிற்றைத் தடவித் தடவிக் கொண்டிருக்கிறதும் ஆகிய தன்மை இருக்கிற வரையிலும், ஒருவன் இடுப்புக்கு வேஷ்டியில்லாமல் திண்டாடுவதும், மற்றொருவன் மூன்று வேஷ்டி போட்டுக் கொண்டு உல்லாசமாகத் திரிவதுமான தன்மை இருக்கின்றவரையிலும், பணக்காரர்களெல்லாம் தங்களது செல்வம் முழுமையும் தங்களுடைய சுய வாழ்வுக்கே ஏற்பட்டது என்று கருதிக் கொண்டிருக்கிற தன்மை இருக்கின்ற வரையிலும், சுயமரியாதை இயக்கம் இருந்தேதான் தீரும்.

—பெரியார் ஈ. வெ. ரா, 1930-ல்

## வாலிபர்களைக் கூவி அழைக்கும் வசீகர சக்தி

நமது சுயமரியாதை இயக்கம் கண்டோர் கேட்டோர் வியக்கும் விதமாகத் தோன்றி வளர்ந்துள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வளவு தீவிரமான ஒரு இயக்கம் தமிழ் நாட்டில் தோன்றுமென யாரும் எண்ணியிருக்க மாட்டார்கள். சங்க காலத்தில் ஆராய்ச்சியின் அரணாக விளங்கிய தமிழ்நாடே எனினும்—தத்துவங்கள் எத்தனை தித்திக்கும் இயல்பினவாயினும் அவற்றைத் துருவிப் பார்க்கும் குணங்கொண்ட தமிழ்நாடே எனினும்—நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே என்ற நக்கீரர் வாழ்ந்த தமிழ்நாடே எனினும்—கபிலர் தோன்றிய, வள்ளுவர் வாழ்ந்த தமிழ்நாடே எனினும் இந்த பத்தாண்டுகளாகப் பணியாற்றிவரும் சுயமரியாதை இயக்கத்திற்கு ஈடான முயற்சி, தமிழ் நாட்டிலே இதற்குமுன் தோன்றவேயில்லை. வாதங்கள் நிகழ்ந்தன; விளக்கவுரைகளும் வியா யானங்களும் விருத்தி உரைகளும் வெளிவந்தன ஒரு சீர்திருத்தவாதி ஒரு மதத்தின் கோட்பா களை நிலைநாட்டவும் மற்றொரு சீர்திருத்தவா வேறொரு மதத் தத்துவங்களின் மகிமையை போதிக்கவுமே தோன்றினர். ஆனால் அடிப்படை யான ஊழலைக் கண்டுபிடித்து அலசிக் காட்டி இந்த இயக்கத்தைத் தோற்றுவித்துத் தமது தளரா உழைப்பினால் வளர்த்து, இன்று எவ் வளவு பலமான சண்டமாருதத்தின் எதிர்ப்பை யும் சமாளிக்கும் நிலைக்குக் கொண்டுவந்த தனி பெருமை நமது தலைவர் ஈ. வெ. ரா. அவர் களுக்கே உண்டு.

ஏன் என்ற கேள்வியை எந்த விஷயத்திற்கும் எழுப்பி, பகுத்தறிவின் விதையை ஆதிகாலத் திலே சாக்ரடீஸ் கிரீஸ் தேசத்திலே தூவினா அதைப் போன்ற இயல்புடையாரே நமது ஈ. வெ. ரா அவர்கள். அவரது அரிய முயற்சி யால் தோற்றுவிக்கப்பட்ட நமது இயக்கத்தைக் கண்டு திடுக்கிட்டது தமிழ்நாடு. அவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் கூறமுடியாது பழைய ஏடுகளைப் புரட்டிக்கொண்டே திகைத்தனர் பலர்; ஏசினர்; ஏளனம் செய்தனர். ஆனால் ஆயிரக் கணக்கில் வாலிபர்கள் இயக்கத்தில் ஈடு பட்டனர். இதுகண்டு எதிரிகள் கலங்கிவிட்ட னர். நமது இயக்கத்தை நசுக்க முடியாதென் பதை உணர்ந்தனர். நமது கொள்கைகளில் பலவற்றை ஏற்றுக்கொள்ள, நான் முன்னே நீ முன்னே எனப் பலர் ஓடிவந்தனர். பணபல மின்றி, செல்வாக்கின்றி, ஓர் இயக்கம், எதிரி களின் கொட்டத்தையும் விஷமிகளின் ஆர்ப் பாட்டத்தையும் முதலாளிகளின் எதிர்ப்பையும் கங்காணிகளின் கிறுக்கையும் சமாளித்து, பத்தே ஆண்டுகளில் சரித்திரத்திலும் சமுதாயத்திலும் மதிப்பான ஓர் இடம் பெற்றதென்றால் அது நமது

சுயமரியாதை இயக்கமே என்பதில் யாருக்கும் சந்தேகமிராது.

நமது இயக்கம் எல்லாத் துறைகளிலும் புத்தம் புதிய கருத்துக்களைத் தமிழருக்குத் தந்தது. மனப் புரட்சியை உண்டாக்கிற்று. வாலிபருலகைச் சிருஷ்டித்தது. மாதருலகைக் காட்டிற்று. எங்கும் அறிவு எங்கும்ஆராய்ச்சி என்ற நிலை ஏற்பட்டது. உணர்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுத்தோடின. மேனாட்டுப் படிப்பின் அறிகுறியான பட்டமும் கீழ் நாட்டுக் கோளாறுகளுமே அணிகலன் எனக் கொண்டிருந்த வாலிபர் இந்த இயக்கத்தில் ஈடுபட்ட பிறகு புதியதொரு சக்தி பெற்றனர். நாம் வெகு வேகமாக முன்னேறினோம். ஒரு நூற்றாண்டு போதனையைப் பத்தாண்டுகளிலேயே செய்தோம். நாம் போதிக்காத தீவிரக் கொள்கையே கிடையாது. போதனையுடன் மட்டும் நாம் நின்று விடவில்லை. நடைமுறையிலே பலப்பல செய்து காட்டினோம். சாதி விலங்குகளைத் தகர்த்தோம். மத ஆபாசங்களை அலசினோம். புராணக் குப்பைகளைக் கொளுத்தினோம். மாதரைச் சிறை மீட்டோம். விடுதலை முரசு கொட்டினோம். படை திரண்டெழுந்தது. போர் பல புரிந்தோம் வெற்றியாவும் கண்டோம். "தமிழா எழு! விழி! நீ மனிதன் என்பதை உணர்ந்து கொள்! உன்னைச் சுதந்தர வெளியில் போக ஒட்டாது தடுக்கும் சனியன்களை விரட்டு" என்று கூறினோம்.

இவ்வளவு அரும்பெரும் பணிகளாற்றிய நமது இயக்கம் எதிர்காலத்திலும் சளைக்காது உழைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏன்? அதனிடத்திலே தோழர்களைக் கூவி அழைக்கும் சக்தி இருக்கிறது. அச் சக்தியினின்றும் எந்தப் பகுத்தறிவாளியும் தப்ப முடியாது. அதனிடத்திலே விஷமிகளை விரட்டும் சக்தி இருக்கிறது. ஆகவே அதனை அடக்க, அழிக்க, ஒருவராலும் முடியாது.

—அறிஞர் அண்ணாதுரை, 1937-ல்

## செயற்கரிய, செய்த இயக்கம்

தோழர் ஈ. வெ. ராமசாமியார் சட்டசபைகளைப் பற்றியோ அரசாங்கத்தைப் பற்றியோ கவலை கொள்ளாதவர். அவர் ஏழை மக்களுக்குத் தொண்டு செய்வதையே தனது பிறவியின் பயன் என்று கருதியிருப்பவர். அத்தகையவரால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சுயமரியாதை இயக்கம் ஏழைகள், கஷ்டப்படுகிறவர்கள், அநீதிக்குட்பட்டிருப்பவர்கள், சமத்துவத்தை அடையாதவர்கள் ஆகியோர்களை முன்னேற்றுவதற்கே பணியாற்றிவருகிறது என்பதை நான் நன்றாக அறிந்துகொண்டேன். பல்வேறு மதத் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் செய்யமுடியாத காரியத்தை சுயமரியாதை இயக்கம் செய்து முடித்திருக்கிறது.

—மகாகனம் ஜெயகர், 1930-ல்.

## சுயமரியாதைச் சங்கம் ஏன் வந்தது?

பொதுத் தன்மை, பரிசுத்தம், சித்தசுத்தி, அன்பு, பரோபகாரம் என்னும் குணங்கள் நிறைந்த பெரியவர்களைக் குற்றம் சொல்லவோ, அவர்கள் சொன்ன உண்மைகளை அழிக்கவோ சுயமரியாதைச் சங்கம் வந்ததல்ல.

பொது நியாயத்தோடு வித்தியாசமில்லாமல் அன்பு நிறைந்த பெரியவர்கள் சொன்னதை மறைத்து, அந்த இடமெல்லாம் கொடுமை வித்தியாசங்களை நிறைத்து, அதனால் மக்களை இழிவுபடுத்தியிருப்பதைச் சொல்லவே வந்திருக்கிறது.

"சகல சக்திகளும் ஒரு மூல சக்தியின் விகாரங்களே" என்று சொல்லும் எல்லா சமய தத்துவங்களிலும் அழிவில்லா நித்திய வஸ்துவாய் உள்ளது எதுவோ, எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கும் உலகத்திற்கு நிரந்தர ஆதாரமாய் இருப்பது எதுவோ, சகல ஜீவர்களுக்கும் எந்த சக்தி பிரதிபிம்பமோ, எதை அறிந்தவுடன் எல்லாம் பூர்த்தி அடைந்துவிடுகிறதோ அதுவேதான் கடவுள் என்பவர்களிடம் சுயமரியாதைச் சங்கம் சண்டைபோடவும் தர்க்கம் பண்ணவும் வந்ததன்று.

அந்தக் கடவுள் திருஞான சம்பந்தர் சொல்கிறபடி முப்புரி நூலணிந்த பார்ப்பார ஜாதியல்லவென்றும், உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பானுக்கோ, சைவனுக்கோ, வைணவனுக்கோ, பணக்காரனுக்கோ, பிரம்மாவின் முகத்திலிருந்து வந்த பிராமணனுக்கோ, சிவபெருமானின் ஐந்து முகத்தில் நடுமுகத்திலிருந்துவந்த ஆதிசைவனுக்கோ, ஒன்றுவிட்ட தாயாதி அல்ல; எல்லாருக்கும் பொதுவென்றே சொல்ல வந்திருக்கிறது.

எங்கும் வியாபித்து நிறைந்து, இதுவே அதுவாய், அதுவே இதுவாய், எதுவும் அதுவாய் இருப்பது எதுவோ அதுவே கடவுளாக எல்லா சமயங்களிலும் தேசங்களிலும் இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கடவுள் நமது தேசத்தில் மட்டும் பலபெயரோடு, பல கடவுளாக, பெண் ஜாதி பிள்ளைகளுடன் எங்கிருந்தோ இங்கே வந்து, பல பெண்களைக் கல்யாணம் செய்து இங்கும் பல பிள்ளைகுட்டிகளுடன் வாழ்கிறது. பல அவதாரம்—குரங்கு, பட்சி, மீன், ஆமை, கரடி, சிங்கம் முதலியவைகளாகவும் பிறந்து தெய்வ

ரகஸ்ய நூல்கள்
கியாட்லாக்
இனம்
ஒற்றுமை தியாகராயநகர் மதறாஸ்.

மாக வாழுகிறது. இது நியாயமா என்றே சுயமரியாதைச் சங்கம் கேட்கிறது.

மேல்சாதியார் என்று சொல்லப்பட்டவர்களின் காலின்கீழ் அகப்பட்டு வாடி வதங்கி நசுங்கும் ஏழைகளுக்கு அவர்களின் உண்மை நிலை இன்னதென்று சொல்லவும், நற்பதவியும் உயர்நிலையும் அடைவதற்கு எல்லாருக்கும் அதிகாரம் உண்டென்று சொல்லவுமே சுயமரியாதைச் சங்கம் வந்திருக்கிறது.

கோவிலுக்குப் போய் விக்கிரகத்திற்கு ஆபரணம் போட்டுப் பூமாலை சாத்தி, அபிஷேகங்கள் செய்து, அர்ச்சனை என்பது நடத்தி, தெட்சணை கொடுத்து, பார்ப்பானுக்குச் சோறு போட்டு, அவர்கள் காலிலும் விழுந்து, பலகாரம் தின்று, வாரத்திற்கொருநாள் பட்டினியாக இருந்து, சிலைக்குக் கலியாணமும் செய்துவைத்தாலும் பக்தனாகமாட்டானென்றும், வறியோரிடத்திலும் மெலிந்தோரிடத்திலும் நோயால் வருந்துவோரிடத்திலும் கருணைகொண்டு அக் கருணையைச் செயலில் காட்டுகிறவனே ஆஸ்திகன் என்றும் சொல்லவந்திருக்கிறது.

—கைவல்ய சாமியார், 1944-ல்

## மேலான யாத்திரை

கோயில் கட்டுவதிலும் குளம் வெட்டுவதிலும் சோம்பேறிகளுக்குச் சோறு போடுவதிலும் வேத பாடசாலை கட்டுவதிலும் யாத்திரை போவதையும் விட நான் செய்யும் மேலான யாத்திரை சுயமரியாதைக் கூட்டங்களுக்குச் செல்லுவதுதான்; நான் போடும் சோறு சுயமரியாதை அன்பர்கட்கு. நான் படிக்கும் புத்தகம் சுயமரியாதைப் புத்தகங்கள்; நான் அமைக்கும் சபைகள் சுயமரியாதைச் சபைகள் என உங்கட்குச் சொல்வேன்.

—தெ. பொ. வேதாசலம், 1945-ல்

## முடிந்த முடிபு

இந்நாட்டில் தோன்றி மறைந்ததும், தோன்றியிருப்பதும் இனித் தோன்றுவதுமாகிய எத்தகைய இயக்கத்தாலும் செய்திராத—செய்ய முடியாத—சீர்திருத்தச் செயல்களை இந்நாட்டில் சுயமரியாதை இயக்கம் செய்து காட்டி விட்டது. எவராலும் நினைக்கவே முடியாத இவ்வியக்கத்தைத் தோற்றுவித்து நடத்தி வெற்றியடைந்த தலைவர் பெரியார் அவர்கட்கு இந்நாடும் இம் மாகாணமும் இக்கண்டமும் மட்டுமல்ல, உலகமே ஒருங்கு சேர்ந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

சு. ம, இயக்கக் கொள்கைகளின் முடிவு முடிந்த முடிபாகும். அவை எப்பொழுதும் எவராலும் மாற்ற முடியாதவையாகும். எதிர்ப்பு இயக்கக்காரர்களோ நம்மிலிருந்து விலகி எதிர்ப் பிரசாரம் செய்யும் நம்முடைய தோழர்களோ இந்நிமிடம் வரையிலும் நமது இயக்கக் கொள்கைகளில் எதையும் கண்டித்துக் கூறியதோ குறை கூறியதோ கிடையாது. அத்தகைய சிறப்புவாய்ந்த இயக்கத்தினர் நாம். இத்தகைய பெருமை பிற இயக்கக்காரர்களுக்கு இதுகாறும் நேர்ந்ததில்லை. இனி நேரிடப் போவதுமில்லை.

—திருச்சி விசுவநாதம், 1937-ல்

## தாயும் தந்தையும்

சுயமரியாதை இயக்கத்திற்கு நாய்க்கர் அவர்கள் தந்தையாவார்; நான் தாயாவேன். நாங்களிருவரும் சேர்ந்து பெற்ற பிள்ளையே சுயமரியாதையாகும். அக்குழந்தை தாயுடன் வாழாது, இது காறும் தந்தையுடன் சேர்ந்து வாழ்கிறது. அதன் வளர்ச்சி கண்டு யான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

—திருவாளர் திரு. வி. க, 1933-ல்

## வேறு புகல் ஏது?

தமிழ் மக்கள் வீரர்களாக வாழவேண்டுமானால், சிங்கம்போல் தமிழர்கள் அடிமை வாழ்வினின்றும் நீங்கிச் சுதந்தரத்துடன் வாழ வேண்டுமானால், தமிழ்த்தாயை அரியாசனத்திருத்தி மகிழ்விக்க வேண்டுமானால், தமிழ் நாட்டைத் தனி நாடாக்க வேண்டுமானால், தமிழர் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுமானால், சுயமரியாதை இயக்கத்தைத் தவிர வேறு புகல் ஏது?

—கனகம்மையார் இராமசாமி, 1944-ல்.

நண்பர்கட்கெல்லாம்
எமது பொங்கல் வாழ்த்துகள்.

எல்லா வகையான பட்டு
நூல், ஜவுளி வகைகள்
எளிய விலையில் எம்மிடம்
கிடைக்கும்

வருகை தந்து ஆதரவளியுங்கள்

S. A. செல்லம் & சன்ஸ்
33, தேவராச முதலி தெரு,
பி. டி. சென்னை.

# தங்கத்தின் காதலன்

சி. என். அண்ணாதுரை

"என்னுடைய ஜாதி எங்கே தெரிகிறது! காதலரே, நீர் என் கண்களிலே ஏதோ உமது உள்ளத்தை உருக்கும் ஒளியைக் காண்பதாகச் சொல்கிறீர். என் உதட்டை கோவைக் கனி எனக் கூறுகிறீர். பவளவாய்! முத்துப் பற்கள்! பசும்பொன் மேனி! சிங்கார நடை! கோகிலக்குரல்! கோமளவல்லி! என்று கொஞ்சுகிறீர். அப்போது என் ஜாதி எங்கேயாவது உமது கண்களிலே பட்டதா? என் அழகும் அதைவிட என் இளமையும் உம் கண்களுக்குப் பட்டதே தவிர என் ஜாதி எங்கே தெரிந்தது? நீர் என்னைக் காதலித்தீர். நான் அந்தக் கட்டிலே அகப்பட்டேன். நீர் ஏதேதோ படித்தவர். ஆகவே உமது காதலைப் பற்றி ரசமாகப் பேசினீர். எனக்குப் படிப்பு அவ்வளவாக இல்லை. ஆகவே நான் உம்மை எவ்வளவு காதலிக்கிறேன் என்பதை எடுத்துக் கூறவில்லை.

"ஆம்! நான் பேசவில்லையே தவிர, என் கண்பார்வை அதை விளக்கவில்லையா? உம்மை நோக்கும்போது அந்தக் கண்கள் எவ்வளவு பசியோடு உம்மைப் பார்த்தன; உம்மைக் கண்டவுடன் பசி எவ்வளவு விரைவில் தீர்ந்து விட்டது! நீர் என்மீது காட்டிய பிரேமையைக் காணும்போது என் நெஞ்சு எவ்வளவு துடித்தது! என் மார்பு எவ்வளவு படபடவென அடித்துக்கொண்டது!

"உமது புன்னகை எனக்கொரு பூந்தோப்பாகவன்றோ இருந்தது! உமது மொழி எனக்கு கற்கண்டாக இருந்தது. உமது ஸ்பரிசம் என்னைக் களிப்புக் கடலில் கொண்டுபோயல்லவா ஆழ்த்திற்று! காதல் எனும் சுவையை எனக்களித்த கண்ணாளா, நீயே எனக்கு இன்று சாதலையும் தருகிறாய். என்னைத் தழுவிய கரங்கள் இனி என் பிணத்தைத்தான் தழுவும்—அதுவும் ஊரார் அனுமதித்தால். என்னைக் கட்டில்மீது தூக்கிப்போட்டு கலகலவென நகைத்த நீர், இனி என்னைச் சவக் குழியில் தள்ளி, சரசரென மண்ணைத் தூவ வேண்டும்.

"உம்மால்தான் உலகைக் கண்டேன். உம்மாலேயே உலகையும் இழக்கிறேன்."

இப்படிக்கு,
உமது காதலியாகவே
கடைசிவரை
இருந்து இறந்த
**தங்கம்**

கடிதத்தை, **பொன்னம்பலம்**, சரியாகக்கூடப் படித்து முடிக்கவில்லை. அவன் கண்களிலே நீர்த்துளிகள் ஆடின. நெற்றியிலே வியர்வை! நெஞ்சிலே பதைபதைப்பு! நிலை கலங்கினான் இளைஞன். நாற்காலியோடு கீழே சாய்ந்தான். மயக்கமானான்.

அவனுக்கு அன்றுதான் மணமாயிற்று! பெரிய குடிப்பெண். கொஞ்சம் அழகுங்கூட. அதைவிட அதிகமான செல்வம்! அவனைச் சீமைக்கு, படிப்புக்கு அனுப்பப் பணம் தர பெண் வீட்டார் முன்வந்தனர். பொன்னம்பலம் பீ. ஏ., இனி மிஸ்டர் பொன்னம்பலம் ஐ. சி. எஸ் ஆகவேண்டும் என்பதும், கந்தசாமிப் பிள்ளையின் மகள் **கதம்பம்** கலெக்டரின் மனைவியாக வேண்டுமென்பதும் பெண் வீட்டாரின் எண்ணம். அவர்களுக்கு, பொன்னம்பலம், தங்கம் என்ற உபாத்தியாயினியிடம் நேசமாக இருந்தது தெரியும். தங்கம், கதம்பத்தைக் காட்டிலும் அழகி என்பதும் தெரியும். பொன்னம்பலம் யார் என்ன சொன்னாலும் தங்கத்தைத்தான் மணம்செய்து கொள்வான் என்று அவர்கள் பயந்த காலமும் உண்டு. தங்கம் இவர்கள் ஜாதி அல்ல! அவள் ஒரு அபலை. யாரோ பெற்றார்கள்! யாரோ வளர்த்தார்கள்! எப்படியோ ஏழை விடுதியில் சேர்ந்து படித்து, உபாத்தியாயினி ஆனாள். ஏனோ ஆண்டவன் அவளுக்கு அவ்வளவு அழகை, பொன்போன்ற குணம் படைத்த பொன்னம்பலத்தைக்கூட மயக்கி விடக்கூடிய அளவு அழகைக் கொடுத்தான்!

பொன்னம்பலம், காலஞ்சென்ற தாண்டவராயப் பிள்ளையின் ஒரே மகன். மிராசுதார்!

ஊர் பூராவிற்கும் அவர்கள் வீடு சத்திரம் போல் இருந்தது. பொன்னம்பலம் படித்துக் கொண்டிருக்கையில், பருவத்தின் சேட்டைகளில் ஈடுபடாமல்தான இருந்தான். உணர்ச்சியோ சந்தர்ப்பமோ இல்லாததால் அல்ல! ஊரார் தம்மிடம் வைத்திருக்கும் 'மதிப்பு' கெட்டுவிடுமே என்பதற்காகவே உணர்ச்சியைக்கூட அடக்கிக்கொண்டு இருந்தான். ஏதாவது மனதை மயக்கும் காட்சிகள் காண நேரிட்டாலும், "சேலை கட்டிய மாதரை நம்பலாகாது" என்ற பாட்டை உச்சரித்துக் கொண்டே தன்வழி போய்விடுவான்.

இவனுடைய பி. ஏ. வகுப்பின் போதுதான் தங்கம், அந்த ஊர் பெண்பள்ளியில் ஆசிரியராக வந்தது. எப்படியோ இருவரும் சந்திக்க நேரிட்டது. அன்று என்னமோ பொன்னம்பலத்திற்கு, வழக்கமாகக் கவனத்திற்குவரும் பாட்டு வரவில்லை. அவன் தங்கத்தைப் பார்த்தான்; அவள் கண்களைக் கண்டான்! ஏதோ ஒருவித உணர்ச்சி—மயக்கம் வந்தது. தங்கம் தன்வழி சென்றாள் பயத்துடன். அவளுக்குப் பொன்னம்பலத்தைத் தெரியும். ஆகவே தான், ஊரார் என்ன சொல்வார்களோ என்ற அச்சம். பள்ளிக்கூடத்திலேயே, ஆசிரியைகள், அதற்குள், தங்கத்தைப் பற்றிப் பொறுமை கொண்டிருந்தார்கள்.

"தங்கம் தளுக்குக்காரி! கூந்தலைப் பார் எத்தனை கோணல்!" என்பாள் ஒரு ஆசிரியை.

"கோணல் அல்லடி கோமளம்! கர்ல்ஸ் (Curls) — மாடர்ன் பேஷன்! (Modern Fashion)" என்பாள் பிறிதொரு மாது.

உண்மையில் அது கர்ல்சுமல்ல, பேஷனுமல்ல! இயற்கையாக வளர்ந்து, கருத்து, மினுக்கி, சுருண்டு, அடர்ந்த கூந்தல் தங்கத்துக்கு! அதைக் கண்டு மற்ற பெண்கள் கண்ணாடிமுன் நின்றுகொண்டு கைவலிக்கச் சீவித்தான் பார்த்தார்கள். அந்தச் "சுருள் அழகு" அவர்களுக்கு வரவில்லை. அந்த வயிற்றெரிச்சலால் வம்பு பேசலாயினர்.

தங்கம் இவற்றை நன்கு அறிவாள். தன் அழகை பரிமளிக்கச் செய்ய பணம் இல்லை என்பதும், தன்னை சமூகத்தில் அறிமுகப் படுத்திவைக்க 'நல்ல ஜாதி' தனக்கு இல்லை என்பதும் தெரியும். ஆகவே தங்கம் சற்று ஒதுங்கியே வாழ்ந்துவந்தாள். மாதம் முப்பது ரூபாய் கிடைத்தது பள்ளியில். முனியம்மா என்ற மூதாட்டி வீட்டுக் காரியங்களைக் க னித்துக் கொண்டாள்.

தங்கத்தின் 'பொல்லாத வேளையோ' என் னமோ, இதே முனியம்மாள்தான் பொ னம்பலத்தைத் தூக்கி வளர்த்துவந்தாள் அ தக் காலத்தில். அவள் சொல்லித்தான் த கத்திற்கு பொன்னம்பலத்தைப் பற்றித் தெ யும்.

"நீ என்ன ஜாதிதானம்மா" என்று கே பாள் மூதாட்டி.

"ஆயா, நான் பெண் ஜாதி" என் தங்கம் கூறுவாள். "யாருக்கு, பொன்ன பலத்திற்கா?" என்று குத்தலாகக் கிழ கேட்பாள். கேட்டதும், அவளுடை பொக்கை வாயைப் பிடித்து இடிப்பாள் த கம் புன்சிரிப்புடன்.

ஒரு முறை சந்தித்து, பிறகு பல மு சந்தித்தாகி விட்டது இருவரும். புன்ன கள் அங்கிருந்து இங்கும், இங்கிருந் அங்குமாகப் போய்ப் போய்வந்தன. கண் கள் தமது கடமையைக் குறைவறச் செய் விட்டன. காதல் முற்றி விட்டது. மன உண்டானால் மார்க்கமா உண்டாகாது? த கத்தின் அழகு, பொன்னம்பலத்திற் பாதையைக் காட்டி விட்டது. இருவரு 'வீணையும் நாதமும்' ஆயினர். களையி லாக் களிப்பு! எல்லையில்லா இன்பம் ஈடில்லா மகிழ்ச்சி! தங்கமும் பொன்னு ஒன்றுதானே! இருவரும் ஒருவராயினர்.

ஊர் ஒன்று இருக்கிறதே, வம்பளக்க என்ன சார், நம்ம பொன்னம்பலம், அந் வாத்தியார் பெண் இருக்காளே அந்த வீ வழியாக அடிக்கடி போகிறான்' என் ஆரம்பமான வம்பளப்பு, "யார் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிற னும். தங்கத்தைத் தீண்டிய கையால் இன் னொருவளைத் தொடமாட்டானாமே! அவள் கர்ப்பம் கூடவாம்!" என்று வந்து முடிந்தது.

உள்ளபடி, பொன்னம்பலத்திற்கு உறு அவ்வளவு இருந்தது. காதல் உலகில் கு யேறிய இருவரும் ஒருவரை ஒருவர் பிரிவதே இல்லை என்ற முடிவிற்குத்தான் வந்தனர் அவர்களின் காதல் கனிந்தது. தங்கம் கர்ப்ப வதியானாள். இன்னும் ஒரு மாதத்தில் காதலின் விளைவு, களிப்பின் உருவம், பிறக் கப் போகிறது.

அந் நிலையில்தான் பொன்னம்பலத்திற்குப் பெண் கொடுக்க வந்து சேர்ந்தார் கந்தசாமிப் பிள்ளை. அவர் பொன்னம்பலத்தின் மாமன்! குடும்பத்தின் திக்கு!

பொன்னம்பலம் ஏதேதோ சொன்னான். முறைத்தான், முடுக்கினான். தங்கம் கர்ப்பவதி என்பதைக்கூடச் சொல்லி விட்டான். கந்தசாமிப் பிள்ளை ஒன்றைக்கூடக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

"ஏதோ நடந்தது நடந்து விட்டது. நீ ரொம்ப நல்ல பிள்ளை என்று தான் நான் எண்ணியிருந்தேன். எப்படியோ அந்தப் பெண் உன்னை மயக்கிவிட்டாள். போகட்டும் அவளுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடுகிறேன். அடுத்த ஊர் பள்ளிக்கு மாற்றி விடுகிறேன்." என்று கந்தசாமிப் பிள்ளை கூறினார்.

"முடியாது" என்றான் பொன்னம்பலம். மாமன் தன் மீசையை முறுக்கினான். ஒரு சிரிப்பு சிரித்துக்கொண்டே ஒரு கடிதத்தை நீட்டினான் பொன்னம்பலத்திடம்.

வாங்கிப் படித்ததும், பொன்னம்பலத்தின் முகம் கருத்துவிட்டது. பயங்கரமான நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. பேச நாவெழவில்லை. மாமனை நோக்கியபடி நின்றான்.

"என்ன சொல்கிறாய், சம்மதந்தானே" என்று மாமா கேட்டார். ஆமெனத் தலையை அசைத்தான் ஆபத்தில் சிக்கிய பொன்னம்பலம்.

மணம் நடந்தது! தங்கமும் அன்றுதான், ஒரு பெண் மகவைப் பெற்றாள். அது தங்கத்தின் வயற்றில் உதித்த வைடூரியமாகப் பிரகாசித்தது. ஒரு கடிதத்தை எழுதி, முனியம்மா மூலம், பொன்னம்பலத்திற்கு, அனுப்பினாள் தங்கம். அந்தக் கடிதந்தான் மேலே தீட்டப்பட்டது; அதைப் படித்தே பொன்னம்பலம் மூர்ச்சையாகிக் கீழே வீழ்ந்தான். கடிதத்தைத் தந்துவிட்டு வீடுசென்றாள் கிழவி. தங்கம் பிணமாகத் தொங்குவதைக் கண்டாள். ஒரு முழக் கயிறு, தங்கத்தின் அழகை, இளமையை, வாழ்க்கையை, அப்படியே பாழாக்கி விட்டது. பாழாய்ப்போன கயிற்றுக்குக் கண்ணில்லை, தங்கத்தின் அழகையும் இளமையையும் நோக்க! அந்தோ இறந்தாள் இளமங்கை! காதல் பாதையில் சென்றவள், சாதல் எனும் குழியில் விழுந்தாள்.

* * *

"லேடீஸ் அண்டு ஜென்ட்ல்மென்! இன்றையதினம், நாம், இந்த ஊரில் எதற்காகக் கூடியிருக்கிறோம்? இந்த விபசார தடைச் சட்டத்தை சரியானபடி அமுல் நடத்த வேண்டும் என்பதற்காக, அதைப் பொது மக்கள், பிரபலஸ்தர்கள், படித்தவர்கள், ஒரு கமிட்டியாக இருந்து தமது கடமையைச் செய்ய வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். (கை தட்டல்) கை தட்டிவிட்டால் மட்டும் போதாது. நாம் காரியத்தில் காட்டவேண்டும்." என்று கலெக்டர் பொன்னம்பலம், அழகாகப் பிரசங்கம் செய்தார். கூட்டத்திற்கு வந்திருந்த ஜரிகைத் தலைப்பாகைகள் எல்லாம், கலெக்டர், தங்களைப் பார்க்கும்போது கை தட்ட வேண்டும் என்பதற்காக, தயாராக, கைகளைச் சேர்த்து வைத்துக் கொண்ட படியே இருந்தனர்.

இது இருபது வருஷங்களுக்குப் பிறகு! பொன்னம்பலம் இடையில் சீமைக்குப் போய் ஐ. சி. எஸ். தேறி, பல இடங்களில் கலெக்டராக இருந்து விட்டு, தலைமயிர் கூட சற்று நரைத்து விட்டு, தஞ்சாவூரில் கலெக்டராக வந்திருந்த சமயத்தில், விபசார சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர நகர பிரமுகர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துதான் கலெக்டர் பொன்னம்பலம், இதைப் பேசினார்.

விபசாரத்தால் வரும்கேடு, சமூகத்தில் அதனால் விளையும் ஆபத்து என்பதைப் பற்றிப் பலர் பேசினர்.

அவர்களிலே அநேகர் அன்றிரவே, தமது வைப்பாட்டிமாரிடம், விபசாரத்தின் கேட்டைப் பற்றியும் அதைத் தாங்கள் ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டதைப் பற்றியும் பேசுவார்கள் என்பதென்னமோ நிச்சயம்.

பலர் பேசி முடிந்த பிறகு ஒரு இளமங்கை எழுந்தாள். அவள் அழகாக இருந்ததுடன் சற்று அவசரக்காரி போலவும் தோன்றினாள். ஆங்கிலம் படித்த மாது என்பதும் சற்று நல்ல நிலையில் இருப்பவள் என்பதும், நடையிலும் உடையிலும் விளங்கின.

"தலைவர் அவர்களே, பெரியோர்களே! விபசாரம் ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றி யோசித்து ஆராய்ந்தாலன்றி, அதனை ஒழிக்க முடியாது. விபசாரம் நடக்கும் இடத்தை

மட்டும்தான் மாற்ற முடியும். விபசாரம் உண்டாவதற்குக் காரணம் ஏழ்மை முதலாவது. ஆனால் அது மட்டும் தான் என்று எண்ண வேண்டாம். பண ஆசை கூட விபசாரம் செய்யும்படி தூண்டும் அதோடு, ஆடவரின் ஆணவச் சேட்டைகள்தான் விபசார உற்பத்திக்கே காரணம். இதைக் கூறும்போது மற்றவர்களுக்கு வருவதைவிட, தலைவர் அவர்களுக்கு அதிக கோபம் வரலாம். ஆமாம்! சும்மா என்னை விறைத்துப் பார்க்காதீர்கள். காதல் மணங்கள் நிகழ்ந்து, ஜோடிகள் சரியாக அமைந்து, காதலுக்கு ஜாதியோ நீதியோ மற்ற ஏதோ தடையாக இல்லாதிருப்பின், உள்ளபடி நாட்டில் விபசாரம் வளராது.

மணம் செய்துகொள்வது மாடு பிடிப்பது போல இருக்கும்வரை, வாழ்க்கையின் பூரா இன்பத்தையும் நுகர முடியாது. அதனால் காதல் இன்பம் சுவைத்தறியாத ஆடவரும் பெண்டிரும் காமச் சேற்றில் புரள்கிறார்கள். அதில் விளையும் முட்புதரே, விபசாரம்.

ஜாதிச் சனியனைக் கண்டு மிரண்ட எத்தனையோபேர், தமக்கு உகந்தவரை மணம் புரிந்துகொள்ளாது, அவர்கள் வாழ்வைக் கெடுத்து, அவர்களை விபசாரிகளாக்கினர். தலைவர் அவர்களே, உமது தங்கத்தின் மகள், அப்படியே ஒரு விபசாரியானாள். என் செய்வாள் அந்த அபலை? உம்மால் காதலிக்கப்பட்டும் மணம் செய்துகொள்ளாது பிணமாகக் கப்பட்ட தங்கத்தின் மகள், நீர் சீமை சென்று நாட்டை ஆளும் வித்தையைக் கற்றுக்கொண்டிருந்த காலத்தில் ஒரு விபசாரியிடம் வளர்ந்தாள்; ஆடல் பாடல் கற்றாள். அவளை ஒரு பிரமுகர் காதலித்துக் கலந்து வாழுகிறார். அவளை மணக்க மறுக்கிறார். போகம் வேண்டுமாம் அவருக்கு! பொறுப்புமட்டும் கூடாதாம். இன்று நீர் போடும் கமிட்டி ஜரூராக வேலை செய்தாலும் அவளை அசைக்க முடியாது; ஏன்? **சுந்தரி** எனும் அந்த மங்கையை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருப்பது, நீர் நிறுவியுள்ள கமிட்டியின் தலைவர் திருமலைசாமிதான். ஆகவேதான் அவள் அகப்படமாட்டாள். உமக்கு அந்நாள் கவனம் வருகிறதுபோலும். தங்கம் என்ன ஜாதியோ என்பதால் மருண்டு, யார் பேச்சையோ கேட்டு மயங்கி, தங்கத்தைப் பிணமாக்கினீர். ஆம்! இன்று நீர் பேசுகிறீர் பொன்போன்ற மொழிகளை!..........என்று ஆத்திரத்துடன் அந்தப் பெண் பேசினாள்.

"அம்மா, என்னைக் கொல்லாதே! நான் பாதகன். என் தங்கத்தை இழந்தேன். ஆனால் ஜாதியைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என் மாமன் காட்டிய பீதிக்குத்தான் பயந்தேன்." என்றார் கலெக்டர்.

"தெரியுமே எனக்கு அதுவும். தங்கம் ஒரு கிறிஸ்தவ மாது. அவளை மணம் செய்துகொண்டால் குடும்பச் சொத்தில் காலணாவும் பெறமுடியாதபடி உமது தகப்பனார் உயில் எழுதி வைத்தார். அதைக் காட்டித்தானே உமது மாமன் உம்மை மிரட்டினார். சொத்து போய்விடும் என்ற உடனே நீர் சோர்ந்துவிட்டீரே, தங்கம் உமக்குச் சொத்தாகத் தெரியவில்லையோ?" என்றாள் அந்த மங்கை.

"மாதே, என்னை மீண்டும் கொல்லாதே. நான் அன்று ஜாதிப் பேயிடம் சிக்கினேன் அதனாலேயே என் இன்பத்தை இழந்தேன்" என்று கூறி, கலெக்டர், "தங்கத்தைப் பற்றியும் என்னைப் பற்றியும் இவ்வளவு தெரிந்துகொண்டுள்ள நீ யார்?" என்று கேட்டார்.

"நான்தான் சுந்தரி!" என்றாள் அம்மங்கை.

"ஆ! என் மகளே! தங்கம் தந்த மணியே உன் தாய் எனக்கு இன்பம் தந்தாள், நீ எனக்கு அறிவு தந்தாய்" என்று கூறி, மகளை அருகிலழைத்து உட்கார வைத்துக்கொண்டார் கலெக்டர் பொன்னம்பலம். அடுத்த வாரத்தில் மிஸ் சுந்தரத்திற்கும் மிஸ்டர் திருமலைசாமிக்கும், கலெக்டர் பொன்னம்பலம் சுயமரியாதைத் திருமணம் நடத்திவைத்தார்.

---

## கவிஞர் உள்ளம்

விஞ்ஞான அறிவானது உலக மக்களை ஒன்றுபடுத்த முயல்கிறது. ஆனால் மத அறிவோ, மக்களைப் பாகுபடுத்தக் கற்பிக்கிறது; பிற மதத்தினரை வெறுத்துத் தள்ளுமாறு கற்பிக்கிறது.

—கவிஞர் இரபீந்திரநாத் தாகூர்.

# பொங்கிடுமோ பொங்கல்?

[தமிழ் ஒளி]

ஆடையில் லாதுபல் லாயிரம் ஏழைகள்
அழுது துடித்திடும் நேரத்திலே—பனி
வாடை தொலைத்துமே பொங்கல் வந்தால் அதில்
மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கிடுமோ?

ஆலைத் தொழிலாளர் வீடுகளில் இருள்
அண்டிக் கிடந்திடு நேரத்திலே—இளங்
காலை ஒளியுடன் பொங்கல் வந்தால் அதில்
களிப்பும் உற்சாகமும் பொங்கிடுமோ?

நெல்லைப் பதுக்கிடும் வஞ்சகரால் மக்கள்
நெஞ்சு கருகிடும் நேரத்திலே—மஞ்சள்
கொல்லை விளைந்திடப் பொங்கல் வந்தால் அதில்
கூடும் விருந்துகள் பொங்கிடுமோ?

அரும்பும் வியர்வை உதிர்த்துழைப் போர்களின்
அகத்திற் கசப்பெழு நேரத்திலே—செங்
கரும்பு விளைந்திடப் பொங்கல் வந்தால் அதில்
கற்கண் டினிமையும் பொங்கிடுமோ?

அமெரிக்க வெள்ளையன் அங்கே கருப்பரை
அடிமைப் படுத்திடு நேரத்திலே—நம்
தமிழ்நாட்டிற் பொங்கலும் வந்துவிட்டால் அதில்
தாரணி யின்பங்கள் பொங்கிடுமோ?

தமிழர் எனப் பிறந்'தாப்பிரிக்க' மண்ணில்
தடியடி பட்டிடு நேரத்திலே—இங்கே
அமிழ்தமெனச் சொல்லும் பொங்கல் வந்தால் அதில்
அன்பும் உறவுமே பொங்கிடுமோ?

உலகத்திலே முதலாளிகள், ஏழையர்
ஊரைக் கொள்ளையிடு நேரத்திலே—மட்
கலத்தினிற் பொங்கிடும் பொங்கல் வந்தால் அதில்
காசினி யின்பங்கள் பொங்கிடுமோ?

உலகமெனும் கலம் தன்னில் உழைப்பாளர்
ஊற்றும் உழைப்பெனும் பால்பொங் கிடவரும்
நலன்க ளனைத்தையும் அவர்துய்க்கவே ஒரு
நாள்வரின் அதுவே நற்பொங்கல் விழா!

# பரமபதம் அரசியலில்!

மு. வரதராசனார், எம். ஓ. எல்.

இரவு ஒன்பது மணிக்குமேல் செய்தித் தாளைப் படித்து முடித்துவிட்டு மேசைமேல் இருந்த தாயுமானவர் பாடலை எடுத்துத் திறந்தேன். கிளிக்கண்ணி வந்தது. இசையோடு அந்தக் கண்ணிகளைப் பாடிக்கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டிலிருந்து 'ஒன்று,'' ''மூன்று,'' ''எட்டு,'' என்ற ஒலிகள் விடாமல் கேட்டு வந்தன. நான் அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கிளிக்கண்ணி பாடிக் கொண்டிருந்தேன். ''ஏணி ஏணி '' என்ற குரல்கள் பக்கத்து வீட்டிலிருந்து கேட்டன. '' இந்த நேரத்தில் இப்படி ஏதோ வேலையும் ஆரவாரமுமாக இருக்கிறார்களே'' என்று வெறுப்போடு எண்ணிக் கொண்டு என் பாட்டைப் பாடிக் கொண்டே இருந்தேன். மறுபடியும் '' நாலு,'' '' இரண்டு'' என்ற குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. திடீரென்று ''பாம்பு, பாம்பு '' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் புத்தகத்தை வைத்துவிட்டு எழுந்தேன். கொல்லென்று சிரிக்கும் குரல் கேட்டது. மறுபடியும் '' ஏணி'' ''மூன்று'' முதலான குரல்கள் கேட்டன. அப்போதுதான், அன்று ஏகாதசி என்பதும், பக்கத்துவீட்டார் தாயம் ஆடிக்கொண்டு 'பரமபத சோபானம்' என்னும் படத்தை வைத்துப் பொழுது போக்குகின்றார்கள் என்பதும் உணர்ந்தேன்.

அன்று காலையில்தான் நண்பர் ஒருவர் என்னைப் பார்த்து, இன்று இரவு எங்கள் கம்பெனியில் சேர்வீர்களா?'' என்று கேட்டார்.

''என்ன கம்பெனி?'' என்றேன்.

''நீங்கள் எல்லாம் பெரியவர்கள்; எங்களோடு சேர்வீர்களா?'' என்றார் நண்பர்.

அப்போதும் ஒன்றும் விளங்காமல், '' இந்தப் பெரியவர்—சின்னவர் பேச்சு என் அகராதியில் இல்லை. என்ன செய்தி? சொல்லுங்கள் '' என்று கேட்டேன்.

'' இன்று இரவு சினிமா பார்த்துவிட்டுச் சீட்டு ஆடுவதற்குத்தான். ஏகாதசி, தெரியாதா?'' என்றார்.

''ஏகாதசிக்குக் கண்விழிக்கும் வழக்கம் இல்லை'' என்று நான் சொல்லி முடிப்பதற்குள், '' சரி, சரி; தெரிந்துகொண்டேன் நீங்கள் எல்லாம் கடவுளுக்கு எதிர்கட்சி' என்று ஒரு கிறுக்குப் பார்வை பார்த்து நடந்தார்.

ஒன்று, எட்டு, ஏணி, பாம்பு என்று சொல்லிப் பரமபத சோபன ஆட்டம் ஆடியவர்களுக்கும் என்னைப்பற்றி இந்த எண்ணம்தான் இருக்கும். கடவுளின் பெயரைச் சொல்லிக் கண்விழித்துச் சீட்டு ஆடுவதும், சினிமா பார்ப்பதும், ஏணி பாம்பு என்று கத்திக்கொண்டு தாயம் ஆடுவதும் ஆத்திக நெறியாக உலகம் கருதுகின்றது. ஆனால், நல்லொழுக்கத்தோடு நடந்தாலும், தாயுமானவர் பாடலைப் பாடி உணர்ந்தாலும், மற்றவர்களைப் போல் கண்மூடி வழக்கங்களில் மூழ்கியிருக்கவில்லையானால் கடவுளுக்கு எதிர்கட்சியாக உலகம் கருதுகின்றது.

சினிமா பார்த்தல் கூடாது என்று சொல்லவில்லை. கலையுலகில் அதன் சிறப்பையும் செல்வாக்கையும் வெல்லவல்லது வேறு எதுவும் இல்லை. ஆனால் ஏகாதசி இரவில் அமைதியாகத் தூங்குவது குற்றம் என்றும், சினிமா பார்ப்பது கடவுள் நெறி என்றும் சொல்வது தான் வேடிக்கை. சீட்டு ஆடுவது ஒரு கலை என்றால் அதன் மதிப்பை அளவிட்ட பிறகு தான் முடிவுக்கு வரவேண்டும். ஏணி-பாம்பு மயமாகி விளங்கும் பரமபத சோபான படத்தைப் பார்த்துக்கொண்டு தாயம் ஆடுவது அமைதியான உறக்கத்தைவிட உயர்ந்தது தானா? வாழ்க்கையில் ஒவ்வொன்றுக்கும் காரணம்கண்டு ஆறுதல்பெறும் வழி ஒன்று உண்டு. அதன்படி, ஏகாதசியன்று எப்படியாவது கண் விழித்தால் நல்ல பயன் உண்டு; அன்று நாளும் கோளும் சூழ்வும் அப்படி

பட்டவை என்று ஆறுதல் அடைவோரும் உண்டு. ஒரு நாள், அளவாக உண்ணும் அரிசிச் சோற்றையும் காய்கறியையும் மிளகு நீரையும் மறந்து, நாவிற்கினிய திண்பண்டம் பலவற்றையும் பலவகைப் பழங்களோடும் படிக்கணக்கான பாலோடும் சேர்த்து அளவு மீறி வயிற்றை நிரப்பிய போதிலும், ஒரு பொழுது என்று பெயரிட்டு உடலுக்கு நல்லது என்று காரணம் கூறி ஆறுதல் அடைவோரும் உண்டு. இவ்வாறு காரணம் ஒன்றும் காணுமல் "புண்ணியம்" என்ற ஒரு சொல்லையே நினைத்துக்கொண்டு ஆறுதல் அடைகின்றவர்களும் உண்டு. ஆனால், 'கடவுளுக்கு எதிர்கட்சி' என்று புறக்கணித்துப் பார்த்து நடந்த நண்பர் கூட்டம் எவ்வாறு ஆறுதல் அடைகின்றதோ? அல்லது உண்மையாகவே புண்ணியம் என்று நம்பித்தான் சீட்டும் சினிமாவுமாக ஓர் இரவைக் கழிக்கத் துணிந்ததோ?

பக்கத்து வீட்டுப் பரமபதக் கூட்டமோ இந்த நண்பர் கூட்டத்தைவிட எள்ளளவும் உயர்வானது அல்ல; உண்மையாகப் பார்த்தால் தாழ்ந்த கூட்டந்தான். நண்பராவது, சினிமாவுக்கும் சீட்டுக்கும் வரும்படியாக என்னை அழைத்தார். இந்தப் பரமபதக்கூட்டம் என்னை வருமாறு அழைக்கவே இல்லை. அழைக்காமல் விட்டாலும் கவலை இல்லை. நண்பர் வெளிப்படையாகக் கடிந்து சொன்னதுபோல் இந்தக் கூட்டம் சொல்லாது. "இந்த ஆள் இன்றைக்கு ஒருநாளாவது கண் விழிக்கக் கூடாதா? கண்விழித்தால் உடம்பு கெட்டுவிடுமா? தலையா முழுகிப் போய்விடும்? என்னவோவழக்கம்போல் பைங்கிளியேபைங்கிளியே என்று கத்திவிட்டுப் படுத்துத் தூங்கிவிட்டாரே. போகட்டும். அவருக்கு நரகம் தான். அதுவும் நமக்கு நல்லதுதான். நமக்கு சுவர்க்கத்தில் உட்காருவதற்குக் கொஞ்சம் தாராளமாக இடம் கிடைக்கும்" என்று மனத்திற்குள்ளேயே எண்ணிக்கொள்வார்கள். இந்தக் கூட்டம் ஆடும் ஆட்டமும் அப்படித்தான். ஆடுகின்ற ஆட்களில் ஒவ்வொருவரும் தான் மட்டும் எப்படியாவது பெரிய பெரிய ஏணிகளை ஏறிப் பரமபதத்தை அடைந்துவிட வேண்டும் என்றும், மற்றவர்கள் பாம்புகளின் வாயிலே அகப்பட்டு விழுந்து விழுந்து கீழே கிடக்க வேண்டும் என்று தான் எண்ணி ஆடுகின்றார்கள். அதனால் தான், ஏணி கிடைத்தபோது, ஒருவர் மட்டும் மகிழ்கின்றார். பாம்பு வாய்த்தபோது மற்றவர்கள் சேர்ந்து ஆரவாரம் செய்கின்றார்கள். தாயம் உருளும்போது ஒன்று வந்தாலும் எட்டு வந்தாலும் கவலைப்படாமல், மற்றவர்க்கு நரகம் வரவேண்டும் என்றும் தங்களுக்கு மட்டும் பரமபத ஏணி கிட்ட வேண்டும் என்றும் கவலைப்பட்டு உருட்டுகின்றார்கள்.

இன்று உள்ள பொதுமக்களின் கடவுள் நெறி இந்தப் பரமபத ஆட்டம் போலவே இருக்கின்றது. அவரவர்கள் கடவுளைப் பற்றி எண்ணும்போதோ வழிபடும்போதோ, தங்கள் தங்களுக்கு மட்டும் வீடு வாசல் செல்வம் செல்வாக்கு இன்பம் எல்லாம் கிடைக்க வேண்டும் என்றும், மற்றவர்களைவிடத் தாங்கள் மட்டும் உயர்வாக வாழ வேண்டும் என்றும், எதிரிகளை நசுக்கித் தாழ்த்த வேண்டும் என்றும் கடவுளை வேண்டுகின்றார்கள் இப்படி அருச்சனை பூசை எல்லாம் செய்கின்றவர்களும் உண்டு. சுருங்கச் சொன்னால், தன்னலமே இன்று பொதுமக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கின்றது; அன்பும் அல்ல, அருளும் அல்ல, மெய்யுணர்வும் அல்ல. தங்கள் தனிப்பட்ட ஆசை எல்லாம் நிறைவேறுவதற்குக் கடவுள் நெறி பயன்படும் என்பதே அவர்கள் கொள்கை; முயற்சியோ, அறிவோ, கூட்டுறவோ, பொது நல வேட்கையோ பயன்படாது என்றே எண்ணுகின்றார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு, 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்வேறொன் றறியேன் பராபரமே' என்ற தாயுமானவர் கருத்து வேம்புபோல் கசப்பாகத்தான் இருக்கும். பலகாரங்களை விழுங்கிவிட்டுத் தூங்காமல் கண்விழித்துப் பரமபதம் ஆடுவது ஒன்றையே நேரான நல்வழியாகக் கொண்டவர்கள், உலகத் தொண்டே உண்மையான பூசை என்று கூறுவதை நம்புவார்களா? கடவுளே வந்து சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

இந்தப் போக்கு, சமய உலகத்தில் மட்டும் நின்றுவிட்டால் கவலை இல்லை. ஆனால் இது மற்றத்துறைகளிலும் அப்படியே பரவிக் கேடு விளைக்கின்றது. இன்று பொதுமக்களின் அரசியல் வாழ்க்கை ஊழலாக இருப்பதற்கு இதுவே காரணம். பொதுமக்கள் அரசியலில் முன்னேறுதவரையில், எவ்வளவு சிறந்த தலைவர்கள் வழிகாட்டினாலும் காட்டில் அல்ல

லும் குழப்பமும் மலிந்து கொண்டே இருக்கும். பொதுமக்கள் அரசியலுக்கு வருவதில்லை; வந்தாலும் எட்டி எட்டிப் பார்க்கின்றார்கள். உள்ளே நுழைந்தாலும், கடமையை மறந்து கொள்கைகளை மறந்து பரமபத சோபான ஆட்டமே ஆடுகின்றார்கள். தங்களுக்கு மட்டும் ஏணி வரவேண்டும், மற்றவர்கள் பாம்பின்வாயில் விழுந்து கீழே போகவேண்டும் என்பதுதான் அவர்களுடைய அரசியல் வேட்கை. தாயக்காயில் நம்பிக்கை இருப்பது போலவே, அரசியலிலும் எப்படியாவது யாராலாவது திடீரென்று ஏணி கிடைக்கும் என்று நம்புகின்றார்கள். பரமபதம் ஆடுகின்றவர்களுக்குத் தன்னம்பிக்கை இருக்க முடியாது. ஆடுகின்ற மனிதனுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் அங்கே வேலை இல்லை அந்தக் காகிதப் படத்தையும் தாயக் காய்களையும் பொருத்தே ஏணியும் பாம்பும் மாறி மாறி வந்து உயர்த்தியும் தாழ்த்தியும் ஆடுகின்றவர்களை ஆட்டிவைக்கும். ஆனால், அரசியல் இதற்கு நேர்மாறானது. மக்களின் அறிவும் ஆற்றலும் திரண்டு எழும் வெள்ளமே அரசியல். அந்த அரசியலில் தன்னம்பிக்கை இல்லாத மக்கள் நிறைந்திருந்தால், நாடு எப்படி முன்னேற முடியும்? இந்த மக்களைத் தலைவர்கள் எவ்வாறு உயர்த்த முடியும்? இயக்க முடியும்? தலைவர்களே நேரில் வந்து திருத்தினாலும் இவர்கள் திருந்துவார்களா?

பொதுமக்கள் இவ்வாறு தன்னம்பிக்கை அற்றவர்களாகப் பரமபதம் ஆடும்போது, தலைவர்களில் சிலர் களைத்து ஏங்கிச் சலித்து நிற்கும் நிலை வருகின்றது. அப்போது, 'அரசியல் ஒரு சாய்க்கடை' என்றோ, 'பொதுமக்கள் கண்மூடிக் குழந்தைகள், நம்பத்தகாதவர்கள்' என்றோ பழி கூறிவிட்டு ஒதுங்கி விடுகின்றார்கள். ஆனால் சிலர், அவர்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாக இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் தந்திரத்தால் முன்னேறி அரசியல் ஏணிகளை அமைத்துக் கொண்டு உயரப் போய்விடுகின்றார்கள். ஒரு சிலர்மட்டும், பொதுமக்கள்மேல் உண்மையான அன்புகொண்டு, அவர்களோடுசேர்ந்து பரமபத ஆட்டமே ஆடி ஆடி, எல்லோருடைய நம்பிக்கையும் திரளும் வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். வாய்ப்புக் கிடைத்ததும், "இனிமேல் ஒரே வழிதான். எல்லாப் பொறுப்பையும் முழுவதுமாக என் கையில் ஒப்புவித்தால்தான் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும்" என்று நம்பும்படியாகச் சொல்லிச் சர்வாதிகாரிகளாக மாறுகின்றார்கள். இந்தச் சர்வாதிகாரிகள் கொடுங்கோலர்களாக மாறி உலகத்திற்குத் தீங்கு செய்த கதையும் உண்டு; தாங்களே முடிவில் அழிந்த கதையும் உண்டு. ஆனால் சர்வாதிகாரிகள் தோன்றக் காரணம் யார்? கடமையும் கொள்கையும் மறந்து தன்னம்பிக்கை அற்று அரசியலில் பரமபதம் ஆடும் பொதுமக்கள் அல்லவா?

---

## உண்மையை உரைப்பது தவறா?

சில நிகழ்ச்சிகளும் எண்ணங்களும் ஏற்பாடுகளும் புனிதமானவை—அவற்றை மனிதன் தன் புல்லிய அறிவுகொண்டு அளந்து பார்த்தல் அடாத செயல் என்று சிலர் சொல்கின்றனர். அது சுத்தப் பொய்.

அவை புனிதமானவைதாம் என்று யார் உறுதிகூற முடியும்? நமக்கு உண்மை என்று தெரியாத—தெரிய முடியாத எதுதான் எப்படி நமக்குப் புனிதமானதாய் இருக்க முடியும்?

எத்தனையோ நூற்றாண்டுகளாக, உள்ளம் திறந்து பேசுதல் ஆண்டவனை அவமதிப்பதாகும் என்று கருதப்பட்டு வந்தது; நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு கூறுதல் நாஸ்திகம் என்று அலர் தூற்றப்பட்டு வந்தது; அறிஞர்களின் உதடுகளுக்கு அழுத்தமான பூட்டும் இடப்பட்டு வந்தது—உண்மை வெளிவாராதிருப்பதற்காக! அதனாலேயே உண்மையை உரைப்பது தவறு என்று ஏற்பட்டு விடுமா?

—இங்கர்சால்.

# கடைமுழுக்கு

முடியரசன்...

ஆஹா! என்ன தெய்வகளை! அந்த முகத் திலே எவ்வளவு சாந்தம்! வைரங்கள் 'பளிச்' பளிச்' என்று 'டால்' அடிப்பதைப் பாருங் ள்! அந்த உடம்மைப் பாருங்களேன். ன்ன தேஜஸ்! கண்கள் அப்படியே கருணை யைப் பொழிகின்றனவே! எல்லாம் ஈஸ்வரா னுக்கிரகம். அவர் தெய்வாம்சம். நமது சைவ சமயத் தலைவர். அரகரமகாதேவ!''

*　　*　　*

''டே, கண்ணு! இந்தப் பைத்தியத்தைப் பாருடா! தெய்வாம்சமாம்! ஈஸ்வரானுக்கிரக மாம்! அந்த ஆஷாடபூதியின் கண்ணிலே ருணையா பொழிகிறது? காதலை அல்லவா க்குகிறது அந்தக் கண்கள். அதோ அவள் அழகிலே ஈடுபட்டு அப்படியே சொக்கிப் பிள் ளையார்போல உட்கார்ந்திருக்கும் இவரைப் பார்த்து இப்படியெல்லாம் உளறுகிறானே!''

*　　*　　*

மாயவரத்திலே 'கடைமுழுக்கு' அன்று காவிரியில் பாவத்தைக் கழுவிப் புண்ணிய ருவங்களாகத் திகழவேண்டும் நாள் அது. ன்று நானும் என் நண்பன் மாறனும் மழை ல் அகப்பட்டு ஒதுங்கி நின்றபொழுது, ண்டாரசந்நிதிகள் அழகிலே ஈடுபட்ட பக்தர் கூர்ந்ததையும், அதைக்கேட்ட மாணவர்கள் பச்சையும்தான் மேலே தந்துள்ளேன்.

நாங்கள் அங்குசென்றது முழுக்குக்கு ல்ல. அங்கு நடந்த ஆண்டுவிழாவில் பங்கு ற. நான் தேசீயவாதி. மாறன் பெரிய திருத்தவாதி. கொள்கையில் கருத்து வேறு ம் கொண்டவர்கள். இருப்பினும் நட்பில் வும் குறைக்கிடாது. ''நாமிருவ''ராகவே ருந்துவந்தோம். 'காந்தி-ஜின்னா சந்திப்பை' – எங்கள் சந்திப்பை—நட்பை வெகுவாகப் பேசுவார்கள். பள்ளித்தோழமை அவ்வாறு ர்ந்திருந்தது.

''மாறா! பேச்சுக்களைக் கேட்டாயா! எல் ம் இந்தச் ''சூனாமானா''க்களால் வந்த வினை யப்பா. கடவுட் கொள்கையைப்பற்றி, கண்ட படியெல்லாம் பிரச்சாரம் செய்துவந்ததால் நேர்ந்த விளைவு இது'' என்றேன்.

''சுந்தரம்! வீணாகப் பழிசுமத்தாதே! மக்க ளிடையே அறிவு வளர வளர மடமை மறை கிறது இதற்கு யாரும் பொறுப்பாளியல்ல. காலச் சுழலில் சிக்குண்ட கடவுட்கொள்கை சிதறுண்டு போவதற்கு யார்தான் என்ன செய்யமுடியும்?'' என்று சொற்பொழிவு செய்யத் தொடங்கிவிட்டான் மாறன்.

ஆனால், நான் அவன் பேச்சைக் கவனிக் கவேயில்லை. என் மனத்தையும் கண்ணையும் எதிரில் மழைக்கு ஒதுங்கியிருந்த மங்கை யிடம் செலுத்திக் கொண்டிருந்தேன். அவள் அழகின் வயப்பட்ட மனதை மாற்ற முடிய வில்லை. மழையில் நனைந்த வெண்மையான ஆடை, திரட்சியான அவள் உடலின் சிவப் பை எடுத்துக்காட்டிக் காட்டி என் உள்ளத்தை இழுத்துக் கொண்டிருந்தது. நகைகள் போட் டிருந்தால் அந்த நங்கையின் அழகு கொஞ்சம் குறைவாகத்தான் தோன்றும். அதை அறிந்து தானோ என்னமோ அவள் நகை அணிய வில்லை. அழகான அந்த முகத்தில் ஏதோ ஒரு வாட்டம்—கவலைக்குறி படாடியது. நீராடியதால் நனைந்து தொங்கிக் கொண்டிருக் கும் அந்தக் கூந்தலிலிருந்து மழைநீரைத் தட் டிக் கொண்டிருக்கும்பொழுது ஒவ்வொரு அசைவிலும் என்மனம்..........! அதிகம் ஏன் சொல்லவேண்டும்—என்னையே மறந் தேன்.

''சுந்தரம்'' என்று தோளில் தட்டினான் என் நண்பன்.

தூக்கி வாரிப்போட்டது. சுயஉணர்வு பெற்றேன்.

''சுந்தரம்! நான் சொல்லிக் கொண்டிருக் கிறேன். நீ வேறு கவனமாக இருக்கிறாயே!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"அதோ பார் அந்தப் பாவையை. பொற் சிலைபோன்ற அவள் அழகைப்பார். தெய்வ லோகப் பெண்போல்...............!"

"சேச்சே எங்கே போனாலும் இந்த வேலை தானா! வழியில் போகிறவர்களைப்பற்றி நமக் கென்ன? அதுசரி: தெய்வலோகத்தில் எத் தனை நாளப்பா இருந்தாய்?"

"மாறு! நீயே பார்! உன் மனமும் கூட கெட்டுவிடும் அவளைப் பார்த்தால்" என்று சொல்லிக்கொண்டு அவனுடைய முகத்தை அவள் பக்கம் திருப்பினேன். அவளைப் பார்த்ததுதான் தாமதம் மாறன் முகம் மாறி விட்டது. என் கையைப் பிடித்துப் பரபர என்று இழுத்துக்கொண்டே சென்றுவிட் டான். மழையைக்கூடப் பொருட்படுத்த வில்லை. நான் அந்த இடத்தைவிட்டு நீங்கி னேனே ஒழிய அவள் என் மனத்தைவிட்டு நீங்கவில்லை.

எங்கள் ஊருக்குச் சென்றுவிட்டோம்.

சில மாதங்களுக்குப்பின் சென்னை சென்று திரும்பிவந்தேன். நண்பன் மாறனைப் பார்க் கச் சென்றேன்.

என் முகத்தில் வெற்றிக்குறி விளையாடு வதைக் கண்டு "என்ன சுந்தரம்! எதிர்பார்த்த படியே கிடைத்துவிட்டதோ" என்றான்.

"ஆம், எதிர்பார்த்ததுதான். ஆனால் நான் சென்னை செல்லும்பொழுது எதிர்பார்க்கவே இல்லை. இருந்தாலும் என் எண்ணம் நிறை வேறிவிட்டது" என்றேன்.

"என்ன....ஒரு....நாலாயிரமாவது கிடைத் திருக்குமா? இருந்தாலும் சுந்தரம்! நீ ஒரு தேசீயவாதியாயிருந்துகொண்டு "இந்த கள்ள மார்க்கட் வியாபாரம்" செய்யக் கூடாதப்பா!"

"மாறு! அதை நான் சொல்லவில்லை. வியா பாரத்திற்கும் தேசியத்திற்கும் என்ன சம்பந் தம்? அது கிடக்கட்டும் நான் சொல்வது வேறு. மாயவரத்தில் பார்த்தோமே ஒரு பெண்ணை, அதுமுதல் பரிதவித்துக் கொண் டிருந்தது என்மனம். அவளை அடையமுடி யுமா? அவள் எங்கிருக்கிறாளோ? யாரோ? எந்த ஊரோ? என்று ஏங்கிக்கொண்டிருந்த உள்ளத்திற்குச் சாந்தி கிடைத்தது" என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது குறுக் கிட்டுப் பேசத்தொடங்கினான்.

"என்ன என்ன! மாயவரத்தில் பார்த்த பெண்ணா! சாந்தி கிடைத்ததா! அந்தப் பெண்ணை மறுபடியும் பார்த்தாயா? என்ன நடந்தது? விளக்கமாகச் சொல் சுந்தரம்" என்று சோபாவில் சாய்ந்துகொண்டான்.

"கேள்! உற்சாகமாகக்கேள்! நான் சென் னையில் பைத்தியக்காரனைப் பார்க்கச் சென் றேன்............"

"என்ன சுந்தரம்! நான் கேட்பதைவிட்டுப் பைத்தியக்காரனையும் அவனையும் இவனையும் பற்றிச் சொல்லுகிறாயே" என்று கொஞ்சம் பதட்டத்துடன் கேட்டான்.

"அட என்னப்பா! சொல்வதற்குள் துடிக் கிறாயே! விவரமாகச் சொல்லவேண்டாமா!"

"விவரமாகச் சொல்லுவதற்குப் பைத்தியக் காரனைப் பார்க்கப்போனேன் என்றுதான் சொல்லவேண்டுமா?"

"கேளப்பா! "பைத்தியக்காரன்" சினிமா வைப் பார்க்கச் சென்றிருந்தேன்"

"சினிமாவையா சொல்லுகிறாய்?"

"ஆமாமா! கொட்டகை வாசலில் ஒரே கூட்டம்! விதவிதமான 'தோகை மயில்கள்' உள்ளே சென்று கொண்டிருந்தன. அந்த மயில் கூட்டத்தில் என் கோகிலத்தையும் கண்டேன். ஆம் கோகிலம்தான்! அவள் சிவப் பிற்கும் அந்தக்கருப்பு ஆடைக்கும் என்ன அழகு தெரியுமா? அரைகுறையாகப் பின்னித் தொங்கவிடப்பட்டிருந்த அந்தச் சடை-அலட் சியப் பார்வை—எவரையும் கிறுகிறுக்கவைக் கும் புன்சிரிப்பு இவை என்னை அப்படியே சிலைபோல் நிற்கச் செய்துவிட்டன. அங்கி ருந்த மயில்களின் பார்வை எல்லாம் இந்தக் குயிலின் பக்கம்தான். வேடர்களின் கண் களைப்பற்றிக் கூறவாவேண்டும்!

'டிக்கெட்' கொடுக்கத் தொடங்கிவிட்டார் கள். அவள் எந்த வகுப்பு 'டிக்கெட்' வாங்கு கிறாள் என்பதை அவள் கை நீட்டிய அறை யின் மேற்புறத்தில் எழுதியிருந்ததைப் பார்த்து அறிந்துகொண்டேன்.

நானும் அதே 'டிக்கெட்'டை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியோடு உள் நுழைந்தேன். அவள் இருக்கைக்குப் பக்கத்திலேயே இட மும் கிடைத்தது. ஆண்டவனுக்கு ஒரு கும் பிடு போட்டுவிட்டு அமர்ந்தேன். மாயவரத் தில் கண்ட வருத்தக்குறியைக் காணோம். மலர்ச்சிதான் இருந்தது. உதட்டின் சிவப்பும் கண்ணிமையின் கருப்பும் இயற்கை அழகை

அதிகப்படுத்திக்காட்டின. அவை நாகரிக நாரீமணிகள் அணியும் வர்ணப் பூச்சுகளின் ஒத்துழைப்பு.

அவளைப் பார்ப்பேன். அவள் பார்த்தால் திரையைப் பார்ப்பேன். இப்படியாக இருந்ததே ஒழிய, பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. இருந்தாலும் கண்கள் பேசிக் கொண்டுதான் இருந்தன. அவளோடு எப்படிப் பேசுவது—பேசினுல் விடைதருவாளோ என்னமோ என்ற ஐயம் ஊசலாடிக் கொண்டிருந்தது. பிறகு மனதைத் திடப்படுத்திக்கொண்டு "மணி என்ன ஆகிறது" என்று தயவாகக் கேட்டேன்.

"9—25 ஆகிறது" என்று சிறு சிரிப்போடு கலந்து விடை தந்தாள்.

எனக்கு ஓரே மகிழ்ச்சி.

படம் ஆரம்பம் ஆயிற்று. படத்தையும் பாவையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே வந்தேன். இடையே அவள் பேசத் தொடங்கினுள்.

"பாருங்கோ சார்! இளம் பெண்களைக் கிழவனுக்குப் பிடித்துக் கட்டிவைத்து, அவன் இறந்தாலோ அல்லது இருக்கும் போதோ மனித இன்பத்தை விரும்பினுல் கெட்டு விட்டாள்—சமூகத்துரோகி என்றெல்லாம் தூற்றுகிறது இந்தச்சமூகம். இதுரொம்பஅநியாயம். குற்றம் எங்கிருக்கிறது என்று அறிந்து குற்றத்தை நீக்க ஒருவரையும் காணேம்—அதை விட்டுப் பாவம் பெண்களைக் குறை கூறுகிறுர்கள்" என்று உணர்ச்சியாகப் பேசினுள்.

"ஆம்! ஆம்!" என்றேன் நான். அவ்வளவு தான் என்னுல் பேச முடிந்தது.

படம் முடியும் சமயம் மழை வந்து விட்டது. "அடடா! மழை வந்து விட்டதே! எப்படி வீட்டிற்குப் போவது." என்றேன்.

"ஏன்! உங்கள் வீடு எங்கிருக்கிறது!' என்றுள்.

"நான் இந்த ஊரல்ல. என் நண்பர் வீட்டில தங்கியுள்ளேன். "மௌண்ட்ரோடு"க்குப் பக்கத்தில் இருக்கிறது" என்றேன்.

"அப்படியானுல் என் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது. அங்கு வந்து இருந்து விட்டுக் காலையில் போகலாம். இனிமேல் "ட்ராமும்" இல்லை" என்றுள்.

"ம்ம், அதற்கென்ன," என்று அசடு வழிய பதில் கூறினேன். உள்ளுக்குள்ளே ஆனந்தக் கூத்து. எல்லாம் அவன் செயல் என்று நானே சொல்லிக் கொண்டேன்.

படமும் முடிந்தது. அவள் அழைப்பிற்கிணங்க அருகிலிருந்த அவள் வீட்டிற்குச் சென்றேன்.

"காபி போடலாம் என்ருல் இந்த நேரத்தில் பால் எங்கே கிடைக்கப் போகிறது. இதோ 'கலர்' சாப்பிடுங்கள்" என்று தந்தாள்.

மறுக்க மனமில்லை.

"இந்த அறையில் படுத்துக் கொள்ளுங்கள்" என்று பரிவுடன் ஒரு அறையைக் காட்டினுள்.

படுத்துக் கொண்டேன். உறக்கமா வரும்! உள்ளத் துடிப்பு அதிகமாயிற்று. 'என்ன இவ்வளவு அன்பாக இருக்கிருளே. வேறு ஆடவரையே காணேமே' என்று எண்ணிக் கொண்டிருந்த நான் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினேன்.

"வெற்றிலை போடுங்களேன்" என்று சிரித்துக் கொண்டே மெத்தையில் உட்கார்ந்தாள். பாக்குப் பொட்டலம் அவள் கையாலேயே உடைக்கப் பட்டது. சுண்ணும்பும் அவள் தான் தடவினுள். அப்புறம் எனக்குச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும், என் கைகளும்.........................!

சிரித்தாள். நானும் சிரித்தேன்.

காற்றின் தாக்குதலோ—அலையின் மோதுதலோ இன்றிப் படகு அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

"சுந்தரம்! அவளை யாரென்று விசாரித்தாயா?" என்று குறுக்கிட்டுக் கேட்டான் நண்பன் மாறன்.

"ஓ, யாரென்றும் அறிந்து கொண்டேன்; இனிமேல் அவள் என் மனைவி என்பதையும் உறுதி செய்து விட்டேன்; எனது வாழ்க்கைப் பாதையை வேறு வழியில் திருப்பி விட்டேன்; ஓர் வரம்பும் செய்து கொண்டேன்."

"மாறு! அவள் ஒரு தாசி. பிறப்பிலேயே தாசியல்ல. சமூகம் அவளைத் தாசியாக்கிற்று,

சாத்திரம் அப்படிச் சதி செய்தது. அவள் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். பருவம் வந்ததும் பெற்றோர் மணத்திற்கு முயற்சி செய்தனர். இடையில் அவளுக்கும் அவளுடைய மாமன் மகனுக்கும் காதல் வளர்ந்து வந்தது. அவன் தன் தாயிடம் அவளையே மணக்க வேண்டும் என்று கூறினன். ஆனல் தாய் உடன்பட வில்லை. தாய் சொல்லைத் தட்டி நடக்க முடியாத நிலைமையில் அவன் இருந்தான். அவளும் தன் தாயிடம் கூறினள்; அத்தானைத்தான் மணப்பேன் என்று அவள் உடன் பட்டாலும் மாப்பிள்ளை வீட்டார் ஒத்துக் கொள்ளாததால் நாமே வலியப் போவது அழகல்ல'' என்று சொல்லி விட்டாள்.

ஓர் நாள் அவளும் அவனும் சந்தித்தனர். ''அம்மா சொல்வதை மீறி எப்படிச் செய்வது. உன் விருப்பப்படி—உன் வீட்டார் விருப்பப்படி நடந்துகொள். என்மேல் வருத்தப் படாதே.'' என்று சொல்லி விட்டான்.

வேறு வழியின்றிக் கிழவன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். ஏழ்மையில் பிறந்த இளம் பெண்கள் இப்படிப் பலியாவதைத் தானே இந்தப் புண்ணிய பூமியிலே காண்கிறோம். அவள் மட்டு மென்ன அதற்கு விலக்கா? அவளும் வெகு விரைவில் ''விதவை'' பட்டியலில் சேர்க்கப் பட்டாள். அந்த நிலையில்தான் தாயோடு கடைமுழுக்குக்கு மாயவரத்தில் தீர்த்தம் ஆட வந்திருந்தாள். பாபத்தைப் போக்கிப் பரமன் அருளைப் பெற வந்திருந்தாள். பாபம் போனலும் போகாவிட்டாலும் 'பரமன் அருள்' கிடைத்தே விட்டது. தங்கியிருந்த வீட்டில் நள்ளிரவில் பரமன் என்ற இளைஞன் அருளுக்குப் பாத்திரமானள். பலவகைச் சோதனைகளுக்குப் பிறகு பரமனேடு ஐக்கியமாய் விட்டாள். பரமன் கங்கையைத் தேடிச் சென்று விட்டான். சிறிது நாள் அங்கேயே இருந்தாள்.

பிறகு அங்கிருந்த குட்டித் தம்பிரான் கோலாகலத்தில் ஓர் அங்கம் வகித்தாள். ஆண்டவன் சொத்திலே அவளுக்குக் கொஞ்சம் கிடைத்தது.

பத்திரிகையிலே கைலாய பரம்பரைச் செய்தி வந்ததும் சுவாமிகள், ''பாசத்தை'' அறுத்து விட்டார்.

பாவை, பணமும் கையுமாய் நிற்கையில், பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அபயமளித்தார், அவர் உதவியால்தான் சென்னைக்கு வந்திருந்தாள். சினிமாவில் கூட ஏதோ ''சான்ஸ்'' க்கு முயற்சி நடப்பதாகவும் கூறினராம்.

இவ்வளவையும் அவள் வாயால் கேட்டால், கல்லும் உருகி விடும். கேட்டுக் கொண்டேயிருந்த நான் ''ஏன் இப்படி யெல்லாம் கெட்டுப்போக வேண்டும். நல்ல அழகு இளமை, அறிவு இருக்கிறதே—யாராவது மணந்து கொண்டால் என்ன?'' என்று கேட்டேன்.

''மணமா! நான் விதவை! தாசி! என்னை யார் மணப்பார்கள்? அப்படியே சரி என்று யாரேனும் வந்தாலும், விரும்பும் இன்பத்தைப் பெற்றுக் கொண்டு, உதறித் தள்ளி விட்டு, ஓடிவிடுகிறார்கள். சீர்திருத்தம் பேசி விட்டுச் செயலுக்கு வரும்போது ஓடி ஒளியும் வீரர்களைத் தானே காண்கிறேன். ஒருவரிடம் வாழத்தான் எண்ணினேன். ஆனல் அதற்கு அற்பாயுள்தான். அதுமட்டுமல்ல அடிமையாகவும் வாழவேண்டும். ஆனல் ஒரு கயிறுமட்டு மிருந்தால்........!'' முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டு,

''இதோபார்! நானே உன்னை மணந்து கொள்கிறேன். இணைபிரியாது வாழ்வோம். ஆண்டவன் மீது ஆணை. உன்னைப் பிரியவே மாட்டேன். மாயவரத்தில் கண்டது முதல் உன் வயமாகி விட்டேன். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றேன்.

''ஆண்டவனை நீங்கள் நம்புகிறீர்களா? ஆண்களே இப்படித்தான். தங்கள் காரியம் ஆகும் வரை அந்த ஆணை இந்த ஆணை என்று பெண்களை ஏமாற்றுவார்கள். பெண்களும் ''சாமி'' என்றவுடன் உண்மை என்று நம்பிவிடுகிறார்கள். கடைசியில் ஆடவர்கள், ஆண்டவன் உண்மையில் ''கல்'' என்பதை மெய்ப்பித்து விடுகிறார்கள். என்னிடம் தம்பிரான் கூட இப்படித்தானே சொன்னார், அவரே ஆண்டவனை நம்பவில்லை, என்பதைச் செயலில் காட்டி விட்டார். நீங்கள் மட்டு மென்ன கடவுளை........!

''கண்ணே! என்னையும் அப்படி எண்ணி விடாதே! உண்மையில் நான் கூறுகிறேன் பகிரங்கமாகப் பதிவுத்திருமணம் செய்து கொள்கிறேன். என் வாழ்க்கைப் பயிருக்கு நீதான் மழை! மனமிரங்கு! கெஞ்சிக் கே

றேன். இனி நீ இங்கிருக்க வேண்டாம். இந்தத் தொழிலும் வேண்டாம். "சினிமா" என்ற முதலை வாயிலும் சிக்க வேண்டாம். நீ அதில் சேர்ந்தால் "சக்கை" ஆக்கப்படுவாய்!

"அந்தோ! எத்தனை பெண்கள் சித்திரவதை செய்யப் படுகிறார்கள் நமது நாட்டில். மூடத்தனத்தால், பெண்ணினத்தை—தாய் வர்க்கத்தை—படுகுழியில் தள்ளிப் பாழ் படுத்துகிறார்களே! இனி அந்தக் கொடுமையை ஒழிப்பதே என் குறிக்கோள். அரசியல் அப்புறம். முதலில் சமுகம் விடுதலை பெற வேண்டும். அந்தப் பணியில் நாம் இருவரும் நின்று தொண்டு செய்வோம். வா!" என்று கூறினேன். அவளும் உடன்பட்டாள்.

"மாறு! பொங்கலன்று எங்கள் இருவர்க்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற ஏற்பாடு செய்து விட்டேன். நான் பொங்கலன்று உன் கட்சியில் சேர்ந்து விடுவது என்றும் தீர்மானித்து விட்டேன். இனிமேல் நான் ஒரு புது மனிதன். எல்லாவகையிலும் தான். நீ என்னிடம் அருவருக்கும் சில குறைகளையும் களைந்து விட்டேன்.

"மாறு! என்ன நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீ பேயறைந்தாற் போலப் பேசாமல் சாய்ந்து கொண்டிருக்கிறாயே" என்று தட்டினேன். அப்பொழுதுதான் சுய உணர்வு வந்தவன்போல எழுந்தான்.

"ம்ம்! சுந்தரம்! உன் மாற்றத்திற்கும் நீ செல்லப்போகும் புதிய மார்க்கத்திற்கும் என் ஆசி" என்றான்.

"அப்பா! மாறு! ஆசியோடு மட்டும் நின்று விடாதே! உன்னுடைய பூர்ண ஒத்துழைப்பும் இருந்தால்தான் அன்று திருமணம் சிறப்பாக நடைபெறும். நீ தான் எல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டும்." என்று சொல்லிவிட்டுப் பிரிந்து விட்டோம்.

இரண்டொரு நாளில் என் நண்பன் மாறனைக் காணவேயில்லை. இருக்கும் இடமும் தெரியவில்லை.

பொங்கலும் வந்து சேர்ந்தது. திருமணம் விமரிசையாக நடந்தது. கடை முழுக்கன்று அவளை விதவையாகக் கண்டேன். இன்று அவள் விதவை என்ற சொல்லுக்குக் கடை முழுக்குப் போட்டு விட்டாள். வாழ்த்துக்கள்—பரிசுகள் அடேயப்பா! சொல்லிமுடியாது. சீர்திருத்தத் திருமணம் அல்லவா! வெளியூரிலிருந்து ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு போய் மாடியில் அவளும் நானும் ஒவ்வொன்றாகப் படித்துக் கொண்டிருந்தோம். ஒரு கடிதம் மட்டும் என் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது. அது என் நண்பன் மாறன் கடிதம். ஆவலோடு பிரித்தேன். படித்தேன்.

* * *

"ஆருயிர் நண்பா! உன் மணத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமைக்கு என்னை மன்னிப்பாயா? கட்டாயம் மன்னிப்பாய். நான் சீர்திருத்தம் பேசினேன். செயலில் காட்டவில்லை. அவளை—இல்லை மன்னிக்கவும்—உன் மனைவியைத் தாசியாக்கியது சமூகம் மட்டுமல்ல. நான் தான் முதற்காரணம். அவள் என் அத்தை மகள். என் தாய் சொல்லுக்காக அவளை மணக்க மறுத்தேன். அவள் அந்நிலைக்கு ஆளானாள். அந்நிலைக்கு ஆளாக்கிய நான் அவள் முகத்தில் எப்படி விழிப்பேன். எப்படி உன் திருமணத்தில் தொண்டாற்ற முடியும்? இப்பொழுது என்னை மன்னிப்பாயா? உங்கள் இருவரையுமே வேண்டுகிறேன் மன்னியுங்கள் என்று. இயன்றால் உங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்குச் சிங்கப்பூரிலிருந்து வருகிறேன், இன்று கப்பலில் புறப்படுகிறேன். வணக்கம். மன்னிப்பை வேண்டும் மாறன்."

* * *

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கடிதத்தை முடித்தேன். அவளும் விம்மி விம்மி அழுதாள். அந்த விம்மலை மாற்ற வானொலியைத் திருப்பி விட்டேன். மாறன் மாயவரத்தில் அவளைப் பார்த்ததும் மழையையும் பாராமல் என்னை இழுத்துக் கொண்டு சென்றதன் காரணம் இப்பொழுதுதான் தெரிந்தது. அவன் மணக்க வேண்டிய பெண் இப்பொழுது என் மனைவி.

ம்ம்! நமது மூடத்தனங்களுக்கு என்று "கடை முழுக்கு" வருகிறதோ என்று உள்ளுக்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

# வளரும் 'பொன்னி'

தமிழ் மக்களின் நல்வாழ்த்தோடு தொடங்கப் பெற்ற **'பொன்னி'** இதழுக்கு ஓராண்டு நிறைகிறது. வருகின்ற பிப்ரவரி இதழ் இரண்டாம் ஆண்டுத் தொடக்க இதழாகும். பல புதுப் பகுதிகளோடு, புதுமையும் கலை உணர்வும் பொலிய வெளிவரும்.

தமிழர் ஒவ்வொருவர் இல்லத்திலும் மகிழ்ந்துலாவும் **'பொன்னி'** வரப்போகும் ஆண்டுகளிலும் தமிழர்க்கு இன்பம் நல்குவதையே குறிக்கோளாகக்கொண்டு பவனி வருவாள்.

பொங்கல் நன்னாளில் தமிழ்ப்பெரு மக்களின் நல்வாழ்த்துகளை 'அவள்' எதிர்பார்ப்பதும் இயற்கைதானே!

**ஆண்டுக் கட்டணம்** ரூ. 6-0-0 ★ **தனிப் படி** 0-8-0

பொன்னி அலுவலகம்

**த. பெ. 39.** புதுக்கோட்டை.



**மிஷினரிகள்** **விற்பனைக்குத் தயார்.**

**ஆயில் என்ஜின்கள், எலக்டிரிக் மோட்டார்கள், தண்ணீர் பம்புகள், கரும்பாலைகள், பிண்டோடைப் ரோட்டரி ஆயில் மில்கள், ரைஸ், மாவு மில்கள், பாலில் வெண்ணெயெடுக்கும் மிஷன், பாக்குத்தூள் மிஷன்கள்.**

இன்னும் பலவித மிஷினரிகள் விபரங்களுக்கு எழுதவும்.

**தந்தி "NAVASTAR"** **போன் 3472**

# மதருஸ் மில் ஸ்டோர்ஸ்

302, லிங்கிசெட்டி தெரு, POST BOX 174 G. T. மதருஸ்.



கூந்தல் வளர்ச்சிக்கும் சிரசின் குளிர்ச்சிக்கும் சிறந்தது விளக்கெண்ணெயே.

சுத்தமான விளக்கெண்ணெயில் நுட்பமாய் தயாரிக்கப்பட்ட சுகந்த வாசனையுடைய

## "ப்ரைம் க்ரூம் காஸ்டர் பாமேட்"

## PRIME-GROOM CASTOR POMADE

கூந்தலின் கருமையையும் இளமையையும் காப்பது மின்றி மிருதுவான மயிரை சுத்தமாக்கவும் வன்மையுடையது.

**புட்டியின் விலை ரு. 1—0—0.**

தயாரிப்பவர்கள்:

**மிராண்டா பிரதர்ஸ்** 59, ப்ராட்வே, மதராஸ்

MIRANDA BROS 59, BROADWAY MADRAS.

# அறஞ்செய விரும்பு!

முருகு சுப்பிரமணியன்

"அறஞ்செய விரும்பு!" என்று பள்ளியில் பாடக்கவகுப்பிலேயே ஆசிரியர் கற்பிக்கிறார். ணவனும் "அறம் செய—தருமம் செய்ய, ரும்பு—ஆசைப்படு" என்று பதவுரையோடு தனைப் பயில்கிறான்.

மாணவனும் மேல் வகுப்புக்குச் செல்லுகிறான், சிரியரும் அங்கே ஓரடிப் பாடலை விடுத்து நான் ப் பாடலாக ஒன்றைக் கற்பிக்கிறார். அப் டலும் உவமான உவமேயங்களோடு, 'சாதல் ருமுன்னே ஈதல் நல்லதப்பா!" என்பதனையே ற்புறுத்துகிறது. "வாழ்க்கை நிலையல்ல......இவ் வயம் நிலையல்ல—எனவே முடிந்தமட்டும் மம் செய்!" என்று நீதிநூல்கள் கற்பிக் ர்றன.

சுவை நிறைந்த கவிதைகள் இக் கருத் னை எடுத்தியம்பின. வேடிக்கைக் கதைகள் றுவருக்கு இந் நீதியையே போதித்தன. அறி ர்களின் கட்டுரைகள் இக் கருத்துக்கு ஆக்கம் நவனவாய் அமைந்தன. பெருங்காவியங்களும் ந் நீதியினை அடிப்படையாகக் கொண்டு எழுந் ன. சிறுவர்முதல் பெரியவர் அனைவரும் அறஞ்செய விரும்பு" என்ற உபதேசத்தைப் ர்வாயிலாகப் பல வகையில் பெற்றுவந்தனர். ருமம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ல்லோரிடத்திலும் பதிந்தது.

தருமம் செய்யவேண்டுமென்ற எண்ணம் ந்ததேயொழியத் 'தருமம் என்றால் என்ன? ம் எது?' என்பதைப்பற்றிய சரியான ாக்கம் மக்களிடையே பரப்பப்படவில்லை. ர்மையான வரையறை பரவாமற்போகவே ங்கே அவ்வப்போது "சமயசஞ்சீவிகள்" ருமம்' என்பது யாதெனச் சுட்டிக் காட்டினர். 'தருமோத்தமர்கள்' கூறியவற்றை நம்பித் மமும் தலைமுறை தலைமுறையாக நடந்துவரத் ப்பட்டது. 'அறஞ்செய விரும்பு'வதில் மக்க கு ஏற்பட்டுள்ள ஆசையைப் பயன்படுத்திக் ண்டு அறமென்பது ஈதென யாரும் காட்டி க்காத நிலையில் 'சுயநலமிகள்' அதனைப் ன்படுத்திக்கொண்டனர். இதனை விளக்க ப் பார்ப்போம்.

தருமம் செய்' என்று ஒரு சிறுவனிடம் கூறி அவன் வீட்டிலிருந்து ஒரு இட்டிலியை த்துவந்து வெளியே நிற்கும் பிச்சைக்கார ம் கொடுப்பான். இதனைத் தருமம் என்று ன் கருதுகிறான்.

காவேரிப் புராணம் கேட்டு, அதனைப் படிக்கும் பாகவதருக்கு உப்புப் புளி, காய்கறி அனைத்தும் கொடுத்து, இல்லாததை வாங்கத் தட்சிணையும் தந்து, அவரைக் கும்பிட்டு விழுவது 'தருமம்' என்று வயது வந்த பெண்கள் கூறுகிறார்கள்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற உலகநீதி பிழைபடாமலிருக்கத் தாமிருக் கும் ஊரில் சிவத் திருப்பணியொன்று தொடங்கி, யாரும் வியக்கும் வகையில் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகம் செய்ய எண்ணுகிறார் ஊரிலுள்ள பிரபு. இது அவர் காணுகிற 'தருமம்'.

பஸ்ஸில் உட்கார்ந்திருக்கும்போது 'ஐயா பிச்சை' என்று தாயும்பிள்ளையும் குரல் கொடுப் பதைக்கேட்டு 'மணிபர்ஸி'லிருந்து காலணாவைத் தூக்கி வீசுகிறான் படித்த இளைஞன். இது அவன் செய்கின்ற 'தருமம்'.

'வெள்ளிமலையானுக்குப் படிக்கல் கருங்கல்லா யிருக்கலாமா?' என்று உருகிய பக்தர் வெள் ளித் தகடு வேய்கிறார் படிகளுக்கு. இது அவர் செய்கின்ற 'தருமம்.'

"பால்குடம் எடுக்கிறேன் சார், ஊரிலே எல் லோரும் அவாளவா யோக்கியதாம்சம் தந் திருக்கா, நீங்களும் ஏதாவது" என்று நோட்டுப் புத்தகத்தை நீட்டுகிறார் பாலாபிஷேகமணி; அவர் எதிர்பார்க்கிற 'தருமம்' இது.

இவ்வாறு 'தருமம்' என்பது அவரவர் 'மனோ தருமத்'தைப் பொறுத்து அமைந்துவிடுகிறது. ஒருவருக்குத் தருமமாகப்படுவது மற்றவருக்கு அதருமமாய்த் தெரிகிறது. காரணம் 'தருமம்' என்ற சொல்லைத் தங்கள் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்தப் பலர் தலைப்பட்டதுதான். பொது நன்மையை மறந்து 'தருமம்' என்பதனைச் சிலரின் 'ஏகபோக'மாக ஆக்கிவிட்டார்கள். நாளடைவில் 'தருமம் பெறவேண்டியவர் யாவர்?' 'தருமம் எது?" என்ற கேள்விகட்கு மக்கள் தவறான விடைகளையே பெற்றனர். "ஒரு சாதியினரே தருமம் பெறற்குரியர்! அவர் கட்குக் கொடுப்பதே தருமம்!" என்ற எண்ணம் சிறிது சிறிதாக வளர்ந்து, வலுப்பெற்று 'தருமம்' என்ற சொல்லை முழுவதும் பிரதிபலிக்கும் முறை யில் இன்று பரவிவிட்டது.

'அறஞ்செய விரும்பு' என்பது முதல் அந் நீதி யினை வற்புறுத்தும் அத்தனையும் பயன்தரத் தொடங்கியபோது இச் சூது நிகழ்ந்தது. அறஞ்

செய விரும்பிய மக்களிடையே, கையேந்தி நிற்க வென்றே ஒரு கூட்டம் தலைப்பட்டது. கையேந்தி நிற்பதும் பிறர் தருவதைப் பெறுவதும் எங்கள் ஏகபோக உரிமை என்று பறைசாற்றினர், அவர்கள். தருமம் நடந்தது. அக் கூட்டத்தின் வாழ்வு தழைத்தது! இன்றும் தழைத்து வருகிறது.

ஒரு சமுதாயத்திலுள்ள அனைவருமே ஆட்டு மந்தையாகிவிடுகிறதில்லை. ஒரு சிலராவது சிந்தனையாளராயிருப்பர். அவர்கள்தாம் புது நெறி வகுப்பதும், அதன் காரணமாக மக்களின் வெறுப்பைப் பெறுவதும், பின்னர் உணர்ந்த மக்களின் காவலராவதும் உண்டு. அத் தகையோர் சிந்தனை இத் 'தருமத்தின்' பாலும் சென்றது. தருமம் என்றால் என்ன? அதன் உண்மைக் கருத்தென்ன? இப்பொழுது நடப்பதென்ன? என்று அவர்கள் எண்ணிப்பார்த்தனர்.

'தருமம்' என்றவுடனேயே தோன்றும் பொருள் நல்ல செயல் என்பதாகும்' என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். நற்செயல்களைப் புரிவது தருமம் என்ற வரையறையன்றோ பரவியிருக்கவேண்டும்—அதை விடுத்துத் தாறுமாறான முறையில் தருமத்திற்குப் பொருள் கற்பித்துவிட்டார்களே" என்று அவர்கள் பதைபதைத்தனர்.

'தகரக் குவளைக்குள் காலணாவைப் போடுவதைத் தருமம்" என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களிடையே மாறுதல் ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு அவர்கட்கு நேர்ந்தது. 'சோறு போடுவதும், தண்ணீர்ப்பந்தல் வைப்பதும், கோவில் கட்டுவதும், வேதபாராயணம் விளங்கச் செய்வதுமட்டும் தருமமல்ல! இன்னும் விரிந்தது அது' என்று விளக்கவேண்டிய பொறுப்பு அவர்கட்கு வந்தது.

'இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்னசத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்னருள்ள **தருமங்கள்** யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங்
கோடி, **ஆங்கோரேழைக்** கெழுத்தறிவித்தல்'

புதிய அறம்பாடவந்த அறிஞன் பாரதி அறமின்னதெனச் சுட்டிக்காட்டினன் நாட்டு மக்களுக்கு. வீடுதோறும் கல்வியின் விளக்கம் வேண்டுமெனச் செப்பினன். "யாவரும் கல்வி பெறும்படிச் செய்வது" நல்லறம் என்று வலியுறுத்திக் கூறினன். தருமத்திற்குப் புதுப்பெயரும் அறஞ்செய விரும்பிய மக்களுக்குப் புது நெறியும் காட்டினன் பாரதி.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் தன் கடமையை நிறைவேற்றுகிறார். அறத்தைப்பற்றித் தெளிவான விளக்கம் தருகிறார். "அறத்தால் வருவதே இன்பம்—அது வலால் பிறவெலாம் துன்பம்" என்று அறத்தின் பயனை முதற்கண் காணுகிறார். அறம் இன்னதென்று உடனே கேட்கும் புத்துலகச் சிறுவனுக்கு அவர் தரு பதில் இதுதான்!

" திறத்தால் அறிந்திடுக
அறம் இன்னதென்று;
செப்புநூல் அந்தந்த
நாளுக்கு நன்று"

என்று பகுத்தறிந்து கொள்ளும்படி கூறுகிறா காலத்திற்கேற்ப அறம் மாறிக்கொண்டே வரும் ஒரு காலத்தில் சிறந்ததெனக்கொள்ளப்பட் அறம் பிற்காலத்தில் தள்ளப்படலாம். மனு ஒரு காலத்தில் அறமாய் நிலவியது. இன்று அதனை ஒழித்துக் கட்டவேண்டிய அவசியம் வ துள்ளது என்று சான்று காட்டுகிறார் அழிக்கப் படவேண்டிய அறநூலுக்கு. "இந்நாள் அற எது?" எனக் கேட்கும் மக்களுக்கும் அவ வரையறை செய்து காட்டுகிறார்!

" சினம், அவா, சாதிமதம்
புலை நாறும் யாகம்
தீர்ப்பதே இந்நாளில்
நல்லறம் ஆகும்."

இந் நல்லறம் பரவவேண்டு மென்பது அவ ஆசை! 'தருமம் சிலரின் சுயநல வேட்டையா மாறக்கூடாது' என்று எண்ணுவோர் அனை வருடைய ஆசையும் அதுவே! அறஞ்செயவிரும் பும் மக்கள் சூதினுக்ககப்பட்டு மாயாமல், வாழ் பெறும் வழியும் அது தான்!

---


## திராவிட இயக்க நூல்கள்.

**பெரியார் நூல்கள்**
**தளபதி. C. N. A. நூல்கள்**
**கவிஞர் பாரதிதாசன் நூல்கள்**

இலக்கியங்கள்

**மு. வரதராசன் நூல்கள்**
**ராய. சொக்கலிங்கன் நூல்கள்**
**ந. சி. கந்தையா பிள்ளை நூல்கள்**

இவை அனைத்தும் வேறு சிறந்த தமிழ் நூல்கள் யாவும் ஒருங்கே கிடைக்கின்றன.

வியாபாரிகள் நூல் நிலையங்கள் படிப்பகங்கள் முதலியவைகளுக்குக் கழிவு தரப்படும். உங்கள் பெயரையும் நீங்கள் விரும்பும் இலக்கிய வகைகளையும் தெரிவித்தால் புதியவை வெளிவந்தவுடன் தெரிவிக்கிறோம்.

**பாரி நிலையம்**

54, பிராட்வே சென்னை 1

# பேயும் பெண்ணும்

**வ.பா.தாமரைக்கண்ணி.**

நேயர்கள் மன்னிக்க வேண்டும். நான் வாழ்க்
கயில் கண்ட அவல நிகழ்ச்சி ஒன்றை உங்க
க்குத் தெரிவிக்கவேண்டிய தீவினையில் இப்
பாது முனைந்திருக்கிறேன். அதென்னமோ
தரியவில்லை, கொஞ்ச காலமாகத் துன்ப நிகழ்ச்
களையே அன்பர்களுக்கு எடுத்துக் காட்ட என்
னம் அவாவுகிறது. சற்று ஆழ்ந்து சிந்தித்துப்
ார்ப்போமானால், சமூக சீர்திருத்தத்தில் உண்
மயில் அக்கரை கொண்ட ஒவ்வொருவரும்
ன்னைப்போல்தான் கருதுவார்கள் என்று நிச்
யமாய் நம்புகிறேன், நாம் அன்னியரிடமிருந்து
ரிமை பெற்றுவிட்டோமென்று சொல்லப்படு
றது. வெளி நாட்டாரோடு இனி நமக்குப்
பாராட்டம் கிடையாது. 'எங்கும் சுதந்தரம்
ன்பதே பேச்சு.' ஆனால், நாம் எல்லாரும் சமம்
ன்பது இன்னும் உறுதியாகவில்லை. வெவ்
வறு ஜாதியினர் சமமாயிருப்பது ஒருபுறமிருக்க,
தலில் ஒரு வீட்டுக்குள்ளேயே ஆணும் பெண்
ும் சமமாயிருக்கிறார்களா என்று பார்க்க
வண்டும். வெளியாரோடு போராடி ஓய்ந்த
ம், இப்போது நம் வீட்டைச் சீர்ப்படுத்திக்
காள்வதில் ஊன்றிய கருத்து செலுத்தவேண்
ம். அத் துறையில் எழுதப்பட்ட கட்டுரையே
ாகும் இது.

இரண்டு திங்களுக்கு முன் அது நடந்தது.
லை எட்டு மணி இருக்கும், நான் வீட்டில்
ன்று வந்த செய்தித் தாளைப் படித்துக்கொண்
ருக்கையில், திடீரென்று ஓர் ஆள் வந்து துக்க
சய்தியைத் தெரிவித்தான். எங்களோடு மிக்க
தாடர்புடைய ஒரு குடும்பத்தில் இருபத்தி
ன்கு வயதுப் பிள்ளையொருவன் சில நாட்கள்
ாயாய்க் கிடந்து குணமடையாமல் இறந்து
ட்டான். இது என்னைப் பெருந் துயரத்தில்
ழ்த்திய போதிலும், என் மனத்தைத் துணுக்
றச் செய்யவில்லை. காரணம், அப் பிள்ளை
ன் இத்தகைய முடிவு நான் எதிர்பார்த்தது
ன். இதைப் பற்றிப் பின்னர் தெரிவிக்கிறேன்.
னால் என் மனத்தை மிகவும் குழப்பி, என்னை
லைதடுமாறச் செய்தது, இறந்துபோனவ
டைய இளம் மனைவியின் பரிதாப கதியே
ாகும்.

நான் அவசரமாக அவர்கள் வீட்டுக்குச் சென்
றன். அழுகையொலி காதைச் செவிடுபடச்
ய்தது. பிரேதத்தை நடுவில் கிடத்தி, அதைச்
ழ்ந்து பெண்களெல்லாரும் குய்யோமுறையோ
ன்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். ஆனால்,
த்தனை பெண்களிலும், என் கண்கள் இருவ
த்தான் தேடின. அவர்கள் யாரென்று
சொல்லவும் வேண்டுமா? இறந்தவனுடைய தாயும் மனைவியுந்தான். ஆம். அவர்கள் இருந்தார்கள். பிரேதத்தின் இரு மருங்கிலும் இருந்தார்கள். தாய் உரத்த குரலெழுப்பி அழுதாள். அவள் அழுகையில் துக்கத்தைவிட ஆங்காரமே அதிகமாகத் தொனித்தது. கணவனையிழந்த காரிகை அவலமே உருவாக இருந்தாள். தங்கச் சிலை போன்ற அவளது தோற்றம் அந்த நிலையிலும் ஓர் அலாதி சோபையுடன் விளங்கியது. அவளுக்கு அழுவதற்குக் கூட ஆற்றலில்லை. பல மாதங்களாகத் தன்னலமறுத்து, இராக்கண் விழித்துக் கணவனுக்குப் பணிவிடை செய்த அவள் உடம்பில், உரத்த குரலெழுப்பி அழுவதற்கு ஆற்றல் ஏது? இடையறாது கண்ணீர் பெருக்குதலும் தேம்புதலுந் தான் அவள்பால் நான் கண்ட மெய்ப்பாடுகள்.

இறந்தவனுடைய தாய் என்னைக் கண்டதும் வீடு அதிரும்படிக் கூச்சலிட்டாள். "ஐயோ, அம்மா, பார்த்தாயா, என் மகன் அடைந்த கதியை, அவனைப் பற்றி நான் எவ்வளவோ கோட்டை கட்டியிருந்தேனே. அதெல்லாம் இடிந்து விட்டதே. அவனால் நான் சீர்பட்டுப் போகலாமென்று நினைத்திருந்தேனே. இப்படி என்னை நிர்க்கதியாய் விட்டுவிட்டுப் போய்விட்டானே...ம்ம்ம்...யாரை நொந்து என்ன பயன்? ........சாகப் பிறந்த பிள்ளையா அவன்? எல்லாம் இந்த மூதேவியினால் (தனது மருகியைச் சுட்டிக் காட்டி) வந்த வினைதானே எங்களுக்கு. இந்த 'மகாலட்சுமி' என்றைக்கு என் பிள்ளையின் கையைப் பிடித்தாளோ அன்றைக்கே பிடித்தது அவனுக்குச் சனி........அப்போதே அவன் முகத்தில் கம்மனாட்டிக் களை ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன்......" என்று இவ்வாறெல்லாம் பிரலாபித்தாள்.

அவள் பேசியதில், பத்திரிகையில் வெளியிடக் கூடியவை மேற்கண்டவைதாம் என்று நினைத்து, நேயர்கள் மன்னிப்பார்களென்னும் துணிச்சலினால் அவைகளை எழுதினேன். அவள் மேலும் பேசிய தகாத வார்த்தைகளை—வாயில் வரக் கூடாத பேச்சுக்களை—காதால் கேட்கக் கூடாத மொழிகளை—நல்லவர்கள் நடுவில் வெளியிடக் கூடாத வசைச் சொற்களை—வேண்டுமென்றே நான் இங்கே எழுதாமல் விட்டுவிட்டேன்.

தன் மகன் இறந்துபோன துக்கத்தைக் காட்டிலும், அந்த இளம்பெண்ணின் மனம் நோகச் செய்யவேண்டுமென்னும் எண்ணந்தான் அவள் மனத்தில் குடிகொண்டிருந்ததென்று நன்கு விளங்கிற்று. 'அனலிடைப் பட்ட புழு', 'இரு

தலைக் கொள்ளி எறும்பு', 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது', 'வேடன் அம்பு தைத்த இளம் மான்'—ஆகிய இச் சொற்றொடர்களால் குறிக்கப்படும் துன்ப நிலைகள், அன்று அந்த இளம் மனைவி பட்ட துன்பத்துக்கு லவலேசமுங் காணாது என்று உறுதியாய்ச் சொல்லுவேன்!

ஒரு பாவமும் மறியாத அச்சிறுமி, இறந்து போன தன் கணவனை நினைந்து அழுவாளா? எதிர்காலத்தில் தனது வாழ்வை நசுக்கக் கோரப் பற்களுடன் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் கைம்மை நிலையை நினைந்து அழுவாளா? தனது மாமியின் சுடுசொல்லை நினைந்து அழுவாளா? தான் நிரபராதியாயிருக்கவும், பலர் முன் தான் அவமானப் படுத்தப் படுவதை நினைந்து அழுவாளா?

பலர் முன்னிலையிலேயே கொஞ்சமும் நாணமல் ஓர் இளம் பெண்ணை இப்படித் தனது சுடுசொல்லினால் சுட்டெரிக்கும் அந்த மாமி, இனிமேல் அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் தனது மருகியை என்ன பாடுதான் படுத்தி வைக்க மாட்டாள்? அன்பர்காள்! "பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பார்கள். ஒரு பெண்ணின் துன்பநிலை கண்டு மனமிரங்காத ஒருத்தியை எத்துணைக் கொடிய பேய் என்று சொல்ல வேண்டும்! நீங்களே தீர்ப்புக் கூறுங்கள். இனி அவ்விளம் பெண்ணுக்கு வாழ்வில் சுகமோ அமைதியோ ஏது? ஒரு கொடிய பேயின் வளைந்த பற்களுக்கிடையில் அவள் சிக்கிக் கொண்டாள். கொஞ்சங் கொஞ்சமாக அப் பேய் அவளைத் தின்று கொண்டிருக்கிறது. அவ்விளம் பெண்ணின் வாழ்வு எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாய் முடிகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவளுக்கே நல்லது.

தனது மருகியைக் கைப்பிடித்த காரணத்தால் தனது மகன் இறந்து விட்டானென்று தாய் பிரலாபித்ததாகக் கூறினேனல்லவா? இது சுத்தப் பொய். உண்மை நேர் மாறானது. அவனை மணந்ததால்தான் அவள் அவ்வளவு சிறிய வயதில் கைம்பெண் ஆனாள். வயிற்றெரிச்சலைக் கேளுங்கள். அவர்களுக்கு மணமான வரலாறு எனக்குக் கொஞ்சம் தெரியும். அதை ரகசியமாகச் சொல்கிறேன். கிட்டே வாருங்கள்.

அந்தப் பையன் நல்லவன்தான். படித்துப் பட்டம் பெற்றவன். ஏதோ உத்தியோகத்திலும் இருந்தான். ஆனால் அவனுக்கு இதயக் கோளாறு இளமைப் பிராயத்திலிருந்தே இருந்தது. நிசப்தமான ஓர் இடத்தில் அவன் பக்கத்தில் யாராகிலும் போய் நின்றால் அவன் இருதயம் 'திக்' 'திக்' என்று வேகமாய்த் துடிப்பது நன்றாகக் கேட்கும். ஸ்டெதாஸ்கோப் (Stethoscope) இல்லாமலேயே கேட்கும் என்றுதான் சொல்கிறேன். ஒரு சமயம் நானே அந்த இதயத் துடிப்பைக் கேட்டிருக்கிறேன். அவனுக்குத் தக்க பருவம் வந்து மணப் பேச்சு ஆரம்பமாயிற்று. அப்போது அவர்கள் குடும்பத்தில் அக்கறையுள்ள ஒரு மருத்துவர்—அவர் எனக்கும் தெரிந்தவர்தான்—பையனை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து "இவனுக்கு மணம் செய்வதாயிருந்தால் முப்பது வயதுக்கு மேல் பிழைத்திருந்தால் செய்யுங்கள். அதற்குள் செய்தால் சாவு நிச்சயம். ஏற்கெனவே மிகத்துரிதமான துடிப்புள்ள இவனுடைய இருதயம் பெண் கூட்டுறவினால் உண்டாகும் கிளர்ச்சியைத் தாங்காது சட்டென்று நின்றுவிடும்" என்று ரகசியமாக எச்சரிக்கை செய்தார். பகுத்தறிவைக் கடைப்பிடித்து விஞ்ஞானரீதியாகப் பேசிய அந்த மருத்துவரின் புத்திமதி அப் பிள்ளையின் தாயினுடைய காதில் ஏறவில்லை. ஏறாதது மட்டுமில்லை. அன்று முதல் அம் மருத்துவர் அக் குடும்பத்தின் விரோதியானார். அந்தப் பையனுக்கு மணமாகும் போதும் அவர் அழைக்கப்படவில்லை.

"இந்தப் பிள்ளைக்கு கலியாணம் செய்யக்கூடா தென்று யார் சொன்னது? இந்த வியாதிக்குத் திருமணமன்றோ தகுந்த சிகிச்சை' என்று யாரோ ஒரு கற்றுக் குட்டி நாட்டு வைத்தியன் சொன்னானாம். பிள்ளைக்கு ஆயுசு கெட்டியென்று எவனோ ஒரு பட்சி சாஸ்திரக்காரன் சொன்னானாம். அவர்கள் பேச்சுத்தான் அம்பலமேறிற்று. திருமணம் நடந்தது. எதிர்பார்த்தது முடிந்தது. அதனாற்றான், இவ்வரலாற்றின் தொடக்கத்தில், அப்பிள்ளையின் மரணத்தைக் கேட்டு நான் துணுக்க முறவில்லையென்று சொன்னேன். இறுதியாக, பழியோரிடமிருக்கப் பாவம் ஓரிடமாயிற்று!

உருவத்தில் பெண்களாயிருந்தும் குணத்தில் பேய்களாயிருக்கும் பிறவிகள் ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையோ இருக்கக் கூடும். இப்படிப்பட்ட பேய்களின் பிடியிலிருந்து இளம் பெண்களைத் தப்புவிப்பது, சீர்திருத்த நோக்கமுள்ள பகுத்தறிவுக் கட்சியின் தோழியர் தோழர்களுடைய நீங்காக் கடமையாகும்.

* * *

[கட்டுரையை இது வரையில் எழுதிவிட்டு, கொஞ்சம் தண்ணீர் குடிப்பதற்காக அறையைவிட்டு வெளியே சென்றேன், திரும்பி வந்தபோது என் தங்கை நீலா இதைப் படித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். நான் அறைக்குள் புகுந்ததும், "என்ன அக்கா, கட்டுரையை முடித்து விட்டாயா?" என்று கேட்டாள். "இல்லையே நீலா, இது வரையில், பேயைப்பற்றி எழுதினேன். இனிமேல் பெண்ணைப் பற்றி எழுதப் போகிறேன்" என்றேன் நான். "அடே, ஆச்சரியமாயிருக்கிறதே! 'பேயும் பெண்ணும்' என்பதனால் அந்த மாமியையும் மருகியையும்தான் குறிப்பிடுகிறாய்; கட்டுரையும் முடிந்து விட்டது என்றல்லவோ நான் நினைத்தேன்" என்றாள் நீலா. "அது சரியல்ல, நீலா, நாமே பெண்களாயிருந்து, நம்மினத்தவர் கெட்டவர்களென்று காட்டுவதோடு மாத்திரம் நின்று விடக்கூடாது. நல்ல பெண்களையும் காட்ட வேண்டும். அதற்காக நான் ஒன்றும்

கற்பனையில் சிருஷ்டிக்கப் போவதில்லை. உண்மையில் நடந்த மற்ருெரு வரலாற்றைத் தான் சொல்லப்போகிறேன் ;......சரி, நல்ல சமயத்தில் நீயும் வந்தாய். என் கை நோகி றது. நான் சொல்கிறேன். நீ எழுதிக் கொண்டுவா '' என்று நான் சொல்ல, நீலா எழுதிக் கொண்டு வந்தாள்.]

நான் இப்போது கூறப் போகும் அம்மையார் பாதுகல இயக்கங்களில் முக்கிய பங்கெடுத்துக் காள்பவர். நடுத்தரத்தைத் தாண்டிய வயது. ண்பட்ட உள்ளம். கருணை நிறைந்த பார்வை. பசும்போது ஒவ்வொரு சொல்லிலும் பகுத் றிவுக் கதிர்கள் ஒளி வீசும்.

அந்த நிகழ்ச்சி ஏழு ஆண்டுகளுக்கு முன் டந்தது. அந்த அம்மையாருக்கு ஒரே வொரு கன். இளம் பிராயம். அவனுக்கு மணமாகி ருந்தது. அப்போது அவர்கள் இருந்த பக்கத் ல் மஹா மாரி (ப்ளேக்) என்னும் கொள்ளை ாய் பரவியது. அதிகம் நீட்டுவானேன். பயன் கொள்ளை நோய்க்கு இரையானுன். னக்குச் சொல்லி யனுப்பினுர்கள், போயிருந் தன்.

பிணத்தைக் கூடத்தில் கிடத்தியிருந்தார்கள். ற்றத்தார்களும் நண்பர்களுமாகச் சூழ்ந்திருந் ர்கள். ஆனுல், முன் சொன்ன வீட்டைப்போ ல்லாமல், இங்கு அமைதி குடிகொண்டிருந்தது. ழக்கம்போல் என் கண்கள் இறந்துபோனவ டைய தாயையும் மனைவியையும் தேடின. ம், அவர்கள் பிரேதத்துக்கு இருமருங்கிலும் ருந்தார்கள். இருவர் முகத்திலும் அவலம் குடி காண்டிருந்தது.

அமைதியைக் கிழித்துக்கொண்டு அந்த இளம் னைவியின் சோகக் குரல் எழுந்தது. அவள் ன் மாமியைப் பார்த்துப் பேசுகிருள் : '' மாமி, ன் ஒரு பாவி, என் கையைப் பிடித்ததனு ல்லவா உங்கள் பிள்ளைக்கு இந்தக் கதி நேரிட் து. என் பாவம் என்னேடு தொலையக் டாதா ? உங்களையுமா வந்து பீடிக்கவேண் ம் ? உங்கள் முகத்தில் நான் இனி எப்படி ழிப்பேன். இவருக்குப் பிறகு உயிர் வாழ னக்கு விருப்பமில்லை. எனக்கு என்ன ண்டனை வேண்டுமானுலும் விதியுங்கள். னக்கு அது தரும் என்று மகிழ்ச்சியோடு ற்றுக் கொள்வேன் '' என்று அழுதாள்.

யது முதிர்ந்த அந்த அம்மையார் கண்ணீரை ரண்டு சுட்டு விரல்களாலும் துடைத்தெறிந்து ட்டு, ஒரு பெருஞ் சிரிப்புச் சிரித்துப் பேசத் தாடங்கினுர் : '' போடி பைத்தியக்காரி. என் மோ பாவியாம், கதியாம், விதியாம். உன்னுல் ன் பிள்ளை இறக்கவில்லையென்று ஆயிரங் காயில்களில் சத்தியம் செய்து சொல்லுவேன். ரில் வந்த கொள்ளை நோய் அவனுக்கும் கண்டு வனைக் கொண்டுபோய்விட்டதென்ருல் அதற்கு என்ன செய்வாய். உன்னுல் என் மகன் போய்விட்டானென்று நான் சொல்லமாட்டேன். அப்படி யாராகிலும் சொன்னுல் அதை நான் ஒப்பவும் மாட்டேன். அவன் போய்விட்டால் என்ன? நான் உன்னை என் சொந்த மகள்போல் வைத்துக் காப்பாற்றுகிறேன். நீ நல்ல ஆடை யணிகளைப் புனைந்துகொள். மஞ்சள் பூசிக் கொள். குங்குமம் இட்டுக்கொள். தலை நிறை யப் பூ வைத்துக்கொள். அது என் இஷ்டம், இறந்துபோன என் மகனுக்கும் அதுதான் விருப் பம். இதற்கு யார் என்ன சொல்கிருர்களென்று பார்க்கிறேன்......அது மட்டுமல்ல, சரசா,...... இதோ என் மகன் பிரேதத்தை வைத்துக்கொண்டு ஊரார் அறியச் சத்தியம் செய்கிறேன். உனக்கு எந்தப் பிள்ளையாவது பிடித்திருந்தால் சொல்லு. நானிருந்து உனக்கு அவனை மறுமணம் செய்து வைக்கிறேன்.''

**என் மேனி சிலிர்த்தது !**

நல்ல பண்பாடமைந்த உள்ளம் மாத்திரம் படைத்துவிட்டால், **பெண்ணிற் பெருந் தக்க யாவுள?**

---

## அறிவியல் அறிஞரின் தெளிவுரை.

மோட்சம் என்பதும் கிடை யாது. மறுபிறப்பு என்பதும் கிடையாது. அழியாத ஆத்மா என்பதும் இல்லாத ஒன்றே. மனி தன் பிறக்கிருன்; உயிரோடு வாழ் கிருன் ; பின்னர் இயற்கை நிலை யை (மரணத்தை) அடைகிருன். இதுதான் உண்மையே யன்றி வேறில்லை.

மறுபிறப்பு உண்டு என்கிற கொள்கையே மக்களின் ஒழுங் கான நடத்தைக்கு—சன்மார்க்க வாழ்க்கைக்கு இடையூருக இருக் கிறது. இந்தப் பிறப்புதான் இப் போது வாழ்கிற வாழ்வுக்கு முக் கியமானது என்று மக்கள் நம்பு வார்களானுல் அவர்கள் பகுத்தறி வுடன் ஐயமில்லை.

**—சர். சி. வி. ராமன்.**

# கேளுங்கள், சொல்கிறார்கள்!

டி.கே. சீனிவாச

## காண்டேகர்:

"உற்சவ நாள் வந்தது. கோயில் முழுதும் பூக்களால் நிரம்பிவிட்டது. விளக்குகள் தாரகைகளோடு போட்டி போட்டன. பக்தர்கள் கூட்டம் பூஜையை முடித்துக் கொண்டு அளவற்ற திருப்தியோடு திரும்பியது. திரும்பி வரும் வழியில் ஏதோ காலில் தட்டுப் படுவது கண்டு ஒவ்வொருவனும் திரும்பிப் பார்த்தான்.

கோவிலில் இருந்த தெய்வச்சிலை அது! ஆனால் ஒருவனும் அதை அறிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு பக்தனும் அதை மிதித்துக் கொண்டே மேலே சென்றான்."

இதைத்தான் நான் "வெறுங்கோயில்" என்ற என் கதைக்கு முன்னுரையாக எழுதினேன். ஒவ்வொரு வாசகரும் படித்திருப்பார்கள். படிப்பவர்களுக்கு என்ன படிக்கிறோம், எதற்காக இதை இந்தக் காண்டேகர் எழுதினர் என்பது தெரியாது போலிருக்கிறது. போதையிலே இருப்பவனுக்குப் புத்தியே இருக்காது என்று தெரியாமலா சொல்கிறார்கள். நான் எழுதியதை பொழுது போக்கு என்று நினைக்கிறார்கள். அடபாவிகளா! அது மெள்ள மெள்ள ஊர்ந்து செல்லும் உங்கள் அறிவை வேகமாக விரட்ட நான் கொடுத்த சாட்டை அடி அல்லவா?

எந்த சிலைக்காகக் கோயில் கட்டினார்களோ அது வீதியில் கிடந்தது. ஆனால் வெறுங்கோயிலுக்குப் பூஜை செய்தார்கள் அந்தப் பக்தர்கள். படித்தவுடன் பைத்தியக்காரர்கள் என்று பரிகாசம் செய்திருப்பார்கள் ஒவ்வொருவரும். மனிதனுக்குத் தன் குற்றம் எதுவுமே தெரியாது. இயேசு கூடத்தான் சொல்லியிருக்கிறாரே, "உன் கண்ணில் இருக்கிற உத்தரத்தை எடுத்து விட்டு பிறர் கண்ணில் இருக்கிற துரும்பை எடு" என்று. மனிதனுக்கு எப்போதுமே மறதி அதிகம். ஆனால் அந்த மறதியே அவனைப் படாதபாடு படுத்துகிறது என்பது மட்டும் அவனுக்குத் தெரிவதில்லை.

இவர்கள் மட்டும் உயர்ந்த லட்சியங்களை வைத்து சமுதாயம் அமைத்தார்களே! இப்போது அந்த லட்சியங்கள் எல்லாம் தெருவில் தானே கிடக்கின்றன. அதை மிதித்துக் கொண்டு தானே ஒவ்வொருவனும் போகிறான்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று பெரிய மனிதர்களெல்லாம் பேசுகிறார்களே. எல்லாம் ஊருக்கு உபதேசந்தான். ஒருவரும் அது காரியத்தில் இருக்கிறதா எனக் கவனிப்பதே இல்லை. தூத்துக்குடியில் நாடார் உயர்ந்தவர்கள்.

தூத்துக்குடியிலே இருந்து நாடார் மதுரைக்
வந்தால் அவர் அங்கே தாழ்ந்து போவார், மு
குலத்தார் உயர்ந்து விடுவார்கள். முக்குலத்தோ
திருச்சிக்கு வந்தால் பிள்ளைமார் மேல் ஜாதியாக
காட்சி அளிப்பார்கள். பிள்ளைமார் கோயம்பு
தூருக்குப் போனால் கௌண்டர் பெரியஜாதி ஆ
விடுவார்கள், பிள்ளை தாழ்ந்துபோவார். அ
த்தனைபேரும் சென்னைக்குப் போனால் முதலியாரா
"ஞானஸ்னானம்" செய்து கொள்ளுவார்க
ஆனால் ஐயர் மட்டும் எங்கேயும் உயர்ந்தவர்தா
"கடவுள் தன் உருவத்திலேயே மனிதனைப் படை
தார்" என்று பைபில் கூறுகிறது. இ
நாட்டுக் கடவுள்கள் எதுவும் பூணூல் இல்லாம
இருப்பதே இல்லையே! பூணூல் போட்டவர்க
தான் மனிதர்களா?

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெ
லாம் தொழுதுண்டு பின் செல்பவர்!" வள்ளுவ
ஒரு பைத்தியக்கார மனுஷர். ஏதோ எழு
வைத்து விட்டுப் போயிருக்கிறார். "பதிபக்தி
சினிமாவில் "தேயிலைத் தோட்டத்திலே மக்க
சென்று சென்று மாய்கிறார் ஐயையோ" என்
பாடும் போது அறியாமலே கண்ணீர் வருகிற
பார்க்கும் அத்தனை பேரும் அழுகிறார்கள். எ
னவது மூன்றாவது பேர்வழி வெளியில் இருந்
பார்த்தால் அரிச்சந்திரா மயான காண்டம் நட
கிறது போலிருக்கிறது என்று நினைத்துக் கொ
வான். காசு கொடுத்து டிக்கட் வாங்கி வந்
பார்த்தாலல்லவா அவனுக்கு இது "பதிபக்தி
என்று தெரியும். கண்ணீர் விடுகிறார்களே தம்
அறிவை உபயோகிக்கிறார்களா? தேயிலை
தோட்டத்திலே சென்று மாய்பவர்கள் அத்தனை
பேரும் உழுதுண்டு வாழ்ந்தவர்கள் தானே
அக்கிரகாரத்திலே இருந்து யாராவது அங்
வேலை செய்யச் சென்றிருக்கிறார்களா? இங்
இருக்கும்போது அவர்களைச் சித்திரவதை செ
தார்கள். சேரியிலே தள்ளினார்கள். வாழவொ
டாதபடி அடித்தார்கள். அங்கே போய் அவதி
படுகிறார்கள் என்று பாடுவதைக் கேட்கும்போ
பரிதாபப்படுகிறார்கள். எல்லாம் ஊரை மயக்
வதற்கு! நாடக மேடையில் சந்திரமதி வேஷ
போடுபவள் பவுடர் கலையாமல் ஒப்பாரிவை
பாளே அந்த மாதிரிதான் இவர்களும்.

பாரதியார் ஒரு பைத்தியக்காரர். "ஜாதிக
இல்லையடி பாப்பா," "உழவுக்கும் தொழிற்
கும் வந்தனை செய்வோம்" என்று பாடிவை
தார். எல்லோரும் பாடினார்கள். மேடையில்
நின்று ஒலிபெருக்கிக்கு முன்னால் உணர்ச்
நிறைந்த குரலில் பாடும்போது எனக்குக்கூட
தான் உள்ளம் உருகிற்று. ஆனால் கடைசியி

என்ன ஆனது தெரியுமா? அந்தப் பாட்டைக் காட்டி பாரதி மண்டபத்திற்குப் பணந்திரட்டினார்களே தவிர, ஜாதி ஒழியவுமில்லை, உழவனும் தொழிலாளியும் மதிக்கப்படவுமில்லை!

ரசியுங்கள். ஏ! வாசகர்களே! நன்றாக ரசியுங்கள். லட்சியமில்லாத ஸ்தாபனங்களையும், சிந்திக்க முடியாத மூளைகளையும் கொண்ட நாட்டு மக்களே! எல்லாம் வெறும் கோவில்கள்தான்!

## என். எஸ். கிருஷ்ணன் :

"என்ன ஒடம்புக்கு?"

"ஜுரங்க"

"ஏன், வென்னீரிலே குளிச்சியோ, நெருப்பை முழுங்கினியோ?"

"என்னங்க விளையாடுறீங்க?"

"பப்பா, வெளையாடுறேன். கிட்டவா, இந்த மருந்து சாப்புட்டுப்பாரு. நல்லாயிருக்கா? அப்பா நானும் சாப்புட்டுப் பார்க்குறேன். நல்லா இருக்கே, இந்தா எல்லாரும் கொஞ்சம் சாப்புடுங்கோ"

அசோக் குமார் சினிமாவிலே நானும் மதுரமும் நடிச்சோமில்லே, அதுலே இது ஒரு கட்டம். நான் வைத்தியர் மகன், எனக்கு வைத்தியம் அப்பத்தான் புதிசு. "ஆயிரம் பேரைக் கொன்னவன் அரை வைத்தியன்"னு பெரியவங்க சொல்வாங்க இல்லே. ரெண்டுமூணு பேரைக் கொன்னு, என்ன? இன்னம் தொளாயிரத்து தொண்ணூத்தி ஏழு பேரு பாக்கி இருக்காங்களே! அதுலேதான் நான் புதுசுன்னு சொன்னேன். எல்லாரும் கையை நீட்டினாங்க. அவுங்களுக்கு என்ன தெரியும், எனக்கும் வைத்தியத்துக்கும் வெகு தூரம் என்பது. "வைத்தியர் மகன் தானே, வைத்தியம் தெரியாமலா இருக்கும்?" அப்படித்தானே எல்லாரும் நினைப்பாங்க. எனக்கென்ன தெரியும் நோய்க்கு எந்த மருந்து கொடுக்கிறதுங்கிறது? வாய்க்கு ருசியா இருந்த மருந்தைக் கொடுத்தேன். ஐயோடா! எல்லாருக்கும் விக்கல் ஆரம்பிச்சுட்டுது! எனக்குக்கூடத்தான் விக்கல் வந்துடுச்சு. அப்பொறம் எங்க அப்பா வந்தாரு. விஷயத்தைச் சொன்னேன். "அடபாவி மகனே! அது எலிப்பாஷாணமில்லே" இன்னாரு. எனக்கு எப்படி இருந்துச்சு தெரியுமோ? அப்படியே கிறுகிறுண்ணு வந்துடுச்சு.

சினிமாவை எல்லாரும் பாத்தாங்க. சிரிசிரின்னு சிரிச்சாங்க. எனக்கு அவுங்களை பார்த்து சிரிப்பு வந்துடுச்சு. பெரியவங்க தெரியாமலா எழுதி வச்சுருக்காங்க, இல்லாமலா சொல்றுங்கன்னு இவுங்க எத்தனை காரியத்தை செய்றுங்க. பொறக்கும்போதே அடிமையாவே பெத்து, அடிமையாவே வளர்த்து, அடிமையாவெ வாழவச்ச அந்தப்பெரியவங்க சொல்றது சரியாத்தான் இருக்கும் என்று இவுங்க மட்டும் நம்பலாம், வைத்தியம் பார்க்க வந்தவுங்க மட்டும் "வைத்தியர் மகனுக்கு வைத்தியம் தெரியாமலா இருக்கும்"னு நெனைக்கிறது தப்பா? அவுங்களைப் பாத்து இவுங்க சிரிக்குறாங்க. என்னமோ உலகம் நடக்குது. சுத்துதுன்னு படிச்சவங்க சொல்வாங்க. நம்ப ஜனங்கதான் சரஸ்வதியை சாமியாக்கிட்டாங்களே, அவுங்களுக்கு மட்டும் உலகம் நடக்குது!

## கார்ல் மார்க்ஸ் :

"இந்தியாவில் பொற்காலம் ஒன்று இருந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன். மொகலாயர் ஆண்டபோதும், முகம்மதியர், போர்ச்சுகீசியர் நுழைந்தபோதும், தெற்கே ஏழு அரசுகள் இருந்தபோதும், அவுரங்கசீப் ஆண்டபோதும், இன்னும் பழங்காலத்தை ஆராய்ந்தால், கிருஸ்துவர்கள் உலகம் படைக்கப்பட்டதாகச் சொல்லும் காலத்திற்கு முன்பே இந்தியாவின் வீழ்ச்சிக்கு அடிகோலிய—புராண வம்சாவளியில் தோன்றிய பார்ப்பனர்கள் ஆண்டபோதும் பொற்காலம் என்பதொன்று இருந்ததில்லை."

1853ம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே "நியூயார்க் டெய்லி டிரிப்யூன்" (New York Daily Tribune) என்ற பத்திரிகையில் "இந்தியாவில் பிரிட்டிஷார் ஆட்சி" (British Rule in India) என்ற தலைப்பிட்டு இதை எழுதிவிட்டேன். ஆனால் இந்தியாவில் என் பேரைச் சொல்லி ஏய்க்கிற கூட்டம் ஒன்று இருக்கிறது. அவர்கள் நான் சொன்ன மற்ற எல்லாவற்றையும் சொல்வார்கள். ஆனால் அந்தப் பார்ப்பனர்களைப்பற்றிச் சொன்னவைகளை மட்டும் சொல்லவேமாட்டார்கள். மனு எழுதினபடி, பார்ப்பனர்களைப் பழித்தால் பாவம் வந்து சேரும் என்று ஒரு வேளை பயப்படுகிறார்கள் போலிருக்கிறது! பத்திரிகைகளில் போடும்போதுகூட அவர்கள் அந்த வரிகளை வெட்டிவிடுகிறார்கள். ஆனால் "பத்திரிகா தர்மம்" என்று ஆர்ப்பாட்டம் செய்வதில் மட்டுந் தவறுவதே இல்லை! என்ன செய்வது? அடிமைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைதானே அந்த நாடு!

## பாரதி தாசன் :

"இன்பத் திராவிடமே நீ மலர்"—

பாடினேன். எனக்கும் உள்ளந்துடித்தது. இது ஒன்றும் மட்டமான நாடில்லையே! பச்சையைக் குலுக்கி விரித்து, பார்வையைப் பெரிதாக்கும் தஞ்சை, திருச்சி மாவட்டங்கள், தங்கத்தைத் தளராது தந்துகொண்டே இருக்கும் கோலார் தங்க வயல்கள், இரும்புக் கனிகளை உள்ளடக்கி இருக்கும் சேலம், நிலக்கரி சுரங்கங்கள் உள்ள விருத்தாசலம் பாண்டிச்சேரி, அணுகுண்டு செய்யத் தேவையான மோனசைட் என்ற உலோகம் நிறைந்த கன்னிகுமரி, "தென்னையும் அதன் பயனும்" என்ன என்பதை எடுத்துக் காட்டும்

திருவாழுங்கோடு—இதுதான் வளமார் எமது திராவிட நாடு. அது வாழ்க!

நான் பாடியபடியே அது ஒரு "குறை இன்றித் திருத்திய சித்திரந்தான்." ஆனால் உலகிற்கு அது தெரியாது. சுற்றிலும் இருள் படர்ந்திருக்கிறது. அதை யாரும் கவனிப்பதே இல்லை. ஏன் என்று கேட்க ஒரு நாதியுமில்லை. "நெஞ்சில் உறுதி, நினைப்பில் புதுத்தன்மை, வஞ்சகர் பேச்சில் மயங்காமை" என்ற குணஞ் செயல்களை அனைவருங் கொண்டால் இன்பத்திராவிடம் கட்டாயம் மலர்ந்துமணந்தரும். "வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும், விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும், சூழ்ச்சிதனை வஞ்சகத்தை, பொறுமைதன்னை, தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச் செயல்கள்——" இன்னும் எத்தனையோ வேண்டும் திராவிடனுக்கு!

## நான்:

என்னிடந்தான் நால்வரும் பேசினார்கள். நினைவிலே அல்ல, கனவிலே! இன்று பொங்கற் புது நாள், நன்னாள், பொன்னாள், திராவிடத் திருநாள்! வீடுகள் தோறும் விழாக் கொண்டாடுவர். வீதிகள் தோறும் அலங்காரங்கள் செய்வர். எத்தனையோ ஊர்களில் பொதுக் கூட்டங் கூட்டுவர். என்னென்னவோ பேசுவர், ஆனால் அந்த நால்வர் சொன்னவைகளை மட்டும் அநேகர் சொல்லமாட்டார்கள்.

நல்ல வீணை! எத்தனையோ இசைவாணர்கள் இசைத்து இதயத்தை இன்பத் தொட்டிலில் இட்டு ஆட்டித் தூங்கவைத்திருக்கின்றனர். வீணையிலே பழுதில்லை. ஆனால் நாதத்திலே மட்டும் தெளிவில்லை. ஏன்? நான் கேட்கிறேன், ஏன்?

---

### "சுயநலத்"திற்கே உழைக்கிறேன்!

**எனக்குச் சுயநலமில்லை என்று கருதாதீர்கள். நான் மகா பேராசைக்காரன். என்னுடைய ஆசையும் சுயநலமும் எல்லையற்றன. நான் என் சொந்த சுயநலம் என்பதைத் திராவிட சமுதாய நலன் என்று எண்ணி இருக்கிறேன். அச் சமுதாயத்திற்கு வேண்டிய செல்வமும் பதவியும் என்பவற்றில் அளவற்ற ஆசை கொண்டிருக்கிறேன். அந்த சுயநலத்திற்கே நான் உழைக்கிறேன்.**

—பெரியார்.


## தமிழகத்தீர்!

உங்கட்கு அரிய நூல்கள் தருகின்றோம்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | தமிழர் யார்? | 0 | 8 |
| 2. | ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 |
| 3. | தமிழ்: பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 4. | தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 5. | ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| 6. | மரணத்தின் பின்? | 0 | 8 |
| 7. | பெண்ணே பெரியவள்-ஏன்? | 0 | 8 |
| 8. | சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| 9. | தமிழர் சரித்திரம் | 3 | 0 |
| 10. | பாம்பு வணக்கம் | 0 | 4 |
| 11. | உலக அறிவியல் நூல் | 0 | 8 |
| 12. | தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| 13. | பெண்கள் உலகம்: அன்றும் இன்றும் | 0 | 12 |
| 14. | மனிதன் எப்படித் தோன்றினான்? | 0 | 8 |
| 15. | ஆயிரம் வினாக்களும் விடைகளும் | 1 | 0 |
| 16. | கர்னல்—லட்சுமி | 0 | 6 |
| 17. | இராவணன் வித்தியாதரனா? | 0 | 6 |
| 18. | உலகக் கலை-உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 19. | திருக்குறள் தெய்வக் கொள்கை | 0 | 4 |
| 20. | ஏ! தாழ்ந்த தமிழகமே C.N. அண்ணாதுரை M.A. | 0 | 8 |
| 21. | வேலைக்காரி ("ஜீவா") | 1 | 8 |
| 22. | வேடதாரி ("ஜீவா") | 1 | 4 |
| 23. | நடன சுந்தரி | 1 | 0 |
| 24. | நாடகக் கலை மலர் | 2 | 0 |
| 25. | இராவண காவியம் | 6 | 0 |
| 26. | தமிழரின் மறுமலர்ச்சி (C.N.A.) | 0 | 8 |
| 27. | எது இசை? (பாரதிதாசன்) | 0 | 6 |
| 28. | திராவிடர் நாகரிகம் | 0 | 10 |
| 29. | நாடக உலகில் | 0 | 8 |
| 30. | தேன் கூடு (கவிதை) | 0 | 2 |
| 31. | தமிழ் விளக்கம் | 0 | 6 |
| 32. | முச்சங்கம் | 0 | 8 |
| 33. | நாஸ்திகர் யார்? ஆஸ்திகம் எது? | 0 | 6 |
| 34. | கவிஞனின் காதல் (காவியம்) | 0 | 12 |
| 35. | கவிஞர் விழா | 0 | 6 |
| 36. | தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா? | 0 | 4 |
| 37. | அண்ணாவும் இராவணகாவியமும் | 0 | 2 |
| 38. | இந்தியாவில் சோஷலிஸம் | 0 | 12 |

## முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1

# தென்றல் விடு தூது

[குயிலன்]

"பொன்மலரின் மகரந்தப் பொடிசிந்திக்
குழலூதிப் போகும் தென்றல்
மென்காற்றுத் தேவதையே! என்காதல்
தேவதையை வீட்டில்கண்டால்
'உன்காற்றுப் படஏங்கித்தவித்தபடி
நதிக்கரையில் ஒருநற்காளை
தன்கால்கள் இற்றுவிழக் காத்துள்ளான்'
என்றுசொலத் தவறாதே நீ!

"அடையாளம் தெரியாதே என்றெண்ணிச்
சொல்லாமல் அகலாதே நீ!
குடைமாவை வெண்முல்லைக் கொடியோடித்
தழுவவரும் குளிர்பூந் தோட்டம்
உடையவொரு சிறுவீட்டின் மாடத்தில்
மயிலேயொன் றுலவாநிற்கும்
தடையில்லை அதுவேதான் என்காதல்
தீஞ்சாறு, சாற்றிச் செல்வாய்!

"தோழியர்கள் சூழ்ந்துள்ள நேரத்தில்
போயங்கே சொலவும் நேர்ந்தால்,
'வாழையிளம் குருத்தெண்ணி, தீப்பட்ட
ஓருயிர்தான் மனம்விட் டேங்கி
நாழிபல போக்குதடீ!' என்றுரைக்கிற்
போதுமவள், நன்றாய்க் கண்டு
'வாழியநீ' என்றுன்னைப் புகழ்ந்தேத்தி
வெகுவிரைவில் வருவாள் ஓடி"

என்றந்தக் காதலிளம் ஏறுசொலத்
தலையாட்டி ஏற்றுச் சென்ற
தென்தென்றல், பெண்மயிலின் தோகையெனும்
துகில்முனையைச் சிறிதே பற்றி
வென்றியுடன் அசைத்தாட்டிச் 'செய்திஇது'
என்றுரைக்க, விரைவாய் அன்பன்
நின்றுதவம் செய்யுமிடம் சேர்ந்திட்டாள்
வெண்மணலில் நிலவில் கொள்ளை!........



# உலர்ந்த சருகு

இராதா மணாளன்

‘‘மாணிக்கம்! வீட்டில் என்ன விசேஷம், வேப்பிலை எடுத்துச் செல்கிறாய்?’’

‘‘கல்யாணிக்கு உடம்பு சரியில்லை......’’

‘‘என்னப்பா உடம்பிற்கு?’’

‘‘அம்மை வார்த்திருக்கிறது பாலு!’’

‘‘அம்மையா? ரொம்பவும் கவலையோடு பார்த்துக்கொள்ள வேண்டுமே! நன்றாகப் பிரார்த்தித்துக் கொள் மாணிக்கம்! உனக்கு ஒரு குறையும் வராது!’’

‘‘பிரார்த்தித்துக் கொள்ளாத கடவுளே கிடையாது, பாலு. திருப்பதிக்குத் தாலி போடுவதாகவும், மைலத்திற்கு முடிதருவதாகவும், பழனிக்குப் பாலாபிஷேகம் செய்வதாகவும், நம் ஊர் மாரியம்மன் கோயிலில் அவளைப் போல உருவம் செய்து வைப்பதாகவும் அவள் சிறிய தாயார் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாள்! எல்லாம் அவன் விட்டவழி!’’

‘‘ஆமாம் மாணிக்கம்! தீட்டு கீட்டு படப் போகிறது. ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்! முத்துவைப் போய்ப் பார்த்து விட்டு வரணும்! நான் வரட்டுமா?’’

‘‘முத்துவைப் பற்றி உன்னிடம் சொல்லவே மறந்து விட்டேனே! நேற்று வீட்டிற்கு வந்தான்! நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவன் ஆரம்பித்து விட்டான் சூனா மானா பிரசாரத்தை! அம்மை ஒரு வியாதியாம்! வேப்பிலை அடிப்பதாலோ, கடவுளை வேண்டிக்கொள்வதாலோ அது போகாதாம்! சுத்தம் தான் முக்கியம், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று ஊசி போட்டுக் கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் சில நேரங்களில் ஆபத்தில் வந்து முடிந்தாலும் முடிந்து விடும், நம் அறியாமையில் பிறந்தவன் தான் ஆண்டவன் இப்படி ஏதேதோ கேட்டதை யெல்லாம் கொட்ட ஆரம்பித்து விட்டான்..................’’

‘‘மாணிக்கம்! அவனுக் கென்ன தெரியும்? நாம் மூவரும் தான் கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். அவனுக்கு மட்டும் ஞானோதயம் வந்து விட்டதாக, பிரகஸ்பதி எண்ணிக் கொண்டிருக்கிறான்! அவனென்ன செய்வான், மேடைப் பேச்சு மூளையைக் குழப்பி விட்டது!.........கடவுள்மேல் பாரத்தைப் போட்டு விட்டு நீ கவலையில்லாமலிரு, மாணிக்கம்! நான் வரட்டுமா?’’

‘‘போய்வா பாலு!’’

மாணிக்கமும் பாலுவும் மாஜி கல்லூரி மாணவர்கள்தான். ஆனால் அவர்களின் பேச்சைக் கேட்டால், பட்டிக் காட்டுப் பக்தர்களைவிட மோசமாக இருக்கும்! இன்றைய பட்டதாரிகளில் மாணிக்கங்களும் பாலுக்களும் தானே ஏராளம்!

வேப்பிலையும் கையுமாக வேகமாக நடந்தான் மாணிக்கம் தன் வீட்டிற்கு. வீட்டின் முன் பெண்களின் கூட்டமிருப்பதைக் கண்டதும், என்ன நடந்துவிட்டதோ என்றெண்ணிப் பதைபதைத்தான்! ‘‘ஆண்டவனே நீ தான் துணை’’ என்று மனதிற்குள்ளாகவே சொல்லிக் கொண்டு வீட்டை வந்தடைந்தான். அவன் அத்தை அருகே வந்தாள். அவள் கண்கள் கலங்கின; ஆனால் அடக்க முயன்றாள். மெதுவாகச் செய்தியை மாணிக்கத்திடம் கூறினாள். கேட்டதும் திடுக்கிட்டு அலறினான் மாணிக்கம். ‘‘கல்யாணி! உன் தலையெழுத்து இப்படியா ஆகவேண்டும்’’ என்று அழுதுகொண்டே கூறினான்.

‘‘மாணிக்கம், அழாதே. மாரியம்மாள் கோபித்துக் கொள்வாள்’’—அத்தை பயபக்தியோடு கூறினாள்.

‘‘மாரியம்மாள் கோபித்துக் கொள்வாளா? இன்னும் என்னதான் அவளால் செய்ய முடியும்?...எவ்வளவு பிரார்த்தித்துக் கொண்டேன்! எல்லாக் கடவுள்களுமா, மோசம் செய்ய வேண்டும்!’’

உடைந்த உள்ளத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகள் இவை!

முத்து அன்று கூறிய வார்த்தைகள் மாணிக்கத்தின் கவனத்திற்கு வந்தன.

* * *

'நம் அறியாமையில் பிறந்தவன்தான் ஆண்டவன். மனிதனுக்கு இன்னல் வருகின்ற நேரங்களில் இன்னொருவனை நாட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மனிதனை நம்ப அவன் தயங்குகிறான். ஆகவே வஞ்சகர் புனைந்துரைத்த மகேஸ்வரனிடம் தஞ்சமடைகிறான். முடிவில் மோசம் போகிறான்!''

* * *

வெங்கல மணியிலிருந்து கிளம்பிய ஓசையைப்போல இச் சொற்கள் அவன் காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்தன.

"உண்மை தான்! ஆண்டவன் இருப்பது உண்மையானால் இளகாதிருந்திருக்க முடியாது என் பக்தியினால்!''—கலங்கிய அவன் மனதிலிருந்து குதித்தெழுந்த எண்ணமிது.

* * *

கல்யாணியின் உடல் முழுவதும் இளமை நர்த்தனம் புரிந்தது. கருமுகிலின் வண்ணத்தைப் பெற்றிருந்தது அவள் கூந்தல். முல்லையை நினைவூட்டின பற்கள். உலக இன்பம் அவள் உதடுகளில் கூட்டிக் குழைத்துப் பூசப்பட்டிருந்தது. சங்கை வென்றது கழுத்து. வில்லை ஒத்தது புருவம். ஆனால் கண்கள்?..........பாபம்! கண்களில் மட்டும் ஒளியில்லை.

அம்மை போட்டதின் காரணமாகக் கண்களின் ஒளி போயிற்று. குருடி ஆனாள்! கல்யாணி, கண்ணில்லா அழகிய சிலை!

கண் போனதற்குக் கூட கல்யாணி அவ்வளவாக வருந்தவில்லை. ஆனால் தன் கணவனின் அன்பு, எங்கே, குறைந்தும் மறைந்தும் விடுகிறதோ என்றுதான் ஏங்கினாள்.

மாணிக்கம், தன் மனைவி கல்யாணியை முன்போலவே அன்பாக நேசித்து, மதிப்போடு நடத்தி வந்தான். கண்ணிழந்த கல்யாணி கவலைப்படக்கூடாது என்பதற்காக அவன் மனம் கோணாமல் நடந்துகொண்டான்.

கண்ணில்லையே ஒழிய கல்யாணிக்கு அவளது ஒவ்வொரு அவயவமும் கண்ணின் வேலையைத்தான் செய்தன. உட்கார்ந்த இடத்திலிருந்தே நடப்பவைகளை நுணுக்கமாக அறிந்து கொண்டாள். பேசுபவர்களின் குரலின் மென்மை, திண்மை, வேகம் இவற்றிலிருந்து அவர்கள் கோபமாகப் பேசுகிறார்களா, அன்போடு பேசுகிறார்களா, உள்ளொன்று வைத்து வெளியொன்று பேசுகிறார்களா என்ற அரிய நுட்பங்களையும் அறியும் ஆற்றல் நாளாவட்டத்தில் அவள் பெற்றுவிட்டாள். யாராவது நடந்து வந்தால், நடப்பதால் எழும் ஓசையிலிருந்து இன்னார் வருகிறார் என்பதையும் அறியும் ஆற்றல் பெற்றுவிட்டாள்.

மாணிக்கம் வேலைக்குச் சென்றுவிட்டதும், தனியாக அறையில் உட்கார்ந்துகொண்டு கண்ணிருக்கும்பொழுது அவள் கண்ட காட்சிகளை யெல்லாம் மனக்கண் முன் கொண்டுவந்து, பார்த்துப் பார்த்து சில நேரங்களில் இன்பமும் பல நேரங்களில் வருத்தமும் அடைவாள்!

ஒருநாள் மாலை! மாணிக்கமும் அவளும் கைகோத்துக்கொண்டு ஊரின் வெளியேயிருந்த மாந்தோப்பின் வழியே உலாவச் சென்றார்கள். மாமரங்களிலிருந்த உலர்ந்த இலைகள் காற்று வீசியதால் தரையை நோக்கி வேகமாக விழுந்துகொண்டேயிருந்தன! ஆனால் அதே காற்று பச்சைப் பசுமையான இலைகளை ஆனந்தமாக ஊஞ்சலாடச் செய்தன!

"காற்று இன்பமாக வீசுகிறதல்லவா அத்தான்!'' காதல் ஒளிவீசும் கண்களோடு கேட்டாள் கல்யாணி.

"ஆமாம்! வீசும் காற்றினால் மரத்திலிருக்கும் சில இலைகள் உதிர்கின்றன, சில இலைகள் களிப்போடு ஆடுகின்றன! வாழ்க்கையிலும் இப்படித்தான் நடக்கிறது கண்ணே! ஒரே நிகழ்ச்சி, சிலருக்குத் துன்பமாகவும் சிலருக்கு, இன்பமாகவும் அமைகிறது!''

—இந்தப் பழைய சம்பவம் அவள் கவனத்திற்கு வந்தது. உதிர்ந்த சருகுகளை எண்ணியதும் அவள் உள்ளம் நடுநடுங்கியது.

மரத்திலிருந்து அப்பொழுதுதான் உலர்ந்த இலைகள்—சருகுகள்—சலசலவென கீழே விழுவதைப்போல் அவள் ஒளியிழந்த கண்களின்முன் தோன்றியது. அக் காட்சி அவளை மிக மிக வாட்டிற்று. "ஆமாம்!

நானும் வாழ்வென்னும் மரத்திலிருந்து உதிர வேண்டிய சருகுதான்! இளம் வயதிலேயே இரு கண்களும் போயிற்று! அவர் அன்பு ஒன்றுதான் என்னை உயிரோடு இருக்கச் செய்கின்றது. இல்லையென்றால்..............'' இப்படி எண்ணங்கள் அவள் கவலை கப்பிய உள்ளத்தில் தோன்றின. கண்களில் நீர் நிறைந்தது.

அவள் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களில் பலவற்றை மறந்துவிட்டாள். ஆனால் இரண்டைமட்டும் அவளால் மறக்கவே முடியவில்லை! ஒன்று, மாமரத்திலிருந்து சருகுகள் உதிர்ந்தது! அக் காட்சி அவளை வாட்டி, இனி உயிர் வாழ்வதில் பயனில்லை என்ற கெட்ட எண்ணத்தை ஊட்டிவந்தது!

மணமான புதிது; தனி அறை; கல்யாணி மிரள மிரள நின்றுகொண்டிருந்தாள்; ஆசை யொளி வீசும் கண்களோடு அருகில் வந்து மெல்லக் கைபிடித்தான் மாணிக்கம்—இது இரண்டாம் காட்சி. இக் காட்சியின் நினைவுதான் அவளைச் சிறிது ஆறுதலாக மூச்சு விடச் செய்தது!

நாட்கள் சென்றுகொண்டே யிருந்தன. கல்யாணி தன் கன்னங்களைத் தடவிப் பார்ப்பாள். கன்னங்கள் சிறிது ஒட்டிவிட்டதுபோல் அவளுக்குத் தோன்றும். மாலையில் கணவன் வேலையிலிருந்து வந்ததும், ''என் கன்னங்கள் ஒட்டியாவிட்டன அத்தான்?'' என்று வருத்தமான குரலில் கேட்பாள்.

''கல்யாணி! நீ வீணாக மனதைப் புண்படுத்திக்கொள்கிறாய்! உன் கன்னங்களின் மினுமினுப்பு சிறிதுகூட குறையவேயில்லை! என் சொல்லை நம்பு கல்யாணி'' என்று ஆறுதல் கூறுவான்.

ஒருநாள், கல்யாணி, தன் கூந்தலை கோதிக் கொண்டிருந்தாள். ஒருவேளை நம் கூந்தல் நரைத்துவிட்டிருக்குமோ என்ற அர்த்தமற்ற சந்தேகம் அவள் மனதில் தோன்றிற்று. அன்று மாலை தன் கணவன் வந்ததும், ''என் அத்தான், கூந்தல் நரைத்தா விட்டது?'' என்று கவலையும் ஐயமும் கலந்த குரலில் கேட்டாள்.

''நரையா? உன் கூந்தலிலா? கண்கெட்டு விட்டதாலேயே மற்ற அனைத்தும் கெட்டுவிடுமென்று நினைக்கிறாயா? நானெவ்வளவு நாட்களாகச் சொல்லிவருகிறேன், வீண் சந்தேகம் கொள்ளாதே என்று!''

''இல்லை அத்தான், கோபித்துக்கொள்ளாதீர்! கண்ணிருந்தால் உங்களைக் கேட்பேனா?''—அவள் முகம் வாடிவிட்டது.

''கண்ணிருந்தால் உங்களைக் கேட்பேனா?'' என்ற சொற்கள் மாணிக்கத்தின் உள்ளத்தைக் குத்திக் கண்ணீர் வடியச் செய்துவிட்டன.

யாரோ வரும் சப்தத்தைக் கேட்டதும் மாணிக்கம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். கல்யாணி, கண்களில் அரும்பிய முத்துக்களைத் தன் புடவையின் முனையில் எடுத்துக்கொண்டாள்.

''யார் அத்தான் வருவது! நம்ப பார்வதியா?''

''ஆமாம் கல்யாணி!.........

' வா பார்வதி!''

பார்வதி வந்து கல்யாணியின் அருகில் உட்கார்ந்தாள்.

''கல்யாணி! பார்வதியும் வந்துவிட்டாள். வழக்கப்படி கச்சேரியை ஆரம்பித்து விடுங்கள், நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு அறையைவிட்டு மாணிக்கம் வெளியே சென்றுவிட்டான்.

தான் பார்த்ததும் கேட்டதுமான பற்பல செய்திகளைப் பார்வதி கூறுவாள். அதனைக் கேட்டு கல்யாணி மகிழ்வாள். இது வழக்கமான கச்சேரி!

* * *

கல்யாணியின் சிற்றப்பனின் மகள் பார்வதி. அவளுக்குக் கல்யாணம் ஆயிற்று. ஆனால், கணவன் அவளை வைத்து வாழவில்லை. வாழாவெட்டி அவள்! காரணம்—தனிக் கதை!

கல்யாணியின் வீட்டின் பக்கத்து வீடேதான் பார்வதியின் வீடும். ஆகவே பார்வதி எப்பொழுதும் கல்யாணியின் வீட்டிலேயே யிருக்க வசதியாயிருந்தது! பெற்றோர்களும் கண்ணில்லாப் பெண்ணுக்குத் துணையாக இருக்கட்டுமே என்றெண்ணி ஒன்றும் சொல்லுவது கிடையாது.

ஆண்டுகள் ஒன்று, இரண்டு, மூன்று சென்றன. கல்யாணியை, மாணிக்கமும் பார்வதியும் கவலையை உணராமல் இருக்கும்படி செய்துகொண்டே வந்தாலும், கண்ணிழந்த வருத்தம் அடிக்கடி அவளை வாட்டிவந்தது.

வருத்தம், அவள் உடலை நிலை குலைக்கத் தொடங்கிற்று. கன்னங்களின் சதைப்பற்று நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்து, கடைசியில் அவை ஒட்டிய கன்னங்களாகவே ஆகிவிட்டன! கூந்தலில் நீ அதிகமா நான் அதிகமா என்று போட்டிபோடத் தொடங்கின கருப்பும் வெள்ளையும்!

ஆரம்பத்தில் மாணிக்கம், கல்யாணிக்குக் கண்ணாடியாக இருந்து வந்தான். கண்ணாடி உண்மையைத்தான் சொல்லிவந்தது முதலில்!

மனைவிமனவருத்த மடைதல் கூடாதென்ற ஓரே காரணத்திற்காக, மாணிக்கம், பின்பு, ஒட்டிய கன்னங்களை, பொன்னொளி வீசும் கனனங்களென்றும், நரைத்த கூந்தலை கருநிறக் கூந்தல் என்றும் பொய் கூற ஆரம்பித்தான்.

* * *

கல்யாணி, நாட்கள் செல்லச் செல்ல எங்கும் ஒருவித மாற்றம் ஏற்பட்டுக்கொண்டு வருவதை உணர ஆரம்பித்தாள்.

கணவன் முன்போல அதிகநேரம் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு இன்பமாகப் பேசிக்கொண்டிருப்பதில்லை. அவன் பேச்சு வெளி வரும்பொழுது முன்போல் உண்மையும் ஆசையும் அதில் குழைந்து வருவதாக அவளுக்குத் தோன்றவில்லை.

"பார்வதியும் முன்போல் கலகலவென்று நம்மிடம் பேசக் காணோமே! யாருக்கோ பயந்து தன் கடமையைச் செய்பவளைப்போல் அல்லவா பேசுகிறாள்? நானும் அவளும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அவர் வந்தால் அவள் குரலில் ஏன் மாற்றம் ஏற்பட வேண்டும்? அத்தானிடம் பேசும்பொழுது அவள் வார்த்தைகளில் ஏன் அவ்வளவு துடிப்பிருக்கவேண்டும்?......"

பார்வதியின் குழம்பிய உள்ளத்தில் இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன. நாளுக்கு நாள் மாணிக்கத்தினிடமும், பார்வதியினிடமும் ஏற்பட்டுவந்த மாற்றத்தைக் கண்டு அவள் கலங்கினாள்.

பாபம், கலங்காமல் எப்படியிருக்க முடியும்? கண்ணிழப்பதற்கு முன்பு, அவள் பெற்ற இன்பம், மாலை நேரத்தில் கண்களால் கணவனை வரவேற்கும்பொழுது ஏற்பட்ட களிப்பு, அவனோடு கைகோத்துச் சென்று இயற்கையின் அழகைக் கண்டு மகிழ்ந்த நேரங்கள், இவற்றை ஒருமுறை அவள் நினைத்தால் போதுமே, அவள் வாழ்க்கை சருகாகிவிட்டதென்பதை உணர! சருகான தன் வாழ்க்கை, உலர்ந்த சருகு ஆக மாறும் வகையில் வீட்டின் சூழ் நிலை மாறிவருகிறதென்பதை எண்ணும்பொழுது அவள் உள்ளத்தில் இரத்தம் கசியத்தானே செய்யும்?

உலர்ந்த சருகின் வரலாறே ஒரு சோக சித்திரம்! அது இளம் துளிராக இருக்கும் பொழுது, தான், பின்னர் உலர்ந்த சருகாகப் போகின்றோம் என்ற உண்மையை எண்ணியே இருக்காது!

இளம் துளிர், பின்னர் கொழுந்தாக மாறுகிறது. கொழுந்து சிறிது முற்றித் தளிராகிறது. தளிர் வளர்ந்து பச்சைப்பசேலென்ற அழகிய இலையாகிறது. அதே இலை வளர்ச்சியென்ற நஞ்சுண்டு மஞ்சள் நிறம் பெற்று பழுப்பாகிறது! பழுப்பு காய்ந்து சருகாகிறது! சருகு, உலர்ந்த சருகாகிப் பயனற்றுப்போகிறது!

ஒரு இலையின் வாழ்க்கைக்கும் கல்யாணியின் வாழ்க்கைக்கும் சிறிதுகூட வித்தியாசமே கிடையாது!

கல்யாணி பிறந்தபொழுது இளம் துளிர்; கொழுந்தானாள் தவழத் தொடங்கியதும்! தவழ்ந்த குழந்தை கல்யாணி நடக்கவும் ஓடவும் பேசவும் தொடங்கியதும் தளிரின் நிலையை அடைந்தாள்! உடலில் இளமை கவர்ச்சிபெற்று, மின்னத் தொடங்கியதும் இலையானாள்! இலை பருவத்தில், மாணிக்கத்தை மணந்து, இன்பமென்ற காற்றில் மிதந்தாள்! அம்மை என்ற நோய் வந்தது. அவள் பழுப்பானாள்; கண்போயிற்று! பழுப்பான கல்யாணி சருகானாள்! சருகான அவள், மாணிக்கம் பார்வதி இவர்களிடம் ஏற்பட்ட மாற்றத்தால் எங்கு உலர்ந்த சருகாகிவிடுகிறோமோ என்றெண்ணியேதான் வருந்தி கண்ணீர் விட்டாள்!

* * *

ஓர் இரவு! கல்யாணி மாடியில் தன் அறையில படுத்திருந்தாள். சருகான தன் வாழ்க்கையை எண்ணிய வண்ணம் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள்.

இரவு நடுநிசி! வானில் மின்னல் கண்களைப் பறித்தது! பயங்கரமான இடியின் கர்ஜனை! சிறிது நேரத்தில் மழைகொட்ட ஆரம்பித்தது! இடை இடையே இடியின் கோரச் சப்தம்!

இடியின் சப்தத்தைக் கேட்கக் கேட்க கல்யாணியின் உள்ளத்தில் பயம் அதிகரிக்க ஆரம்பித்தது. மெதுவாக எழுந்து தடவிக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்து, தன் கணவனின் அறைக்குப் போக ஆரம்பித்தாள். அந்த அறையின் அருகே சென்றதும் திடுக்கிட்டு நின்றாள்!

நடுநிசியில் தன் கணவனோடு தன்னந்தனி அறையில் பார்வதி பேசுகிறாள் என்பதை அறிந்ததும் அவள் உடல் முழுவதும் கருந்தேள் கொட்டியதுபோன்ற உணர்ச்சி யேற்பட்டது. அவர்கள் என்ன பேசுகிறார்களென்பதை அறிய வேண்டுமென்று அவள் உள்ளம் துடிதுடித்தது! ஆகவே கதவின் அருகே காது வைத்துக் கேட்கலானாள்.

"மெதுவாகப் பேசு பார்வதி! அடுத்த அறையில் கல்யாணியிருக்கிறாள்!"

"அவள் கேட்டாலென்ன, வீட்டை விட்டு ஓடிவிடுவாளா! கண்ணற்ற கபோதி!"

"என் வாழ்க்கையைக் கெடுக்கவே அவள் கண்ணிழந்தாள்!"

"வாழ்க்கையைக் கெடுக்க அல்ல, உங்களையும் என்னையும் ஒன்றாகச் சேர்க்கத்தான் அவள் கண்ணைத்தியாகம் செய்தாள்! தியாகத்தின் சொரூபி!"

கல்யாணியின் புருவங்கள் படபடவென்று அடித்துக் கொண்டன! கண்ணீர் ஆறுபோல் ஓடியது! "என் வாழ்க்கை சருகு அல்ல! உலர்ந்த சருகாகவே ஆகிவிட்டது."—அவள் உள்ளத்தில் அலைமோதிற்று இவ் வார்த்தைகள்! மேலும் பேச்சு அவள் காதில் விழுந்தது!

"போதும் போதும் என்னை வர்ணித்தது! ஒட்டிய கன்னத்தவளை மினுமினுத்த கன்னத்தவளே என்றும், நரைத்த கூந்தலை, கருநிறக் கூந்தலென்றும் கூறும் தங்களின் ஏச்சுப் பேச்சுத்தானே இது........"

கல்யாணி தன் கன்னத்தைத் தடவிப் பார்த்தாள்! கூந்தலை அறுந்து விழும்படி ஆத்திரமாக இழுத்தாள்! "உலர்ந்த சருகு உலகிலிருக்கவே கூடாது!"—அவள் உதடுகள் அசைந்து வேகமாக இச்சொற்களை வெளியே தள்ளின! இன்ப அணைப்பில் கட்டுண்டிருந்த இருவரின் காதுகளிலும் இவ் வார்த்தைகள் கேட்டன! அலறித் தனியானார்கள். மாணிக்கம் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்! கல்யாணி வேகமாகச் சென்றுகொண்டிருந்தாள். "கல்யாணி, கல்யாணி" என்று அழைத்துக்கொண்டே பின் சென்றான். "உலர்ந்த சருகு!" என்றாள் தேம்பும் குரலில்! "என்ன?" என்று அவன் கேட்டு முடிப்பதற்குள், கல்யாணி மாடியிலிருந்து கீழே குதித்து விட்டாள்.

"அய்யோ கல்யாணி!" என்று கதறினான்! மாணிக்கமும் பார்வதியும் விளக்கெடுத்துக்கொண்டு உயர்ந்த மாடியிலிருந்து கீழே ஓடினார்கள்.

மண்டையுடைந்து, ஆவி பிரிந்து பிணமாகித் தரையில் கிடந்தாள் கல்யாணி!

மாணிக்கத்தின் அறியாமை அவள் கண்களைப் போக்கியது! அவன் துரோகம் அவள் உயிரையே போக்கியது!!

---

## பிழை திருத்தம்

இம் மலர் 28-ம பக்கத்தில் பாரி நிலையம் விளம்பரத்தில் 59, பிராட்வே, சென்னை என்பதற்குப் பதிலாக 54, பிராட்வே என்று தவறாக உள்ளது, திருத்தி வாசித்துக்கொள்ளவும்.


| | |
|---|---|
| அண்ணாவின் சிறுகதைகள் ரூ. | 1-0-0 |
| வ.உ.சி.யின் வீரகர்ஜனை | 0-12-0 |
| வானொலியிலே கி.ஆ.பெ. விசுவநாதம் பேச்சு | 1-0-0 |
| வீராயி தமிழ் ஒளியின் காவியம் | 1-4-0 |
| 10 சிறந்த பேச்சாளர்கள் சொல்லோவியங்கள் | 1-0-0 |
| அறிஞர் அண்ணாத்துரையைப் பற்றிப் பலர் எழுதிய தொகுப்பு நூல் 120 பக்கங்கள் | 1-8-0 |
| சௌமியன் பாரதிதாசன் | 1-4-0 |
| கோகில ராணி, புதுவைச் சிவம் | 1-0-0 |

தபால் கூலி வேறு 0-3-9 தபால் தலை அனுப்பினால் 'விதியின் வழி' அனுப்பப்படும்.

தாகூர் அன் கோ.

புதுச்சேரி

# பழமையிலே, புது நினைவு!

மா. இளஞ்செழியன்

இரண்டு மலைச் சரிவுகளுக்கிடையே அகலமானதோர் பள்ளத்தாக்கு. பசும் புல்தரை. கண்கவரும் காட்சிகள். சின்னஞ்சிறு செடிகள் செடிகளின் "கண்ணாமூச்சி" விளையாட்டு. மந்தமாருதத் தென்றல். அதை வரவேற்கும் பழமுதிர் சோலை. சோலைக்கருகே சிரித்து விளையாடும் சிற்றாறு. அந்த ஆற்றின் அன்பணைப்பில் மகிழ்வதற்கென்றே மலையுச்சியிலிருந்து உருண்டோடி வருகின்ற அருவிநீர். அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிக் கொண்டு 'காதல் விளையாட்டு' புரியும் காட்சி கண்டு களித்திடும் சிறு நாரை, ஆற்றோரத்தில்.

பள்ளத்தாக்கின் நடுவிடத்தில், கனி குலுங்கும் சோலைகள் நாற்புறமும் சூழ்ந்திருக்க, இனிய எளிய தோற்றத்தில் ஆனால் உள்ளம் கவரும் உயரிய முறையில் அமைந்திருக்கும் சிற்றூர். அங்கே மனித வாழ்க்கை. ஓராயிரம் பேர் கீற்றுக் குடிசைகளை வரிசை வரிசையாக அமைத்து, அங்கு வந்து வந்து போகும் தென்றற் காற்றின் பொன்னூசலில் ஆடிய வண்ணம் வாழ்க்கை இன்பத்தைச் சுவைத்துக் கிடந்தனர்.

அமைதியான வாழ்க்கை. கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளம். காலையில் அதோ அந்த மலைச் சரிவுகளுக்கப்பால், கீழ்த்திசை வானத்தில், பொன்னுருக்கு வெள்ளத்தில், மெள்ள மிதந்துகொண்டு மேலேறி வருகின்றதே ஞாயிறு, அது எழும்போது அவர்களும் எழுகின்றனர். மலைப் புனத்திலிருந்து, வீட்டுப் பைங்கிளிகள், முன்னாள் கொண்டுவந்த வள்ளிக் கிழங்கை, தேனை, தினைமாவை அள்ளி விழுங்குகின்றனர். அடடவோ அடடா! என்ன சுவை! என்ன சுவை! என்று நெஞ்சில் களிப்பேறிக் கூவுகின்றனர்.

வாயிலிட்ட தினை மாவையும் விழுங்காமுன்னே, சிறுவர்கள், ஆற்றோரம், தழை மரங்கள் அடர்ந்த தோப்பு, மலைச்சரிவு, மந்தைவெளி இவற்றைத் தேடிக்கொண்டு பறந்தோடிப் போகின்றனர். பெண்கள், நாளை உணவுக்கு வேண்டுமே என்றெண்ணி, கிழங்கும் தினையும் தேனும் பிறவும் உள்ள இடம் நாடி, தங்கள் குடும்ப நலன் நாடி செல்லத் தொடங்குகின்றனர். ஆண்களின் கூட்டமோ வீட்டுத் திண்ணையிலும் வீதி முனையிலும் ஆலமரத் தடியிலும் அங்கும் இங்கும் கூடி நின்று "கதைபேசத்" திட்டமிட்டனர்.

பகல் உணவு தீர்ந்தது. பொழுது சாய்ந்தது. ஞாயிறு மறைந்தது. அந்தி வான் செக்கரழகு வந்தது, போயிற்று. அந்த நேரத்தில் ஊர் மக்களெலாம் திரண்டு ஒரு கோடியில் உள்ள ஒதுக்கிடம் ஒன்றை அடைந்தனர். அங்கே, தாடியும் சடையும் முடியும் கொண்டு வெள்ளை ஆடை உடுத்து, ஏதோ நைந்து போன பழம் ஏடுகளைக் கையில் விரித்து வைத்து, அவற்றைப் பார்த்துப் பார்த்து, குனிந்த தலை நிமிராமல், முணுமுணுத்துக் கொண்டிருந்தனர் சிலர். வந்த கூட்டம் பய பக்தியோடு நின்றது. பின்னர் அடக்க ஒடுக்கத்தோடு அமர்ந்தது. அவர்கள் முணுமுணுப்பது என்ன என்பதை இவர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. அறிந்துகொள்ளவும் இவர்கள் முயலவில்லை. ஆனால் அங்கே இருந்த முதியவர்கள்மீது வைத்த கண் வாங்கவில்லை இவர்கள். அவர்களிடம் பறிகொடுத்த செவிகளையும் மீட்கவில்லை. இப்படியே கொஞ்சநேரம் சென்றது. பிறகு இவர்கள் எழுந்தார்கள். அவர்களுக்குத் தலைவணங்கினார்கள். பின்னர், தத்தம் இல்லம் திரும்பி விட்டார்கள்.

இது நாள்தோறும் நடந்து வந்தது.

ஏன் இப்படி நடக்கிறோம் என்பது இவர்களுக்குத் தெரியாது.

"அந்தப் பழைய ஏடுகள்" என்ன என்பதையும் இவாகள் அறியமாட்டார்கள்.

அவற்றைப் பார்த்துப்பார்த்து அந்த முதியவர்கள் முணு முணுப்பது ஏதுக்கு?— இது புரியாத பிரச்சினை, இவர்களுக்கு.

ஏது எவ்வண்ணம் ஆயினும் இந்த மாலை நிகழ்ச்சி மட்டும் தவறாமல் நடந்துவந்தது.

* * *

"அப்பா அவர்கள் யார்?"

"முற்றுந் தெரிந்தவர்கள்"

"முற்றும் என்றால் என்ன அப்பா!"

"எல்லாம்"

"எல்லாம் என்றால்......"

"இதோ இந்த மலைகள், காடுகள், ஆறுகள், மலைமேலே உள்ள வானம், அதில் வட்டமிடும் நிலவு, பகலில் பவனிவரும் ஞாயிறு இவை எல்லாம் எப்படி வந்தன என்பது அவர்களுக்குத் தெரியும். நீ பிறப்பதற்கு முன்னே, என் தந்தையார் பிறப்பதற்கும் முன்னே என்னஎன்ன நடந்தது என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். நாமெல்லாம் போய்விட்ட பிறகு என்ன நடக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை."

"அந்தப் பழைய ஓலைச் சுவடி...........அது என்னப்பா? அதில் என்ன இருக்கிறது?

"அதுவா, அது நமக்குத் தெரியாது. அவர்களுக்குமட்டுந்தான் தெரியும்."

"ஏனப்பா, நீ எப்போதிருந்து அந்த இடத்திற்குப் போய்ப்போய் வருகிறாய்?"

"உன்னைப்போல சிறு பிள்ளையாய் இருந்ததிலிருந்து. ஒரு நாள், தோப்பில், விளையாடிக் கொண்டிருந்தேன். உன் தாத்தா ஓடி வந்து, "அடே கழுதை, அங்கே 'வழிபாடு' நடக்கிறது, இங்கே என்னடா செய்கிறே, வாடா வா" என்று சொல்லி, இழுத்துக் கொண்டு போனார்.

"இனி நாள்தோறும் இந்த நேரத்தில் எங்கும் போகாதே. என்னுடனேயே வரவேண்டும். தெரியுமா?" என்றார். அன்று முதல் தான் போகிறேன்."

"அங்கே ஏன் போகவேண்டும்"

"வழிபாட்டிற்குப் போகாமல் இருக்கலாமா? அப்பா போனாரே, தாத்தா போனாரே, போகத்தான் வேண்டும்."

"ஏன் போகவேண்டும் என்கிறேன் அப்பா'

"இது என்ன கேள்வி, வழுதி? வழிபாட்டிற்குப் போகவேண்டும். அவ்வளவுதான். ஏன் என்று கூடவா கேட்பார்கள்! சாயுங்காலம் கிழங்கு தின்கிறோம், ஏன்? காலையில் எழுந்ததும் தினை அரிசியைப் புடைத்துக் குத்தி அரைத்துத் தின்கிறோம், ஏன்? அப்படித்தான் இதுவும்."

"அவற்றைப் பசிக்காகத் தின்கிறோம். தினை தின்னாவிட்டால் பசி எடுக்கிறது. கிழங்கு இல்லாவிட்டால் தூக்கம் வரவில்லை. ஆனால் வழிபாடு இல்லாவிட்டால் பசிக்க வில்லையேப்பா ஏன் அப்பா"

"வழுதி, நிறுத்து. இப்படியெல்லாம் பேசாதே. யாராவது கேட்டால் என்ன நினைப்பார்கள்?"

* * *

வழிபாட்டிற்குத் தன் மகனை அழைத்துப் போய்வந்த தந்தைக்கும், மகனுக்கும் ஓர் நாள் நடந்த உரையாடல் இது.

வழிபாடு ஏன்?

இது புதுக் கேள்வி.

யாரும் இதுவரை இப்படிக் கேட்டதில்லை.

இந்த வழுதிதான் கேட்கிறான்.

இதற்கு என்ன விடை?

எனக்குக்கூடத் தெரியவில்லையே!

எத்தனை ஆண்டுகளாய் வழிபாட்டிற்குப் போய் வருகிறேன்!

எவ்வளவு ஆண்டுகளாய் "அந்தப் பழைய ஏடுக"ளைப் பார்த்துவருகிறேன்!

"அவர்க"ளுடைய வழிபடு மொழிகளைக் கேட்டுக் கேட்டு அவை எனக்கு மனப் பாடம் கூட ஆய்விட்டனவே!

அவற்றிற்கு என்ன பொருள்?

வழுதி கேட்கிறான்.

நமக்கெல்லாம் தெரியாது என்று சொல்லி விட்டேன். ஏன் தெரியவில்லை?

"அவர்க"ளையே கேட்கலாமா?

கேட்டால் சொல்வார்களா?

அவர்களை இதுவரை ஒன்றுமே கேட்டதில்லையே!

ஊரார் என்னைத் தூரத்திவிட்டால்!

ஐயோ வேண்டாம், வேண்டாம்! கேட்க வேண்டாம். தெரியவேண்டாம். தெரியவே வேண்டாம்.

—மகன் கேள்வி தந்தையின் உள்ளத்தில் எழுப்பிய போராட்டம் இது.

* * *

ஒழுங்காகப் பெய்துவந்த மழை ஒருமுறை தவறிவிட்டது. மழை இன்றுவரும் நாளைவரும் என்று ஊரார் எதிர்பார்த்தனர். வரவில்லை

ஒருநாள், இருநாள், பத்துநாள், இரண்டு வாரம், மூன்றுமாதங்கள், ஓர் ஆண்டு—மழையே இல்லை.

வெயில்! கடும் வெயில்!

முதலில் இதை ஊரார் கவனிக்கவில்லை. மழையைப்பற்றி அவர்களுக்கென்ன கவலை, தானும் தினைமாவும் கிடைக்கும் வரை!

திடீரென்று ஒருநாள் முன்போல் தினைமா வேண்டும் அளவு கிடைப்பதில்லை என்பதை அறிந்தனர்.

பிறகு, தினை, மேலும் குறைந்தது. பிறகு, கிடைக்கவே இல்லை. வள்ளிக்கிழங்கும் அரி தாயிற்று.

மலை, செடிகொடியற்ற பொட்டல் ஆயிற்று. று, வற்றிப் போய்விட்டது. அருவி றைந்தே போயிற்று.

உயிர் கொன்று தின்னும் கானல், எங்கும்!

பசி! பசி! இதே பதைபதைப்பு எங்கும்!

தினை இன்றி ஒருவன் இறந்துவிட்டான்.

ஊர் முழுதும் இதே பேச்சு. எங்கும் க்கம்.

அனைவரும் 'வழிபாடு' நடக்கும் இடம் பாயினர். மாலையில் அல்ல! செத்தவன் தை கேட்டதும்! உச்சி வேளையில்! வெயில் தகிக்கும் நேரத்தில்!

அந்த வெள்ளுடை ஞானிகளின் காலில் ழுந்தனர். சேதி கூறினர். அவர்கள் சற்றே ம் அசையவில்லை. "அந்தப் பழைய ஏடு" ளப் பார்த்துக்கொண்டே, அவர்கள் ஓரே ருசொல் கூறினர். மக்கள் ஆவலோடு அதைக் ட்டனர். எழுத்து எழுத்தாகக் காற்றில் ந்துவந்தன பொ—று—மை—மூன்று ழுத்துக்கள்!

பொறுக்கவேண்டும் என்பது பொருள். ாறுத்தனர். பலன் இல்லை. மேலும் மூவர் , பசிக் கொடுமைக்கு.

ன் செய்வது, எங்குப் போவது?—மக் ருக்குத் தெரியவில்லை.

இடையே, 'மரணம்,' மேலும் மேலும் தன் ருப்புக் கரங்களை நீட்டி நீட்டி மக்களைத் பால் ஈர்த்துக் கொண்டிருந்தது.

ருவன்—இளைஞன்—துணிந்து கேட் ன், 'அதோ அந்த மலைக்கு அப்புறம் சென் என்ன' என்று! பழமையிலே புது நினைவு!

அனைவரும் சீறினர். நரகமடா அங்கே ற கூவினர்.

இல்லை! அங்கும் நம்மைப்போல மக்கள் இருக்கக் கூடும்! என்றான் இளைஞன்.

அறிஞர்களே சொல்லியிருக்கிறார்கள் நர கந்தானென்று—ஊரார் பதில்.

"அறிஞர்கள்! அறிஞர்களா அவர்கள்! மூடர்கள்! செல்லரித்துப்போன ஏட்டை வைத்துக்கொண்டு ஊரை ஏய்க்கும் உலுத்தர் கள்! பொருளறியாச் சொல் கூறிக்கூறி நம்மை நசுக்க வந்த கசடர்கள்! அறிஞர்க ளாம் அறிஞர்கள்! கொலைகாரர்கள்! இன்று காலை என் தம்பி வஞ்சிக்கோ செத்துப் போனான். நேற்றிரவு என் அண்ணன் எழுத்தச்சன் மாண்டு போனான். சற்று முன்னே அப்பாவும் போய்விட்டார். என்ன, என்ன செய்தார்கள் அறிஞர்கள்! நான் கேட் கிறேன், என்ன செய்தார்கள்?"

ஊரார் மிரண்டனர். அவன் பேசிக் கொண்டே போனான்:

"என் காதலி-பொற்கொடி—உங்கட்கெல் லாம் தெரியுமே அவள் அழகும் பண்பும் அறிவும் தெளிவும்—அவளும் போய்விட் டாள். பசி பசி என்று பதறி அழுதாள். நானும்தான் அழுதேன். வேறென்ன செய் வேன்! தினை இருந்தால்தானே கொடுக்க. செத்துப் போய்விட்டாள். இங்கே நாம் சாகி றோம் உணவின்றி! அங்கே 'அறிஞர்கள்'—அறிஞர்களா அவர்கள், மாபாவிகள்—வழி பாடு செய்கின்றனர்!

"வழிபாடா அது! வெறுங்கூச்சல்! பிதற் றல்! வீண் ஆரவாரம்! தவளைகள் கத்தவில் லையா தோட்டத்தில், அதுபோல கருத்தற்ற ஓசை!

"மூடர்கள் நாம். வழிபாடு என நம்பி னோம் அதை! கெட்டோம்.

"நான் போகிறேன். மலையைத் தாண்டிப் போகிறேன். ஒருவேளை அந்தப் பக்கம் ஊர் இருக்கலாம். ஒருவேளை அங்கே மக்கள் இருக்கலாம். ஒரு வேளை நமக்குத் தினை கிடைத்தாலும் கிடைக்கலாம். நாம் தப்பிப் பிழைத்தாலும் பிழைக்கலாம்.

"நரகம் இருக்குமா அங்கே! இருக்கட் டுமே! இங்கே மட்டும் என்ன இன்பத் துறக்கமா வாழ்கிறது!"

மூச்சுவிடாமல் பேசினான். பேசி முடித்த தும் ஓடினான்; ஓடினான்; மலையைத் தாண்டி, மலைச் சரிவைத் தாண்டி, அப்பால் உள்ள பள்ளத்தாக்கைத் தாண்டி, அதற்கு அப்புறம்

உள்ள முது குன்றத்தையும் தாண்டி! பின்னால் திரும்பிப் பாராமலே ஓடினான். ஊரார் கற்களை வீசினர் அவன்மீது. காலில் பட்டன சில கற்கள். குருதி கொட்டிற்று, ஆனாலும் ஓடினான்.

ஊர் மக்கள் அஞ்சி நடுங்கினர். பாவி! 'அறிஞர்'களைத் திட்டிவிட்டானே என்று நெஞ்சு நொந்து தம்மைத் தாம் சபித்துக் கொண்டனர்! ஆனால் சபித்துக்கொண்டே செத்துப் போய்விட்டனர். சாகாமல் என் செய்வர்? உணவு கண்டுதான் எத்தனையோ நாட்கள் ஆயினவே!

மிச்ச முள்ளவர்கள் "அறிஞர்"களிடம் சென்று மறுபடியும் கேட்டனர். மறுபடியும் அதே பதில்: பொறுமை! என்ன வியப்பு! அந்த 'அறிஞர்'களும் இளைத்து, மெலிந்து, எலும்புந் தோலுமாக இருந்தனர்.

மக்களுக்கு முதன் முறையாக 'அறிஞர்கள்' திறமையில் ஐயம் பிறந்தது.

இவர்களும் நம்மைப் போலத்தானே மெலிந்துவிட்டார்கள்!—எண்ணினர் சிலர்.

நம்மில் சிலர் போல இவர்களும் இறந்து விட்டால்!—பயந்தனர் சிலர்.

அவர்கள் பேச்சில் சலிப்புக் கொண்டனர் பலர். அந்தப் பழம் ஏடுகளிடம் வெறுப்புக் காட்டினர் பலர்.

வேறு வழியில்லை! பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். வேறு வழியில்லை! முன்னே தம்மால் அடிபட்ட இளைஞன் சென்றவழியே செல்லவேண்டியதுதான். இல்லையேல் சாக வேண்டியதுதான்! அந்த முடிவுக்கு வந்து விட்டனர், மக்கள்.

செத்தவர்கள் போக மிச்சமிருந்தவர்கள் ஐம்பது பேர்தான்.

மாண்டவர்கள் தவிர மீந்தவை ஆறு மாடுகள் தாம்.

மூன்று வண்டிகள் கட்டப்பட்டன. வண்டிக்கு இரு மாடுகள் பூட்டப்பட்டன! எல்லோரும் ஏறிக் கொண்டனர். உட்காரவே இடமில்லை. நெருங்கி ஒடுங்கி அடங்கி அமர்ந்தனர்.

வண்டிகள் புறப்பட்டன!

புறப்பட்டு விட்டன!

மலைபடிவாரத்திற்குக் கூட வரவில்லை. 'அறிஞர்கள்' ஓடிவந்தார்கள்! பழைய ஏடுகளைக் கீழே எறிந்துவிட்டு, ஐயோ எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினார்கள்! அன்பு காட்டுங்கள் அன்பு காட்டுங்கள் என்று ஈன குரலில் மெல்லச் சொல்லினர்.

வண்டியில் இடமில்லை. மக்கள் உள்ளத்தில் இடமிருந்தாலும் வண்டியில் இடமில்லை.

ஆகவே வண்டிகள் போய்க்கொண்டே இருந்தன.

வண்டிகளில் தொத்திக்கொண்டு ஏற பார்த்தனர் "அறிஞர்கள்." பிடித்துத் தள்ளப்பட்டனர் கீழே!

வீழ்ந்தவர்கள் எழுந்து பார்த்தபோது வண்டிகள் எவ்வளவோ தூரம் போய் விட்டன!

இவர்கள், 'அறிஞர்கள்,' இங்கே, பழைய உலகில், குறுகியஉலகில், இரண்டு மலைச் சரிவுகளுக்கிடையே உள்ள "தொன்மை உலகில்" செத்துச் சீரழிந்தபோது, அவர்கள், மக்கள், மலைகளை யெல்லாம் கடந்து போய்விட்டனர். பரந்த—புதிய—அழகிய உலகிற்குப் போய்விட்டனர். முதலில் தம்மால் அடிக்கப் பட்டவனை வாழ்த்திக்கொண்டே, அவனை அடித்துத் துரத்திய தம் அறியாமையை நொந்துகொண்டே, அவன் வகுத்த வழியில்லையேல் நம் கதி என்னாகும் என்று எண்ணிக்கொண்டே போய்விட்டனர்.

எங்களுக்கு இடமில்லையா இடமில்லையா என்று இந்த "அறிஞர்கள்"—நேற்றுவரை மக்களை ஏய்த்தவர்கள—பொய்மை, புளுகை புராணத்தைக் காட்டிக் காட்டி கள்ளம் அறி யாத உள்ளத்தவரை வஞ்சித்தவர்கள் கதறி கிடந்தார்கள் இங்கு. இவர்களால் வஞ்சிக்கப் பட்ட மக்கள் புதிய பாதையில் பயணம் செய்து, புது வாழ்வு வாழ்ந்தனர் அங்கு.

* * *

புது வாழ்வு புது வாழ்வு என்று சக்கா மிட்டேன் நான். "என்னங்க பொழுது புலர்ந்து எந்நேரமாச்சு! இப்படியாய் கனவு கண்டு புது வாழ்வு புது வாழ்வு என்று கூவு றீங்க" என்று கேட்டுக்கொண்டே என் மனைவி அங்கு வந்தாள். நான் கண்டது அவ்வளவும் கனவென்று தெளிந்தேன். என் கண்முன்னே என்வாழ்க்கைத் துணைவி தவிர வேறொன்று நின்று நர்த்தனமாடக் கண்டேன். என்னென்று பார்த்தேன். அது சுய மரியாதை இயக்கம்!

[வேற்று மொழிக் கதை ஒன்றின் தழுவல்]









# என் வீடு எனக்கே!

S. குருசாமி

அவரவர் வீடு அவரவருக்குத்தானே! இதிலென்ன சச்சரவு அல்லது சந்தேகம்?

பல வீடுகளுக்குச் சொந்தமான ஒருவரிடம் வீடேயில்லாத ஒருவர், "உமக்கு ஏனய்யா இத்தனை வீடுகள்? ஒன்று எனக்குத்தான் தாருமே!", என்று கேட்டால் அப்படிக் கேட்பது நியாயந்தானே, என்று சிலர் கூறுவார்கள். பல பழங்களை வைத்திருக்கும் ஒரு பரம ஏழைகூட ஒரு பழம் கேட்டால் மகிழ்ச்சியோடு தருவான். ஆனால் பல நூறு வீடுகளை வைத்திருக்கும் ஒரு லட்சாதிபதி ஒரு வீடு கூடக் கொடுக்கமாட்டான், இனாமாக அல்ல, வாடகையில்லாமல் கூட! இது ஒரு பெரிய விசித்திரமான மனப்பான்மை! பல்லாயிர ஏக்கர்களுக்குச் சொந்தமானவன் ஒரு ஏக்கர் நிலத்தை இனாமாகக் கொடுக்க இசைகின்றானா? இசையமாட்டான். இது ஒரு புற மிருக்கட்டும்.

ஒரே வீடு வைத்திருப்பவனை, வீடில்லாத ஒருவன் பார்த்து, "உன் வீட்டை எனக்குக் கொடு", என்று கேட்டால் என்ன சொல்வான்.?

"ஆஹா! அப்படியே ஆகட்டும்! நானென்ன தலையிலா தூக்கிக்கொண்டு போகப் போகிறேன்? இந்த சரீரம் நீர் மேற் குமிழி போன்றது! எந்த வீட்டுத் தெருத்திண்ணையிலாவது படுத்தால் போகிறது! நான் ஏகாங்கி! யோ, ஒரு குடும்பி, நீயே எடுத்துக்கொள்!" ன்று எவனாவது சொல்வானா?

அப்படியே முற்றுந் துறந்த மெய்ஞ்ஞானி ருவன் கூறுவதாகவே வைத்துக் கொள் வோம். வீடு கேட்ட குடும்பிக்குக் கொடுத் து போச மீதிப் பகுதியில் தானும் இருந்து ருவதாக வைத்துக் கொள்வோம்! மேலும் ில குடும்பங்கள் வந்து, "எங்களுக்கும் இடம் வேண்டும், தருவீர்களா?" என்று கட்பதாக வைத்துக் கொள்வோம். வீட்டுக் ரான் இசைவானா? எவ்வளவுதான் பொது டைமை உணர்ச்சி பொங்கி வழிந்தாலும் ன் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய ளவுக்கு அவனுக்குத் தியாக புத்தி ஏற்பட டியுமா? கெஞ்சிக் கேட்பவர்களுக்கே காடுக்க இசையமாட்டான் என்றால், அதட் க் கேட்டால் என்ன சொல்வான்?

"என் வீடு எனக்கே", என்று தானே கூறுவான்? உடலில் வலுவிருந்தால் முஷ்டியை உயர்த்திக் கூறுவான். இல்லாவிட்டால் நீதி மன்றத்தின் துணையை நாடுவான். அதற்கும் வசதியில்லாவிட்டால் அக்கம் பக்கத்து நண்பர்களின் துணையையாவது நாடித் தானே தீருவான்?

வீடு விஷயத்தில் உள்ள இதே தத்துவந்தான் நாடு விஷயத்திலும் புகுந்து கொண்டிருக்கிறது. படியுங்கள் மேலே!

"என், வீடு எனக்கே!" என்கிறான், வீட்டுக்குச் சொந்தக்காரன். "அமெரிக்கா அமெரிக்கருக்கே," என்கிறார்கள், அணு சக்தியின் ஆதிக்கம் பெற்ற அமெரிக்க நாட்டார். வெளிநாட்டான் வந்தால் நுழைவுச் சீட்டுக் கேட்கிறார்கள்! நிரந்தரமாகத் தங்குவதற்குத் தடை விதிக்கிறார்கள்.

ஜன நாயகத்தையே பெற்றெடுத்ததாகக் கூறும் பிரிட்டிஷார் மாத்திரம் ஏமாந்தவர்களா? யூதர்களை பாலஸ்தீனத்துக்கு அனுப்புவதிலும், நீக்ரோ போர் வீரர்களுக்கும் பிரிட்டிஷ் பெண்களுக்கும் பிறந்த குழந்தைகளைக் கூட வெளியேற்றுவதிலும் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர். அங்கும் கண்ட பேர் கண்டவாறு குடியேறிவிட முடியாது.

ஆஸ்ட்ரேலியாவை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு இங்கிலீஷ்காரரே குடியேறியிருந்த போதிலும் பிரிட்டிஷாரோ அமெரிக்கரோ (ஒரே இனமாயிருந்த போதிலும்) அங்கு இஷ்டம்போல் குடியேற முடியுமா? பழகிய நாய் ! புது நாயைக் கண்டால் சும்மா விடுகிறதா? அது போல!

பாலஸ்தீனத்தில், யூதர் குடியேறுவதா?— அராபியர் குடியேறுவதா என்ற போராட்டம் உயிர்ப்பலி மூலமல்லவா முடிவு கட்ட வேண்டியிருக்கிறது?

இலங்கை வாசிகளைத்தான் பார்ப்போமே! இவர்கள் இந்தியர்களைத் தாம்பூலம் வைத்தா வரவேற்கிறார்கள்? "இந்தியனே! வெளியேறு", "இலங்கைத் தீவு இலங்கை மக்களுக்கே!" என்று கூறவில்லையா?

பர்மாவுக்குள் இந்தியர் நுழைய முடிகிறதா? "பர்மா பர்மியர்களுக்கே!"! என்பது

| | | |
|---|---|---|
| நிலைபெற்ற சிலை (தமிழ் ஒளி) | .... | 1-0-0 |
| மாஜி மனிதர்கள் (மாக்ஸிம் கார்க்கி) | .... | 2-0-0 |

குழந்தைகள் கதை :—

| | | |
|---|---|---|
| செம்படவன் (குயிலன்) | .... | 0-4-0 |
| பாப்பா பாட்டு (தமிழ் ஒளி) | .... | 0-4-0 |
| அதிசய மோர்ச்சை (குயிலன்) | .... | 0-4-0 |
| ஏழைக்கந்தன் (தமிழ் ஒளி) | .... | 0-4-0 |
| தொழிலாளி (குயிலன்) | .... | 0-4-0 |

விவரங்களுக்கு :

**புதுயுக நிலையம்**

233, லிங்கசெட்டித் தெரு,

சென்னை 1.

## தமிழர் திருநாள் பொங்கலன்று
## ஓர் நற் செய்தி

எமது 'தங்கமணி பைப்பிங்', தங்கம் பாரதி 'பைப்பிங்' ஆகிய இருவகைகளும் சொந்த மேற்பார்வையில் கெட்டிச் சாய முறை, நீண்டகால உழைப்புக் கேற்ற உறுதியுமுள்ள வகையில் தயாரிக்கிறோம். தமிழ் நாட்டன்பர்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டுகிறோம்.

தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்கட்கு :

M. K. கதிர்வேல் முதலியார்,
தங்கமணி அண்டு கோ,
கீழ்க்கொடுங்காலூர் போஸ்டு,
வந்தவாசி தாலுக்கா,
வட ஆற்காடு ஜில்லா.

இரத்தத்தால் எழுதப்பட்டு விட்டதே! வேறு நாட்டான் அங்கே நுழைய முடியுமா?

மலேயா ஒரு குடியேற்றப் பிரதேசம் தானே! அங்கும் இதே கதைதானே! "மலேயா மலாய் நாட்டினருக்கே!" என்ற கூக்குரல் கிளம்பிவிட்டதே! இந்தியர் அங்கே நுழைய முடிகிறதா? போனால் திரும்ப முடியாது; திரும்பினால் போக முடியாது என்ற நிலையைத்தானே காண்கிறோம்?

"இவைகளெல்லாம் முதலாளி நாடுகள்; இப்படித்தான் இருக்கும்! குறுகிய மனப் பான்மைதானே! பரந்த உள்ளம்; சர்வ தேசீயக் கண் பார்வை; யாதும் ஊரே என்ற பொது நோக்கு—இவைகள் எப்படி இருக்க முடியும்?" என்று கருதலாம். பொதுவுடைமை ரஷ்யாவைத்தான் பார்ப்போமே! அங்கே வேற்று நாட்டான் நுழைய முடியுமா? உத்தரவில்லாமல் உள்ளே செல்ல முடியுமா? சென்றாலும் பூனைக் குட்டியை கோணிக்குள் போட்டுக் கொண்டு போய் விடுவது போல, வெகு சீக்கிரத்தில் வெளியேற்றி விட்டுத் தானே மறு காரியம் பார்க்கிறார்கள், ரஷ்ய சர்க்கார்? ஏன்? "ரஷ்யா ரஷ்யர்களுக்கே!" என்ற கொள்கை தான்.

இந்தியாவையே எடுத்துக் கொள்வோம். வெள்ளையனே, வெளியே போ என்று கூறியது எதற்காக?" இந்தியா இந்தியருக்கே!" என்ற கொள்கைக்காகத்தானே?

இந்த மாதிரிக் கூறுவது தேசத்துரோகம் என்றால் மேலே கூறிய மக்கள் அத்தனை பேரும் தேசத் துரோகிகளா?

துருக்கியின் பழைய வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். அதன் குரல்வளையைப் பிடித்துக் கொண்டிருந்த ஜர்மனியை வெளியேற்றுவதற்கு கமால் பாஷா என்ற அரும்பாடு பட்டிருக்கிறார்? துருக்கி மொழியில் அராபிச் சொற்களும் பாரசீகச் சொற்களும் பெருவாரியாகக் கலந்து (இன்றுள்ள திராவிட மொழிகளைப்போல) பாழ் செய்ததை ஒழித்துக் கட்டவில்லையா? வெளிநாட்டுச் சரக்குகள் மட்டுமல்ல, வக்கீல்கள், டாக்டர்கள் கூட துருக்கியில் நுழையக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கவில்லையா? "துருக்கி துருக்கியருக்கே, என்பது தான் என் லட்சியம்," என்று போர் முரசு கொட்டி வெற்றிக் கொடி நாட்ட வில்லையா? அவர் செய்தது தேசத்துரோகம் என்று எந்தத் துருக்கியனாவது கூறத்துணிவானா?

எனவே, "திராவிட நாடு திராவிடருக்கே!" என்று திராவிட மக்கள் கூறுவதில் தவறென்ன? திராவிட நாட்டில் மட்டும் திறந்த வீட்டிற்குள் நாய் நுழைவது போல கண்டவர்களெல்லாம் நுழைவானேன்? இந்தியாவுக்கு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சட்டம் இயற்றியது போல திராவிட நாட்டுக்கு டில்லி சட்டசபை சட்டம் இற்றுவானேன்? திராவிடத்துக்குச் சொந்தமான மக்களே இலங்கையிலிருந்தும், மலேயாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் துரத்தப்படும் போது, இங்கு, வேறு நாட்டான் வந்து பலாத்காரமாகக் குடியேறி ஆக்கிரமித்துக் கொண்டிருப்பானேன்? தன் சொந்தக் குழந்தைகளே வீட்டுக்கு வெளியே நின்று தவிக்கும்போது அன்னியன் தன் வீட்டிற்குள் புகுந்திருப்பதை, புகுந்து கொண்டு சொத்துக்களையும் சூறையாடுவதை, மான ஈன முள்ள வீட்டுக்காரன் எப்படிச் சகித்துக் கொள்வான்?

"போ! வெளியே!" என்று தான் சொல்வான்; இதில் தவறென்ன? வெளியே போகா விட்டால் அக்கம் பக்கத்தாரைத் துணைக்கழைக்க மாட்டானா? அதுவும் பயன் தராவிட்டால் தன் சக்தி முழுவதையும் பிரயோகித்தாவது வெளியேற்றத்தானே பார்ப்பான்?

இன்று திராவிட நாட்டில் நடப்பது முதல் கட்டம்! "போ! வெளியே!", என்று கூறும் கட்டம். இனி அடுத்த கட்டம் என்ன? எப்போது?

— —

ஞாயிறு தோன்றியதும்
நான் வேலைசெய்கிறேன்;
ஞாயிறு மறைந்ததும்
நான் ஓய்வு கொள்கிறேன்;
குடிநீருக்காகக் கிணறு
தோண்டுகிறேன்;
உணவுக்காக நிலம்
பயிரிடுகிறேன்;
மன்னர் பிரானின் அதிகாரம்
என்னை என்ன செய்ய முடியும்?

—சீனநாட்டுப் பழம்பாட்டு.


சிறிய கார்டு முதல்
பெரிய புத்தகம் வரை
எல்லா வகையான
அச்சு வேலைகளும்
★
குறித்த காலத்தில் அழகான
முறையில் செய்து
தரப்படும்.

**ஃபரீ பிரின்டர்ஸ் அச்சகம்**

147, பவழக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை.



**சிறந்த எண்ணங்களின்**
**படப் பிடிப்புகள்**

**வானொலியிலே ...!**
திருச்சி விசுவநாதத்தின்
ஏழு அரிய பேச்சுகள் விலை ரு 1-0-0
★
**வீராயி**
ஆசிரியர்: "தமிழ் ஒளி"
சமுதாயக்கொடுமைகளைச் சித்தரிக்கும்
சிறந்த காவியம் விலை ரு 1-4-0
★
**கி. பி. 2000**
ஆக்கம்: மு. வரதராசனார் M.O.L.
இனிவரும் உலகத்தைப்பற்றிய
அரிய சிந்தனைக் கதை விலை ரு 1-12-0
★
**சிறந்த பேச்சாளர்கள்**
படப்பிடிப்பு: தொடர்பன்
பத்துச் சிறந்த பேச்சாளர்களின் சொல்லாற்றல் விளக்கம் விலை ரு 1-0-0
★
**தமிழர் பதிப்பகம்**
81, லிங்கசெட்டித் தெரு,
சென்னை 1.

# தமிழர்

நாரா.

## 1

வீரமிக்க என்வெற்றித் தமிழே உன்னை
வேரறுக்கத் துணிந்துசில வீண ரெல்லாம்
ஊரறியப் பலமுயற்சி செய்தார் பின்னர்
உன்மக்கள் தமைப்பிரித்து வைத்தார் ஆனால்
சீரகமாம் தமிழகத்தில் செழித்த உன்றன்
செம்மைதனை நீக்குதற்கு முயன்ற பேரை
வேருடனே பறிப்போமென் றார்ப்பரித்து
வீறுடனே உன்மக்கள் கிளம்ப லானார்!

## 2

நெடுஞ்செழியன் ஆரியத்தின் படைக டந்தான்!
நெடுங்கதையாம் சிலப்பதிகா ரத்தை நாட்டிக்
கொடுத்தஇளங் கோவினுடை யண்ண னந்தக்
கொடியவரைச் சிறையிட்டான் பின் வடக்கே
படைஎடுத்துக் கலிங்கத்தை வென்றுவந்து
பாரரசன் அநபாயன் பரணி கொண்டான்.
தடைக்கற்கள் வருந்தோறும் தாவித் தாண்டித்
தாரணியிற் புகழடைந்தார் தமிழமக்கள்!

## 3

முயற்சிஎலாம் ஊரறியச் செய்து விட்டால்
முன்னேறுந் தமிழ்மக்கள் கோபங் கொண்டு
துயர்கொடுப்பார் என்றறிந்த சூழ்ச்சிக் காரர்
தூயசில நூல்கள்தமைத் தீயி லிட்டார்!
கயலோடும் நீரிலிட்டார்! கயமைத் தன்மை
காய்த்துப்போய் முற்றியதாற் காரங் கொண்டு
வியத்தக்க நூல்களுள்ளே சிலபாட் டுக்கள்
வேண்டுமென்றே புகுத்தியவர் தமிழ்கெடுத்தார்!

# திருநாள்

நாச்சியப்பன்

4

கீழ்ச்செயல்கட் கஞ்சாத பகைவர் தங்கள்
கெடுதல்செயும் நினைப்பினையும் செயலி லன்னார்
சூழ்ச்சிசெயும் திறத்தினையும் கண்ட மக்கள்
உளங்கொதித்தார்! வெகுண்டெழுந்தார் ஊரிலெல்லாம்
வீழ்ச்சியுற்ற தமிழர்நிலை விளக்கிக் காட்டி
வீணான வேற்றுமைகள் விலக்கச் சொல்லி
சூழ்ச்சிதன்னை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத்
தூள்தூளாய்த் தொலைப்பதற்குத் துவங்கிவிட்டார்!

5

பகைவர்களை எச்சரிக்கும் ஓர்நா ளாகப்
பாண்டியரின் வழிவந்த தமிழ மக்கள்
மிகையான மகிழ்ச்சியிலே திளைத்திருக்கும்
மேலான ஓர்நாளாய் இலங்குகின்ற,
வகைவகையாய்த் தானியங்கள் கரும்பு மஞ்சள்
வண்டிவண்டி யாய்க்குவியும் வளங்க ளார்ந்த
வகைசெய்யும் நன்னாளைப் பொங்கல் நாளை
வாழ்த்தி யவர் திருநாளாய்க் கொள்ளலானார்!

6

கழகங்கள் பலஅமைத்தார் செயல்க ளாற்றக்
கடிதினைஞர் பல்லோரும் துணிந்து வந்தார்!
உளமார்ந்த தொண்டாற்றி ஊர்கள் தோறும்
உயர்த்துகின்றார் செந்தமிழை வான் அளாவ!
பழகுதமிழ்ச் சொல்லருமை கேட்டு, மக்கள்
பைந்தமிழ்க்குத் தொண்டுசெயக் காத்துநிற்கக்
குழைந்தபொங்கல் ஏந்தி வந்து தமிழ மங்கை
குமரருக்கும் செல்வியர்க்கும் படைக்க லானாள்!

# சீர்திருத்த வேலையின் உயிர்நாடி !

உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்புபவர்கள் முதலில் பழக்க வழக்கம் என்கின்ற பிசாசுகளை ஓட்டிவிட வேண்டும். பழக்க வழக்கங்களை விட வேண்டுமானால், மனிதன், பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கத் தயாராய் இருக்கவேண்டும். அப்படி பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிக்டாது; விடகூ வெகு காலமாக நடந்து வருவதாகத் தெரியவருவதாலேயே ஒன்றை நம்பிவிடக் கூடாது ஏதாவதொரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய்த் தோன்றுவதாலேயே அதை தெய்வீகம் என்றோ, மந்திரசக்தி என்றோ, நம்பி விடக்கூடாது. எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலையில் இருந்து பகுத்தறிவிற்குத் தாராளமாய்விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் கண் மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்க முடியும்.



அப்படிக்கில்லாமல் எதையும் நம்பித்தானகவேண்டும்— பெரியவர்கள் நடந்தபடிதான் நடக்கவேண்டும் என்று நினைப்போமானால் எதை நம்புவது? யார் சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்த புத்தகம் கடவுள் சொன்னது? அதில் எது எது மத்தியில் மனிதனால் நுழைக்கப்பட்டது? அவைகளில் அறிவாளிக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமரமக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார் என்கின்றவை போன்ற ஐயவினாக்களுக்குத் தெளிவு எங்கே இருக்கிறது?

நமது சீர்திருத்த வேலையின் உயிர்நாடி இந்த இடத்தில்தான் இருக்கிறது; இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயும் இருக்கவேண்டும்.

—தலைவர் பெரியார்

# என்னைப்பற்றி ஒரு வார்த்தை!



எனக்குக் "கடவுள்" நம்பிக்கை கிடையாது. அது தீர்ந்தால்தான் மக்கள் உருப்பட முடியும் என்பது என் எண்ணம். கடவுள் நம்பிக்கை அதிகரித்திருப்பதைத் தமக்குச் சாதகமாக்கிப் பிழைக்கும் கூட்டத்திற்கு நான் விரோதி.

ஜாதி மதம் மனிதனுக்கு அவசியமில்லை; இருக்கக் கூடாது. மேலும், ஜாதி மதம் இருப்பதுகொண்டே பிழைக்கும் கூட்டத்திற்கு நான் விரோதி.

பார்ப்பனர் இத் தமிழ்நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டை. பார்ப்பனீயம் ஒழியவேண்டும் என்பது என் எண்ணம்.

இவைகள் என் கொள்கைகள் என்பதைத் தமிழ்நாடு முழுதும் அறியும். நான் என் எண்ணமாக எதையாவது எழுத நேர்ந்தால் இவைகளுக்கு அரண் செய்வதாகத்தான் எழுத முடியும். இதுபற்றி எனது பார்ப்பன நண்பர்களும், அல்லாத நண்பர்களும் என்னை வெறுப்பதும், தந்திரமாக என்னை மட்டந்தட்ட காரியம் செய்வதும் நாளடைவில் நடக்கிறது.

ஆயினும் அவைகளையெல்லாம் இடித்துத் தள்ளிக் கொண்டு என் எழுத்துக்கள் நிலைத்து நிற்பதைத்தான் நான் எதிர்பார்க்கிறேனே ஒழிய, சிறுபிள்ளையாண்டான்களின் சலசலப்பைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

—கவிஞர் பாரதிதாசன்.

# பழைய நினைவு

விசு. திருநாவுக்கரசு

அந்தக் கோடியில்தான் நண்பன் ராமுவின் டு. இந்த உலகத்தில் ஒரு உயிருக்காக ற்றொரு உயிர் உடலோடு ஒட்டிக் கொண்டி நக்கிறது என்றால் அவனுக்காக அவன்தாய் யிர்வாழ்ந்த நிலையைத்தான சொல்ல வேண்டும். பிள்ளையிடம் அவ்வளவு பாசம்.

நண்பன் ராமு, நல்ல வாட்டசாட்டமாய்ப் திறுமடி வேங்கை ஓயரம்! பொதுவாக நல்ல பையன். எங்கள் கூட்டதநில் அவ்வளவு ல்ல குணமும், உயரமும் உள்ள பையன் வேறு யாருமில்லை. அவனுக்குத்தான் இந்த முழுப் பெருமையும் கிடைத்தது.

பள்ளிக்கூடத்தில் வாத்தியார் அவனை ஒட்டைச்சிவிங்கி, கங்காரு என்றெல்லாம் சிரியயாகக் கூப்பிடுவார். வாத்தியாரே இப் படி என்றால் பிள்ளைகளைப்பற்றிக் கேட்க வேண்டுமா? நெட்டைப் பனைமரம் நிற்கு மாம் போலே போலே என்று பல்லவி அனு பல்லவியாகப் பாடித் தீர்த்தார்கள்.

ஒருநாள், வாத்தியார் கொடுத்த கணக்கைச் செய்துவராததால் பெஞ்சிமேல ஏறவேண்டிய நிர்ப்பந்தம் ராமுவுக்கு ஏற்பட்டது. வாத்தி யார்....இம்...சீக்கிரம் என்றார். பெஞ்சி மேல் ஏறி நின்றான் ராமு. உத்திரத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது அவன் தலை. நாங்களெல்லாம் 'கொல்' என்று சிரித்து விட்டோம். இப்படி அவன் பலமுறை அவமானப்பட்டிருக்கிறான்.

சாப்பாட்டில் அதிதீரன்—அல்ல,—பரம ரசிகன். அவனும் சோமுவும் சண்டை பிடிக்கும்போது சோமு இந்தக் கருத்தை வைத்துப் பலமாகத் தாக்கிப் பேசுவான். ராமுவைவிட ராமுவின் தகப்பனாரின் அறிவுத் திறமையைக் குத்தலாகப் பாராட்டுவான். அந்தக் கிண்டலை வெளிப்படுத்துவதில் எனக்கு ஆர்வமுண்டு. எந்தவிதத்தில் ராமு வைப் பார்க்கிலும் அவன தகப்பனார் புத்தி சாலியாவார் என்றொரு கேள்வி போடு வேன். பிறகு கேட்பானேன். சோமு அதைச் சுவைப்படுத்திச் சொல்லுவான்.

சாப்பாட்டில் இவன் இராமனாகப் போவதை முன்பே அறிந்து இவனுக்கு அந்த அழகான பெயரை வைத்தவர் புத்திசாலிகள் கூட்டத்திலே மகா புத்திசாலியல்லவா என்று சோமு சொல்லுவான்.

சாப்பாட்டு ராமன் என்றே சோமு சொல்லுவது பல நிகழ்ச்சிகளால் உண்மையாகிக் கொண்டே வந்தது. ராமு, கையில் புத்தகமும் பையில் பக்ஷணமுமாகவந்த நாட்கள் பல. தன் சகாக்களுக்கு அது தெரியக்கூடா தென்பதில், மிகவும ஜாக்கிரதையாய் இருப்பான். எலியூருக்குப் பயந்து புலியூரில் குடிபுகுந்த கதையாய் பையிலிருந்த பக்ஷணத்தை வாத்தியார் அன்று பார்த்துவிட்டார். டேய், உன்வயிறு....வயிறு அல்லது சுடுகாடா! என்று கேட்டார். தாங்க முடியாத வெட்கம் அவனைப் பிடுங்கித்தின்றது. பிள்ளைகளின் சிரிப்பு கட்டில் அடங்கவில்லை. இது எல்லாம் ராமுவின் பழங்கதை.

இப்பொழுது ராமு இருபத்தொரு வயது இளைஞன். மனைவியோடு குடித்தனம் செய்கிறான். அவன் வாழ்வில் எவ்வளவோ மாறுதலடைந்திருக்கிறான். பழைய அசட்டுத்தனம் எதுவுமில்லை. எப்படி இருக்கும்? இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அவை நிச்சயமாகப் புதிய உருவமடைந்திருக்கும்.

* * *

ஒரு நாள் பழைய நண்பன், பள்ளித் தோழன் ராமுவைப் பார்க்க என் உள்ளம் துடித்து நின்றது. அவனிருக்குமிடம் தேடிச் சென்றேன். ராமு என்று சொல்லி அவன் வீட்டுக் கதவைத் தட்டினேன். காதுகொடுத்துக்கேட்டேன். ராமு உள்ளேயிருந்து ஏதோ படிப்பதாய்த் தோன்றியது. பின்னும் உற்றுக் கேட்டேன். அவன் படிப்பது திருக்குறள் போலப் பட்டது. நண்பன் ராமு கதவைத் திறந்தான். நான் உள்ளே புகுந்தேன். பழைய நண்பனின் புதிய நலங்களையெல்லாம் விசாரித்தேன். அவன் பதில் சொல்லி முடித்தான்.

(55-ம் பக்கம் பார்க்க)

எல்லா கைத்தறி ஜவுளி களுக்கும் நம்பிக்கை யான இடம்

★

தி குமரன் டிரேடிங் கம்பெனி லிமிடெட்

★

தலைமை நிலையம் :
சிக்கல், தஞ்சை ஜில்லா

கிளைகள் :
(1) 26, ஏகாம்பரர் சந்நதி வீதி, பெரிய காஞ்சீபுரம்
(2) 89, லிங்கிசெட்டித் தெரு, சென்னை.

புதிய வெளியீடு வெளிவந்துவிட்டது!

அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ.
எழுதியது.

"சிறுகதைகள்"

விலை 1-0-0.

கைவசம் உள்ள புத்தகங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | ரோமாபுரி ராணிகள் | 2- 4-0 |
| 2. | கம்பரசம் | 1- 8-0 |
| 3. | குமரிக்கோட்டம் | 1- 0-0 |
| 4. | கற்பனைச்சித்திரம் | 1- 0-0 |
| 5. | விடுதலைப்போர் | 1- 0-0 |
| 6. | ஆரியமாயை | 1- 0-0 |
| 7. | வர்ணாஸ்ரமம் | 0-12-0 |
| 8. | மேதினம் | 0- 5-0 |

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

குறிப்பு : வியாபாரிகளுக்கு 20 சதம் கழிவு தரப்படும். தபால் செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் தபால் செலவு 0-4-0 அணா சேர்த்து மணியார்டர் அனுப்பவேண்டும்.

எங்கள் வாழ்த்து

இன்பம் பொங்க வேண்டும்
அது எங்கும் தங்க
வேண்டும்.



உடல் நலத்தோடு நோயின்றி மனைவி மக்களுடன் **பொங்கல் பெருநாளைக்** கொண்டாட மனமார வாழ்த்துகிறோம்.

உங்கள் நோய் எதுவாயிருந்தாலும் சரி, கவலை வேண்டாம். எங்களுக்கு எழுதுங்கள்.

தபால் மூலமாய் வைத்திய ஆலோசனை பெறவும் சிகிச்சை பெறவும் நம்பிக்கையான வைத்திய நிலையம்.

[தபால்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்]

G. ஜெயராம் வைத்தியசாலை
28, காசி விஸ்வநாதர் கீழவீதி,
கும்பகோணம்.

# பெண்களால் முடியுமா?

(தோழியர். குஞ்சிதம் குருசாமி, பி ஏ., எல். டி.)

இது கட்டுரையல்ல. அலைகள் போல் மோதிய சில எண்ணங்களின் தொகுப்பு. தொகுப்புக்கூட அல்ல, குப்பை. பூங்காவிற் குள் புகுந்து என் மனம் போன போக்கில் சில பூக்களைக் கொய்தேன். அவைகளை ஒரு கூடையில் கொட்டி உங்களிடம் தருகிறேன். அத்தனையும் வாசனைப் பூக்களல்ல. கண் ணுக்குமட்டும் இனிய கனகாம்பரம்போன்ற காட்டுப் பூக்கள் முதல், மூக்கிற்கு இனிய முல்லை, மல்லிகை, மகிழம்பூவரையில் பல வகைப் பூக்களைக் கொய்திருக்கிறேன். இவைகளிற் சில ஆண்களுக்குப் பிடிக்கா தவை.

பூ' என்றாலே மாம்பழத்தைக் கண்ட குழந்தைபோல ஆசைப்படும் பெண்களுக்கே பிடிக்காத பூக்கள்கூட சில உண்டு. கண்ட பூக்களைக் கொய்தேன் என்றாலும் ஊமத்தம் பூ, புளியம்பூ, வாழைப்பூ போன்றவைகள் இக்கூடையில் இல்லை. வாசனைப் பூக்களாக மட்டுமே இருந்தால் சரமாகத் தொடுத்துத் தந்திருப்பேன். கதம்பம் என்பதால் பெண் கள் விரும்புவர்; ஆண்களும் ஆசைப்படுவர். பலருக்குப் பிடிக்காத சில புதுவகைப் பூக்க ளும் இருக்கின்றன. ஆகையால் தொடுக்க வில்லை.

* * *

"ஆண்களோடு பெண்களும் சமம்—சம மாக இருக்கவேண்டும் என்கிறார்களே, எப் படி முடியும்? ஆண்கள் செய்யும் எல்லா அலுவல்களையும் பெண்கள் செய்ய முடி யுமா? இயற்கையே அவர்களை பலங் குறைந்த பாத்திரங்களாக அமைத்திருக் கிறதே!" என்பது, இந் நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் கேட்கப்படும் கேள்வி.

இயற்கை மனித சமுதாயத்தையேதான் "பலங்குறைந்த பாத்திரங்களாக" அமைத் திருக்கிறது. பெண்களைமட்டும் என்பது தவறு. மனிதருக்குப் பறக்கும் சக்தியை அளிக்க மறந்துபோயிற்று, இயற்கை. பற வையைப் பார்த்த மனிதன் ஏங்கினான். சும்மாயிருந்தானா? அதைவிட விரைவாகப் பறக்கத் தொடங்கிவிடவில்லையா? இயற்கை அமைப்பை வெல்வதுதான் மனிதனுக்கு ஏற் பட்டுள்ள தனி சக்தி. இயற்கையோடு இயைந்த வாழ்வு முனிவர்களுக்கும் சாதுக்க ளுக்கும்தான். எஸ்கிமோக்களையும் வேண்டு மானாலும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

"வாய்ப்பு"—அல்லது சந்தர்ப்பந்தான் முக்கியம். வெள்ளையர் வாய்ப்பு அளித் திருந்தால் இந்தியர் அவர்களை மிஞ்சியிருப் பார்கள், எல்லாத் துறைகளிலும். பார்ப்பனர் தடுக்காதிருந்தால், திராவிடர்கள் அவர்களை வென்றிருப்பார்கள், எல்லாத் துறைகளிலும். ஆண்கள் வாய்ப்பு அளித்திருந்தால்—அல்ல, அல்ல—தடுக்காதிருந்தால், பெண்கள் முன் னணியில் இருப்பார்கள். 'சர்க்கஸ்' பெண்

---

(53-ம் பக்கம் தொடர்ச்சி)

ராமு! நான் வரும்போது நீ ஏதோ படித் தாயே, அது என்ன?" என்று கேட்டேன். அதுவா! நீ அவசியம் கேட்கவேண்டும் என்றான். ஆகலாக, என்ன சொல்லப் போகிறான் என்று எதிர்பார்த்தேன்.

ஆரம்பித்தான்:

"யாம் ருசியாக் கண்டவற்றுள்..." என்று தொடங்கினான். என்ன காவியமா? ஓவியமா? என்றேன்நான். பொறப்பா....பொறுஎன்றான் நண்பன். 'யாம் ருசியாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் ஆமவடை யல்ல பிற' என்று அனுபவித்துச் சொன்னான் ராமு.

ராமு நீ நல்ல ஆமவடை ரசிகண்டா என்று சிரித்தேன்.

கருப்பன் பழைய கருப்பனே என்ற பழமொழி மறந்தே போய்விட்டது. ராமு பழைய ராமுவே என்று சொல்லிக் கொண்டே வீடுவந்தேன்.

அந்த நெடில் உருவத்தை நினைக்கின்ற போது அதன் அருகே அந்த அகன்ற ஆம வடையும் நினைவோடு வந்து பின்னுகிறது.

---

களைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் ஆண்களைப் பார்த்ததில்லையா?

ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சியில் பெண்கள் என்ன செய்தார்கள் என்பது எத்தனைபேருக்குத் தெரியும்? ஒற்றர்களாயிருந்தார்கள். வெடிகுண்டு வீசினார்கள். ஆண்களோடு கூடி ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார்கள். சிறை சென்றார்கள். சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். தூககு மேடையிலும் ஏறினார்கள். இரண்டாவது அலெக்ஸாண்டரைக் கொன்றது யார் தெரியுமா? **சோவ்யா பெரோவ்ஸ்காயா** என்ற பெண்தான்.

ரஷ்யாவில் பெண்கள் செய்யாத, அவர்களுக்குத் தெரியாத, வேலைகள் ஒன்றுமே இல்லை. உலக வரலாற்றிலேயே முதன் முதல் வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்கப் பட்ட பெண் ரஷ்யப்பெண்தான்.

'வாய்ப்பு' இருந்தால் ஆச்சாரியார் கவர்னராக இருப்பது போலவே சரோஜினிதேவியும் கவர்னராக இருக்கலாம் என்பதை இந்த நாட்டிலேயே காண்கிறோமே!

பெண்களால் எதுவும் முடியும், வாய்ப்பு மட்டுமிருந்தால்! **மாடேம் க்யூரி**யைப் போல் ரேடியம் கண்டு பிடிப்பார்கள்; ஜோன் ஆப் ஆர்க் போல் போர் முனைக்குச் செல்வார்கள்; ரஷ்யப் பெண்களைப்போல் புரட்சியும் செய்வார்கள்.

* * *

இந்த நாட்டுப் பெண்களை எவ்வளவு தான் குறைவாகக் கூறினாலும் எத்தனையோ வகைகளில் ஆண்களைவிட முற்போக்கடைந்திருக்கின்றனர். இதோ, ஓர் எடுத்துக் காட்டு.

லட்சுமி செட்டியார், கல்யாணி முதலியார், பங்கஜம்பிள்ளை, சிவகாமி நாய்க்கர், பார்வதி அய்யர், சரஸ்வதி ராவ், கமலா நாய்க்கர், வசந்தா அய்யங்கார், அலமேலு நாயுடு, நாகம்மாள் நாடார், வனஜாசர்மா, வள்ளியம்மை உடையார்!—கேள்விப் பட்டிருப்பீர்களா? சாதிப்பட்டத்தை உதறியவர்களல்லவா பெண்கள்? ஆண்கள் பின்பற்ற வேண்டிய, அறிவு பெற வேண்டிய பல விஷயங்களில் இதுவும் ஒன்று.

பிராமணப் பெண்களுக்குப் பூணூல் உண்டா? செட்டியார், வாணியர் ஆகிய பெண்களுக்குத்தான் உண்டா? இந்தக் கூட்டங்களின் ஆண்கள் மட்டும் ஏன் அணிய வேண்டும்?

* * *

'பெண்களை அடிமைப் படுத்தி வைத்தது ஆண் இனம் தான்,' என்கிறார்களே, சரியா? சிந்தனைக்கு வேலை கொடுங்கள். பெண் உழைப்பாளி இனம்; ஆண் முதலாளி இனம், பெண்ணுக்கு உரிமை தந்தால் ஆண் சர்வாதி கார வாழ்வு வாழ முடியாது. அதைக் கருதித் தான் மேல்நாட்டு அப்பெண்களுக்குக் குதி கால்பக்கம் உயர்ந்த பூட்ஸ் கொடுக்கப் பட்டது. சீனப் பெண்கள் பிறந்தவுடன் இருப்புபூட்ஸ் அளிக்கப் பட்டது. முஸ்லிம் பெண்களுக் கும் அவர்களைப் பார்த்துப் பழசய சில வட நாட்டுப் பெண்களுக்கும் முகமூடி தரப்பட் டது. திராவிடப் பெண்களுக்கும் 18 முழப் புடவையும் பலவித நகைகளும் அழகு என கூறப்பட்டது. காட்டு மிராண்டிப் பெண் ணுக்குப் பயங்கரமான அணிகள் தரப்பட் டன. அன்று கிடக்கட்டும். இன்று தா என்ன வாழ்கிறது?

* * *

கிரிக்கெட், ஹாக்கி, புட்பால், சடுகு கிட்டிப்புள்—இம்மாதிரி விளையாட்டுகளை ந பெண்களும் ஏன் விளையாடக் கூடாது நாடகத்திற்கும், சினிமா நடிப்புக்கும் பாட்டு கும் சமையலுக்கும் தானா தகுதி? இவை களைச் செய்யக் கூடிய ஆண்கள் இல்லையா மலையாளத்தில் சமையல் வேலைக்குப் பெ கள் கிடைப்பதில்லை; ஆண்கள் மட்டு ஏராளமாகக் கிடைக்கிறார்களே, ஏன்? சமை யலுக்காகத்தான் பெண் இனம் இருக்கிற என்பது இதன் மூலம் பொய்யாகி வி வில்லையா? பெண் இனத்திற்குப் பெரிய மு டுக் கட்டை ஆண் இனம் கூட அல்ல. அ பங்கரைதான். சமையல், சமையல், சமை யல்! 24 மணி நேரமும் இதே வேலைதா வண்டியிழுத்த மாடுகளை விடுதலை செ மோட்டார் வந்தது; ரயில் வந்தது. ஆ அடுப்பங் கரைக்குள்ளேயே அடைபட் கிடக்கும் பெண் இனத்தை விடுவிக்க மு வில்லையே! சமையல் முறை, மாறவேண் அவசியம் மாறியே தீரவேண்டும்.

* * *

"பெண்கள் பிள்ளைப்பேறு காரண இயற்கையில் வலுவிழந்தவர்கள்," என்கி கள், சிலர்

அமெரிக்காவில் 10,000 டெஸ்ட் ட குழந்தைகள் இருக்கின்றனவாமே!

## பாசறை அழைக்கிறது!

திராவிட இளைஞர்க்கான போர்க் கருவிகள் ★ மூன்று சிறந்த வெளியீடுகள்

மா. இளஞ்செழியன் B.A. (HONS.) தீட்டியவை!

★

### திராவிடஸ்தான் வேண்டாமா?

இன்பத் திராவிடம் தனி நாடு என்கிறோம் நாம். அல்ல என்கிறார் கம்யுனிஸ்ட். அவர் கருத்துரையும் அதற்கு இளஞ்செழியன் தரும் மறுப்புரையும் கொண்ட நூல்.

விலை ரூ. 0-8-0
தபாலில் 0-9-0

### ஈரோட்டுப் பாதை

அலைகடலென எதிர்ப்பு எழுந்தது. ஆனால் அதையும் அடக்கிக்கொண்டு சுயமரியாதை இயக்கம் வளர்ந்தது. வளர்ந்த விதத்தைச் சுவைபடக் கூறுவது இந் நூல்.

விலை ரூ. 0-8-0
தபாலில் 0-9-0

### தமிழன் தொடுத்த போர்!

தாளமுத்து நடராசன் என்னும் இரு மரணப் படுக்கைகளையும் தாண்டிக் கொண்டு வெற்றி பெற்றான் தமிழன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில். அதன் முழு வரலாறு இது. பெரியார் ஈ. வெ. ரா., அறிஞர் அண்ணாதுரை ஆகியோரின் முன்னுரையுடன் கூடியது.

விலை ரூ. 1-12-0
தபாலில் 2-0-0

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு, :: சென்னை 1.

## போர்வாள்

[திராவிடர் வார வெளியீடு]

"மூடக் கொள்கைகளை வெட்டி வீழ்த்தும் வெகு கூர்மையான ஆயுதம் தான் நமது போர்வாள். போர்வாளின் சில வீச்சுகளை நான் பார்த்தேன். ஆணித்தரமான வெட்டுகள். அச்சத்தை அகற்றும் தலையங்கங்கள். சீர்திருத்தக் கண்ணாடி போன்ற சிறந்த கதைகள்; கட்டுரைகள்; விருவிருப்பான எழுத்துகள். சபாஷ் சபாஷ் என்று பல முறை சொல்லுகிறேன் போர்வாளை வாழ்த்துகிறேன்."

—நகைச்சுவை அரசர்
**N. S. கிருஷ்ணன்.**

**கட்டணம்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்படி | 0-1-6 | 0-2-0 |
| ஆண்டுத் தொகை | 5-0-0 | 6-8-0 |

**போர்வாள்**

**அலுவலகம்**

147, பவழக்காரத் தெரு,
சென்னை.

# அன்பன்

## என்னும் செய்தித்தாள் [நாள் இதழ்]

## சென்னை அன்பன் லிமிடெட் கம்பெனி நடத்துவது.

**முதல் ரூ. 5,00,000. பங்கு ஒன்று ரூ. 100. பங்குகள் 5,000.**

செய்தி வெளியிடும் முறையில் 'அன்பன்' என்னும் நாள் தாளில் சில சிறப்பியல்கள் காணப்படும். அன்பன் தமிழ்நாட்டுத் தலைவர்களைப் பற்றிய செய்திகளையும், தமிழர் இயக்கச் செய்திகளையும், முதன்மையான இடத்தில் விரித்துரைக்கும். தமிழ்நாடு கலைத்துறையில் முன்னேற்றமடைவதற்கு வேண்டுவன செய்யும். இனிய, எளிய செந்தமிழ் நடையில் செய்தித்தாள் நடத்தப் படும். தொழில் துறை முன்னேற்றத்தையும், தொழிலாளர் நலனையும் கருதி, தொண்டு செய்யும்.

### டைரக்டர்கள் :

(1) ரெவரண்டு அருள்தங்கையா, சென்னை.

(2) ஹாஜி எம். அப்துல் ரஹ்மான் சாஹிப், வணிகர், சென்னை.

(3) திரு. எஸ். டி. இராமலிங்க முதலியார், வணிகர், சென்னை.

(4) திரு. பி. ஏ. தங்கசாமி, பி. ஏ., எம். எல்., வழக்கறிஞர், பாளையங்கோட்டை.

(5) டாக்டர் ஆர். வேதபோதகம், நாசரேத், திருநெல்வேலி.

(6) திரு. கச்சி. மூ. நடேசமுதலியார், வணிகர், நிலக்கிழார், காஞ்சிபுரம்.

(7) திரு. பி. சி. மாணிக்கவாசகம் [காஞ்சி மணிமொழியார்] அச்சகத் தலைவர், போர்வாள் ஆசிரியர், சென்னை.

(8) திரு. பி. இராமலிங்க நாடார், வணிகர், சென்னை.

(9) பேராசிரியர் ச. தா. சற்குணர் பி.ஏ ; தமிழ்ப் பேராசிரியர், தாம்பரம்.

(10) ஜனாப். ஏ. எம். அல்லாப்பிச்சை சாஹிப் பி. ஏ., பி. எல் ; வழக்கறிஞர், சென்னை.

### கம்பெனி நிர்வாகம் :

டைரக்டர்கள் பொறுப்பில் நிர்வாகம். ரெவரெண்டு அருள் தங்கையாவை மானேஜிங் டைரக்டராகக் கொண்டு நடத்தப்பெறும்.

**பாங்க் :** இந்தியன் பாங்க், லிமிடெட்.

பங்குக்குரிய விண்ணப்பப் பாரங்கள் வேண்டுவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

அன்பன் லிமிடெட்,

59, சாமி நாயக்கன் தெரு,

சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan, B.A. Hons. Regd: No. M 4912.

அகிலம்புகழும்

# ஸ்ரீ அபிராமி

## நெ. 1 பட்டணம் பொடி

காரம், மணம், குணம் நிறைந்தது!



...சென்ற...
...

...கம்பெனியின்
புரோப்ரைட்டர்

...முதலியார்






K. துரைக்கண்ணு முதலியார்
புரோப்ரைட்டர்


அபிராமி பட்டணம் பொடி
தொழிற்சாலை

ஸ்ரீ அம்பாள் கம்பெனியின்
பழைய ...

### ஸ்ரீ அபிராமி பட்டணம் பொடி தொழிற்சாலை,

68, நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.

---




நாடிப்புகழ் விருந்தளிக்க

## கலைக் கூடம்


காத்திருக்கிறது

எல்லா வகையான நாடிநூல்களுக்கும்

...

...

...தெரு,




PRESS, MADRAS. PAPER SUPPLIED BY PARTY.